www.tamilarangam.net

THAYAGAM

17 . 6 . 94

75¢

உண்மை:5
தொடல்:49+50

# தாயகம்

## ஜனாதிபதி தேர்தலை புலிகள் தடுப்பார்கள்

பத்திரிகையாளரிடம் பாலசிங்கம் தகவல்

## தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய சமஷ்டிக்கும் தயார்

இனப்பிரச்சனையை தீர்க்க தொண்டமானும் அஷ்ரப்பும் புதிய யோசனை

தொண்டமான் யாழ்ப்பாணம் செல்லக்கூடும்

மேல்மாகாண ஆளுனர் பதவி நீக்கம்

உணவகத்தில் ஐவரைச் சுட்ட தமிழருக்கு 10 வருடச் சிறை

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®

Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
Tel:(416) 299-4202

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# ஜனாதிபதி தேர்தலை புலிகள் தடுப்பார்கள்

நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை புலிகள் நிறுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசியலமைப்பின்படி நாடெங்கும் தேர்தல் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும். ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் தேர்தல் நடத்த முடியாது. 'எங்களைப் பொறுத்தவரையில் எமது மக்களுக்கு திருப்தி தரும் வகையில் அரசியல் தீர்வு காணப்படும்வரை எந்த வித தேர்தலும் வடக்கு கிழக்கில் வைப்பதற்கு எதிரானவர்கள்' என்று பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் இந்திய இராணுவ பாதுகாப்புடன் வடக்கில் நடத்தப்பட்டது. அப்போது புலிகள் தேர்தலைக் குழப்பவில்லை. இருப்பினும் தேர்தலை நடத்த அரசு புலிகளுடன் சமரசத்திற்கு வரமுடியும். புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் கருத்துப்படி 'ஒரு சாத்தியமான நடைமுறை ஒன்றை ஏற்படுத்த முடியும், ஆனாலும் மக்களின் அபிலாசைகளுக்கு துரோகம் புரிகின்ற ஒன்றை அல்ல' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கே சென்ற பத்திரிகையாளரைச் சந்தித்த பாலசிங்கம் அரசாங்கம் ஒன்றில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம், அல்லது குடாநாட்டை பிடிக்க சண்டையிடலாம் என்று தெரிவித்தார். சமாதானத்திற்காக நாம் பலமுறை எமது விருப்பத்தை தெரிவித்த போதும் அரசிடமிருந்து எந்த விதமான அணுகுமுறைகளும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். எமது மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடிய எந்த விதமான தீர்வையும் நாம் கருத்துக்கு எடுக்க தயார், அது சமஷ்டியாக இருந்தாலென்ன, எதுவாக இருந்தாலென்ன.. என்றும் அவர் தெரிவித்தார்

தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் பிரபாகரனே கலந்து கொள்ள வேண்டும் என்று கொழும்பு வற்புறுத்தி வருகிறது. சமீப காலங்களில் குடாநாட்டிற்கு மருந்துகளும் உணவுகளும் அதிகளவில் அனுப்பப்படுவது தேர்தல் தந்திரம் என்று கருதப்படுகிறது. உணவு, எரிபொருள் விலை குறைந்துள்ளது. மக்கள் வாழும் பகுதியில் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. சமீபத்தில் முகாம் ஒன்றிலிருந்து வீசப்பட்ட குண்டு மீன் சந்தையில் விழுந்து இரண்டு மீனவரைக் கொன்றதுடன் பதினேழு பேரைக் காயப்படுத்தியது. காயமடைந்தோரில் இருவர் இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் ஆவர். இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் குருநகர் பகுதியில் விழுந்த ஷெல் ஒரு தாயையும் இரண்டு குழந்தைகளையும் காயப்படுத்தியது.

எமது அரசியல் அமைப்பின் மூலம் சிவில் நிர்வாகத்தை கையேற்கவுள்ளோம், எவ்வளவு காலம் இந்த சண்டை நீடிக்கிறதோ அதை விட விரைவாக நாம் எம்மை ஆள்வோம் என்று பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

அரச அதிகாரிகள் கருத்து தெரிவிக்க மறுக்கிறார்கள். நீங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் வாயை மூடுங்கள் என்று ஒருவர் தெரிவித்தார். ஆனால் தனியாகப் பேசும் போது தாங்கள் பாதை செப்பனிடவோ, பாடப் புத்தகத்தில் மாற்றம் செய்யவோ புலிகளின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது என்றும் கொழும்பிலிருந்து வரும் உணவில் பத்து வீதத்தை புலிகள் பறிக்கிறார்கள் என்றும் அவர்கள் பத்திரிகையாளருக்கு தெரிவித்தனர்.

# மேல்மாகாண ஆளுநர் ஜனாதிபதியால் பதவிநீக்கம்

மேல்மாகாண ஆளுநரான சர்வானந்தா ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு சுவாமிநாதன் என்ற சட்டத்தரணி நியமிக்கப்பட்டுள்ளார். மேல்மாகாண சபையின் அமைச்சர் ஒருவரை முதல்வர் சந்திரிகாவின் ஆலோசனையின் பேரில் முன்னாள் பிரதம நீதியரசரான சர்வானந்தா நீக்கியதால் எழுந்த நெருக்கடியின் விளைவே இந்த பதவி நீக்கம் ஆகும். மேல் மாகாண சபை ஆட்சியில் சு.கட்சியுடன் பங்கு வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த சுகாதார அமைச்சர் பிரேமரத்ன குணசேகர ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தனது ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார் என்று குற்றம் சாட்டி சந்திரிகா ஆளுநரைக் கேட்டதற்கிணங்க பதவி நீக்கப்பட்டிருந்தார்.

குணசேகர காமினி திசநாயக்கவின் ஆதரவாளர். மேல்மாகாண சபையில் உள்ள மற்ற ஜ.ஐ.தே.மு உறுப்பினர்கள் தாங்கள் சந்திரிகாவை தொடர்ந்தும் ஆதரிப்பதாக கூறியுள்ளனர். தனது கட்சியைச் சேர்ந்தவர் நீக்கப்பட்டதால் வடமேல் மாகாணத்தில் தனது மந்திரிசபையில் உள்ள சு.க உறுப்பினர்களை தான் பழிவாங்கப் போவதில்லை என்று மாகாண முதல்வரும் ஜ.ஐ.தே.மு தலைவருமான ஜி.எம்.பிரேமச்சந்திர கூறியுள்ளார். சந்திரிகாவின் நடவடிக்கை சர்வாதிகாரத் தனமானது என்று கூறிய அவர் இது குறித்து விளக்கம் கேட்டுள்ளதாகவும் இதைக் கண்டித்து தமது மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் கூறியதுடன் தமது கட்சியைச் சேர்ந்த ஒன்பது பேர் தமது கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க தயங்குகிறார்கள் என்றும் தெரிவித்தார். வடமேல் மாகாணத்தில் சுதந்திரக்கட்சியுடன் இவரது கட்சி கூட்டரசாங்கம் அமைத்துள்ளது. தம்மை ஐ.தே.கட்சி இணைந்து கூட்டரசாங்கம் அமைக்கும்படி கேட்டுள்ளதாக பிரேமச்சந்திர தெரிவித்தார்.

# தொண்டமானின் புதிய யோசனை

தொண்டமானும் அஷ்ரப்பும் வடக்கு கிழக்கு பிரச்சனை சம்பந்தமாக புதிய யோசனை ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருக்கின்றனர். இதன்படி சிங்களவர்கள் வடக்கு கிழக்கில் வசிக்கும் பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகள் இணைக்கப்பட்டு, அதில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் உபசபையாக இயங்கும். இந்த திட்டம் குறித்து தாம் தமிழ் கட்சிகளுடன் பேசியதாகவும் அவர்கள் இது குறித்து அக்கறை தெரிவிக்காததால் தானும் அஷ்ரப்பும் மாத்திரமே இத்திட்டத்தில் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியதாகவும் ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்தால், விரைவில் பிரபாகரனைச் சந்திக்கவிருப்பதாகவும் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

# சிறிமாவுக்கு சிகிச்சை

மருத்துவ சிகிச்சையை முடித்துக் கொண்டு சிறிமாவோ இம்மாத இறுதியில் நாடு திரும்பவிருக்கிறார். அவரது உடல் நலத்தைக் கொண்டே அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பது முடிவு செய்யப்படும் என்று செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார். இவரது காலில் நோவு காரணமாக வேதனைப்படுவதாகவும் கடந்த காலங்களில் இவருக்கு இதற்காக சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் சிங்கப்பூரில் இவரது கால் விரல்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் சந்திரிகா தெரிவித்திருக்கிறார். கடந்த சித்திரை மாதம் இவருக்கு குடலிறக்க நோய்க்காக சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இவர் இரண்டு வாரங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு நாடு திரும்புவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கில் தாக்குதல்கள்

சமீபத்தில் நடைபெற்ற தாக்குதல்களில் பல இராணுவத்தினரும் இரண்டு புலிகளும் கொல்லப்பட்டதுடன் பத்து இராணுவத்தினர் காயமடைந்தும் உள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த பிரிகேடியர் கெமுனு குலதுங்க பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்த தகவல்களின்படி குடாநாட்டில் புலிகள் இராணுவ வாகனங்களைத் தாக்கியபோதே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இடைக்காட்டில் நடந்த தாக்குதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன் இருவர் காயமடைந்தனர். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இராணுவத்தினர் ரோந்து சென்றபோது நடந்த தாக்குதலில் பின்னர் விமானங்கள், எறிகணைகளின் உதவியுடன் புலிகளை தாக்கியதாகவும் அவர் தெரிவித்தார். காரைநகரில் நீர்தாங்கி வாகனத்தின் கீழ் குண்டு வெடித்ததில் ஒரு கடற்படையினர் கொல்லப் பட்டிருந்தார். பின்னர் காரைநகரில் இன்னொரு தாக்குதலில் இரண்டு இராணுவ வாகனங்கள் கண்ணி வெடிக்கு இலக்காகியதில் நாலு கடற்படையினர் கொல்லப்பட்டு ஆறு பேர் காயமடைந்தனர்.

# தமிழருக்கு பத்து வருட சிறைவாசம்

ஸ்காபரோவில் உணவகம் ஒன்றில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐந்து பேரைக் காயப்படுத்திய தமிழ் இளைஞர் ஒருவருக்கு பத்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. தாக்குதல், சட்டவிரோதமாக சுடுகலன் பாவித்தது உட்பட ஐந்து குற்றச்சாட்டுக்களுக்கும் இவர் தாம் குற்றவாளி என்று ஒத்துக் கொண்டார். முதலில் கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் விசாரிக்கப்பட்ட போதும் அரச தரப்பினர் இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டால் குறைந்த குற்றங்களை சுமத்த சம்மதித்தனர்.

தான் உளப்பூர்வமாக மன்னிப்பு கேட்பதாகவும் ஒரு நாளைக்கு நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என நம்புகிறேன் என்றும் இவர் நீதிமன்றத்தில் தன்னால் காயப்படுத்தப் பட்டவர்களுக்கு தெரிவித்தார். ஆனால் 'இவர் மன்னிப்புக் கேட்கலாம், ஆனால் துப்பாக்கி எடுத்து அன்னியர்களைச் சுடுபவர்கள் கோழைகள்' என்று இவரால் கழுத்தில் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட லலித் டி சில்வா தெரிவித்தார். இந்த சம்பவத்தில் தப்பிய இவரது மனைவி கூறுகையில் இவ்வாறான குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

கைத்துப்பாக்கிகளை காட்டி மக்களை குறி பார்ப்பதற்காக பயன்படுத்துவது அனுமதிக்கப்பட மாட்டாது என்று நீதிபதி தெரிவித்தார்.

# மின்சக்தி இயந்திரம் வாங்குவதில் ஊழல்

டீசல் மின்சக்தி நிலையம் ஒன்று அமைப்பதற்கு 46 மில்லியன் டொலர் கடனை இலங்கைக்கு வழங்க இருந்த ஆசிய அபிவிருத்தி வங்கி அந்தக் கடனை ரத்துச் செய்திருக்கிறது. ஜேர்மானிய மான் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட இருந்த 40 மெகாவாட் இயந்திரத்தை விட்டு பிரெஞ்சு நிறுவனம் ஒன்றிடமிருந்து 60 மெகாவாட் சக்தி இயந்திரத்தை வாங்க செய்வதற்காக சில சக்திகள் முயற்சிகள் செய்ததாக கூறி ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த கடனை ரத்துச் செய்தது. தரகுப் பணம் பெற்று ஊழல் செய்வதற்காக சிலர் இந்த முயற்சியில் ஈடுபட்டதாகவும் பிரெஞ்சு நிறுவனம் முன்பு வழங்கிய சக்தி இயந்திரம் முழுமையாக செயற்பட முடியாதிருப்பதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

# இனப்பிரச்சனைக்கான தீர்வு தேர்தல் விஞ்ஞாபனத்தில்

வடக்கு கிழக்கு பிரச்சனைக்கான தீர்வுத் திட்டம் தங்களது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படும் என்று சிறிமாவோ தெரிவித்திருக்கிறார். இந்தப் பிரச்சனை தொடர்பாக ஆராய்வதற்காக தமது கட்சி விசேட குழு ஒன்றை தெரிவு செய்துள்ளதாகவும் தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று தாம் நம்புவதாக சிறிமாவோ தெரிவித்திருக்கிறார்.

அரசியலமைப்பில் நாம் கொண்டு வரவுள்ள மாற்றம் இந்த பிரச்சனைக்கு தீர்வு ஒன்றைக் கொண்டு வரும், இதன் மூலம் மாகாண சபைகளுக்கான தேவை இருக்காது. வடக்கு கிழக்கு பிரச்சனைகளுக்கு தீர்வு காண மாகாண சபைகள் அமைக்கப்பட்டன, தறபோது அந்த அமைப்புகள் இல்லை என்று சிறிமாவோ மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் தோல்வி பற்றி வை.கோ,மு.க

சமீபத்தில் தமிழகத்தில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் வை. கோபாலசாமியின் புதிய கட்சி தோல்வி அடைந்துள்ளது. பெருந்துறையில் அ.தி.மு.க வேட்பாளருக்கு அடுத்த இடத்தை இவரது கட்சி பிடித்திருந்தது. இருந்தாலும் அ.தி.முக வேட்பாளருக்கும் இவரது வேட்பாளருக்கும் முப்பதாயிரம் வோட்டுகள் வித்தியாசம் இருந்தது. அத்துடன் இப்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியே தி.மு.க கூட்டணியில் போட்டியிட்டது. மயிலாப்பூரில் நான்காவது இடத்தில் கட்டுப்பணத்தை இவரது கட்சி இழந்தது. தனது தோல்விக்கு காரணம் கள்ள வோட்டுக்களே என்றும் தமது கட்சி இப்போது தான் ஆரம்பிக்கப்பட்டது என்றும் வை.கோ கூறியிருக்கிறார்.

கடந்த தேர்தலில் புலிகளுடனான தனது உறவை மறைப்பதற்காக தனது கட்சி சார்பில் போட்டியிட்ட திரையுலகப் பிரமுகரான கலைப்புலி தாணுவின் போஸ்டர்களில் கலைப்புலி என்ற வாசகத்தை மறைத்தே வை.கோ பிரசாரம் செய்து வந்தார்.

மறுபுறத்தில் கருணாநிதி தங்களது வலு கூடியிருப்பதாகவும் தேர்தல் விதிகளை அரசு மீறியதாகவும் குற்றம் சாட்டியிருக்கிறார்.

# ரொனி, ஜயவிக்கிரம பாராளுமன்றத்தில்..

நீண்ட முயற்சிகளின் பின்னர் ஐ.தே. கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்து மற்றவர்களுக்கு வழி விட்டுள்ளனர். ஏ.டி.சிறிசேன, அலெக் றொபேட்சன் ஆகிய இரண்டு பேரும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ததை அடுத்து தற்போது றொனி டி மெல்லும் காமினி ஜயவிக்கிரம பெரேராவும் அவர்களின் இடங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் முன்பு கட்சி தாவிய காமினி திசநாயக்கவுக்கும் மந்திரி பதவிகள் கிடைப்பதற்காக விரைவில் மந்திரி சபையில் மாற்றங்கள் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

**சென்ற வாரம் முன்னறிவித்தல் எதுவுமின்றி தாயகம் வெளிவராததால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகிறோம். தாயகம் மீதான தங்கள் அனைவரதும் கரிசனைக்கு நாம் கடப்பாடுடையோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்க நோர்வே முயற்சி

இலங்கைப் பிரச்சனையைத் தீர்ப்பதில் நோர்வே ஆர்வம் காட்டி வருகிறது. ஆனாலும் அதற்கு நோர்வேயில் சிறிதளவில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. சமீபத்தில் பாலஸ்தீனிய, இஸ்ரேலிய சமாதான முயற்சிகளில் நோர்வே பெரும் பங்கு வகித்திருந்தது. ஜூன் மாதத்தில் கௌதமாலாவில் அரசுக்கும் கெரில்லாக்களுக்கும் இடையிலான மோதலில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மாநாடு ஒஸ்லோவில் நடைபெறுகிறது. இலங்கை, சூடான், யூகோஸ்லாவியா போன்ற இடங்களிலும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதில் நோர்வே ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால் நோர்வேயிற்கு பொருளாதார ரீதியில் பயன் தராத தூர நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே பெருமளவு வளங்களை விரயமாக்குகிறது என்ற கருத்து நோர்வேயில் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

சுவீடன் முன்பு செய்து வந்த சமாதான முயற்சிகளை நோர்வே செய்வதாக நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். தங்களது சமாதான முயற்சிகள் குறைந்த செலவில் எடுக்கப்படும் திரைப்படம் போன்றது என்றும் மூன்று நான்கு பேரும் விமான டிக்கட்டுக்களுமே செல்வாகின்றன என்றும் அமெரிக்கா ஐந்து கோடி டொலர்களுக்கு மேல் செலவிட்டும் எந்த பயனும் காணவில்லை என்றும் ஐ.நா உதவிச் செயலாளரான ரெறிஜ் ரெட் லார்சன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை குறித்தும் நோர்வே மத்தியஸ்தம் வகிக்கக் கூடும் என்ற முன்பு ஊகங்கள் நிலவிய போதும் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறான பேச்சுக்கள் எதுவும் இல்லை. முன்பு இஸ்ரேல், பலஸ்தீன சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு பொறுப்பாக இருந்த நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சமீபத்தில் தான் காலமாகியிருந்தார்.

# வடக்கில் தாக்குதல் அச்சம்

## புலிகள் நிலைகளைப் பலப்படுத்துகிறார்கள்

வடக்கில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தில் புலிகள் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தி வருவதாக சீன செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள இடங்களிலேயே அதிகமான நிலைகள் பலப்படுத்தப்படுவதாகவும் பல இடங்களில் கண்ணிகள் புதைக்கப்பட்டு, பங்கர்கள் அமைக்கப்படுவதாகவும் கரையோரங்களில் இராணுவம் வந்திறங்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் அந்தப் பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இராணுவத்தினர் தாக்குவதற்கு முன்பாகவே தீவுப் பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் மீது தாக்குதல்களை புலிகள் நடத்தலாம் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# பங்களாதேஷில் பெண் எழுத்தாளர் தலைமறைவு

பங்களாதேஷின் பெண்ணிலைவாத எழுத்தாளரான நஸ்ரின் தற்போது பொலிசாரால் தேடப்பட்டு வருகிறார். தான் மறைந்து வாழப் போவதாகவும் சட்ட உதவியை நாடப் போவதில்லை என்றும் நஸ்ரின் முடிவு செய்துள்ளார். கல்கத்தாவைச் சேர்ந்த ஸ்டேட்மென் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குரான் மீளவும் பரிசீலிக்கப்பட்டு மாற்றத்துக்குள்ளாக்கப்பட வேண்டும் என்று கூறியதனால் மததீவிரவாதிகள் ஆத்திரமுற்று இவரைக் கைது செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். பங்களாதேஷ் ரைம்ஸ் இந்த பேட்டியை மறுபிரசுரம் செய்ததை அடுத்து எழுந்த இந்த கோரிக்கையினால் இவரைக் கைது செய்யும்படி பங்களாதேஷ் அரசு உத்தரவிட்டது. இதற்குள் இவர் தலைமறைவாகி விட்டார்.

தான் குரானை மாற்றும்படி கேட்கவில்லை என்றும் பத்திரிகை நிருபர் விளங்கிக் கொள்ளாமல் இஸ்லாமியச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற கருத்தை குரானை மாற்ற வேண்டும் என்று பிரசுரித்ததாகவும் ஆண்கள் பெண்களுக்கு சமத்துவம் வேண்டும் என்பதற்காகவே தான் இஸ்லாமியச் சட்டத்தை மாற்றும்படி கேட்டதாகவும் இவர் பாராளுமன்றத்திற்கு, கடிதம் எழுதியிருக்கிறார்.

இவரைக் கொல்வதற்கு ஒரு லட்சம் டாக்கா சன்மானம் தருவதாக இஸ்லாமிய அமைப்பு அறிவித்திருக்கிறது. குல்னா நகரில் இவருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரி ஊர்வலம் நடத்தப்பட்டது. மதநிந்தனைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இன்னொரு குழு கேட்டுள்ளது.

இவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாகவும் ராஜதந்திரிகளிடம் அடைக்கலம் பெற்றுள்ளதாகவும் வதந்திகள் உலாவுகின்றன.

# சேஷனின் அதிகாரத்தைக் குறைக்கும் முயற்சி தோல்வி

தேர்தல் ஆணையாளர் சேஷனின் அதிகாரங்களை மட்டுப்படுத்த அரசியல்வாதிகள் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதற்கான அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்கவில்லை. நரசிம்மராவின் அரசு சேஷனின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, தேர்தல் ஆணைக்குழுவில் மேலும் இருவருக்கு சம அதிகாரங்களை கொடுக்க முயன்றது. இந்த முயற்சிக்கு பாரதிய ஜனதா கடுமையான எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் தேர்தல்களில் கட் அவுட்கள் போன்றன சேஷனால் தடை செய்யப்பட்டன. நிதி அமைச்சர் மன்மோகன் சிங் தவறான விலாசத்தை கொடுத்து தேர்தலில் போட்டியிட்டதாக சேஷன் குற்றம் சாட்டியிருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சங்கமம் 94

இயல்-இசை- நாடகம்
பலசுவை மேடை நிகழ்ச்சிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் இதுவரையில் கண்டிராத, கேட்டிராத முற்றிலும் மாறுபட்ட புதிய படைப்பாக..

# சங்கமம் 94

18 ஜுன் சனிக்கிழமை
மாலை ஆறு மணிக்கு
Glen Forest Secondary School
3575 Fildgate Dr, Mississauga

25 ஜுன் சனிக்கிழமை
மாலை 6 மணிக்கு
Cedarbrae Auditorium
550 Markham Rd, Scarborough

புதன்கிழமை தோறும் இரவு 9 மணிக்கு
1320 AM அலைவரிசையில்..

## சங்கமம்

தொடர்புகளுக்கு
752 7699



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Neelam SILK

# நீலம் சில்க் ஸ்தாபனம்

மொன்றியல் வாழ் தமிழ் மக்களின் வேண்டுகோளிற்கிணங்க
மொன்றியாலில் மார்சே சிவகணேசா நிறுவனத்தில்
(14 SAUVE WEST)
JUNE 24,25,26,27 ம் திகதிகளில் வழங்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

**அனைத்து சாறி வகைகளுக்கும் 50% கழிவு**

| | | |
|---|---|---|
| பனறஸ் | From | $ 99.00 |
| PURE மைசூர் சில்க்- | | $59.00 |
| PURE காஷ்மீர் சில்க் - | | $49.00 |
| காஞ்சிபுரம்- | | $69.00 |
| பெங்களூர் சில்க் - | | $ 79.00 |
| கோறா சில்க் - | | $ 89.00 |
| நைலக்ஸ் சாறி – | | $19.95 |
| பூணம் - | | $19.95 |
| கோடம்பாக்கம் | | $ 19.95 |
| போச்சும் பள்ளி | | $ 19.95 |
| அம்பர் றெறின் | | $ 19.95 |
| கோப்பிளு சாறி | | $ 19.95 |
| ஆர்ட் சில்க் சாறி | | $ 19.95 |
| HALF சாறி செற் | | $ 39.95 |
| UNDERSKIRT | | $ 9.95 |

**ஆண்களிற்கான**

| | |
|---|---|
| PANTS (MORITO) | $ 27.95 |
| DENIM JEANS | $ 27.95 |
| SAVCO JEANS | $ 27.95 |
| MARTIN SHIRT | $14.95 |
| COTTON SHIRT | $14.95 |
| COTTON SHIRT (LONDON BRIDGE) | $ 9.95 |
| KURTH SETS | $29.95 |
| NIGHTIES | $12.95 |
| PINJABI SUIT | $ 9.95 |
| FANCY HAND BAGS | $19.95 |
| AUDIO (NAME BRAND) | $2.50 |
| CD (COMPACT DISC) | $9.95 |
| இயற்கை காட்சிகள் (FRAMED PICTURES) | $ 12.95 |



நீலம் சில்க் (416) 778 7455
சிவகணேஷா (514) 388 5815



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடும்பத்திற்காக ..

(சென்ற இதழ் தொடர்ச்சி)



Collage/ LUXMAN Thilak

பிரெஞ்சு மூலம்: ஆல்பேர்த்தோ மோருவியா

தமிழில்: க. கலாமோகன்

படியில் ஏறும்போது என்னால் பெடரிக்காவைப் பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு தினத்தில் அமைதியோடு குடும்ப சமேதரமாக இருப்பதற்கு பதில், றேஜினு கோயெலி சிறையில், கம்பிகளுக்குப் பின்னால் மாட்டுப் பட்டு விட்டானே! வீட்டுக்கு முன் வந்து மணியை அடிக்கின்றேன். மூத்த மகளான லுஸெத்தாதான் கதவைத் திறந்தாள். என்றும் போல அவள் சுத்தமாக. அவளது உடை அயன் பண்ணப்பட்டிருந்தது. வெள்ளைக் கால் மேஸ்களும், கறுப்புச் சப்பாத்தும் போட்டிருந்தாள்.

''அம்மா நிற்கின்றாளா?'' எனக் கேட்டேன்.

"ஆம், ஆம், அம்மா நிற்கின்றாள்... இதோ..." என்று முரட்டுத்தனமாகவும், தளர்ந்து போனதுமான ஒரு குரலில் உள்ளேயிருந்து பதில் வந்தது.

நான் விழிகளை உயர்த்தினேன். ஆச்சரியம், என்னால் ஜியூஸ்பினாவை அடையாளம் கண்டு பிடிக்க முடியாமலிருந்தது. அவள் மாறியிருந்தாள். முன்பு கிட்டத்தட்ட வட்டமாக இருந்த முகமும், சதைப்பிடிப்பாக இருந்த கன்னங்களும் – நீண்டு, பெருத்திருந்தன. குழி விழுந்த விழி வட்டத்துக்குப் பின்னால், அவளது விழிகள் அணைந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தியைப் போலப் புதினமாகப் பிரகாசித்தன. கூந்தல் கலைந்து இரண்டு பக்கக் கன்னங்களிலும் வீழ்ந்து கொண்டிருந்தது. எந்த உயிர்ப்புமின்றி, அவள் அணிந்திருந்த உடுப்பும் கூந்தலைப் போலவே தொங்கியது. தோள்கள் மறைந்து, வயிற்றை முன்னுக்குத் தள்ளியபடி குசினிக்கதவின் நிலையை அழுத்திக் கொண்டிருந்த விதத்தைப் பார்த்து, அவள் கர்ப்பிணியோ என நினைத்தேன்.

அதீத நெருடலுடன் நான் சொன்னேன்: "ஜியூஸ்பினா, இன்றுதான் புனித ஜோசப் தினம், உனக்கான எனது அனைத்து வாழ்த்துகளையும் சில பொரித்த பண்டங்களையும் கொண்டு வந்துள்ளேன்."

"நன்றி, நன்றி... ஆனால் எனக்குப் புனித தினங்கள் என்றோ கொண்டாட்டங்கள் என்றோ எதுவுமே இல்லை.. இந்தப் பக்கமாக நீ வா (மகளை அழைத்தல்) குசினிக்குள் போய் சிகோரேயில் (ஒரு வகைக் கீரையில் தயாரிக்கப்படும் பண்டம்) ஒன்றைத் தெரிவு செய்..."

முரட்டுத்தனமாக மகளைப் பிடித்துக் குசினிக்குள் தள்ளிவிட்டு உபசரிப்புக் கூடமாகவும் சாப்பிடுமிடமாகவும் உபயோகிக்கப்படுகின்ற ஒரு பகுதிக்கு என்னை அழைத்துச் சென்றாள். திரையற்றபடியால் அந்தப் பகுதிக்குள் ஒளி பெருக்கெடுத்தது. அது திபேரை நோக்கிய வானத்தைப் பார்த்தபடி இருந்தது. மேசைமீது பொரியல் பக்கெட்டை வைத்துவிட்டு அவளுக்கு முன்னே கண்கள் கூச நான் இருந்தேன். ஜன்னலில் விழுந்திருந்த அவளது விழிகளைப் பார்த்தபடி நான், நாம் சில கணங்கள் மௌனமாக இருந்தோம். முடிவில் நான் சொன்னேன்:– ''என்ன நீ அவனைப் போய்ப் பார்த்தாயா?"

ஒரு விரியன் பாம்பு போல திரும்பியபடி அவள் சொன்னாள்:–

"ஆம் நான் அங்கு போனேன், ஆம்".

"அவன் எப்படியுள்ளான்?"

"அவர் சுகமாக உள்ளார்"

புதிதாக நான் அவளைப் பார்த்தேன். அவள் ஓர் மருட்சி நிலையிலிருப்பதாக எனக்குப் பட்டது. இப்போது அவளது விரல்கள் மேசையிலே மேளம் அடித்தன. நான் அவளைச் சீண்டினேன்.

"வழக்கு எப்போது நடக்குமாம்?"

நீண்டதும், எரிச்சலையூட்டுவதுமான குரலில் அவள் பதிலளித்தாள்.

"அது யாருக்குத் தெரியும்? அவருக்குத் தீமை வேண்டுமென விரும்பியவர்களுக்கு ஒரு பிரச்சனையுமில்லை. அவர் கட்டாயம் தண்டிக்கப்படுவார். அதுவும் நீண்ட காலங்களுக்கு கடுமையான வேலை செய்யும்படி அவர் தண்டிக்கப்படுவார். அவர்களோ பிரச்சனையில்லாமல் இருப்பார்கள்."

"சரி, அவர் இதைப் பற்றி என்ன சொல்கின்றார்?"

"அவர் என்ன சொல்ல வேண்டுமென நீ நினைக்கின்றாய்? அவர் அடைத்து

31 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏமாற்றுதே!
## ஏமாறுதே!

# மாஸ்கோவில் அப்பாவிகளை ஏமாற்றும் காமுக ஏஜன்சிக்காரர்கள்

**நிவேதிகா**

கடந்த சில வாரங்களாக நிவேதிகாவை காணவில்லை, எங்கோ ஏஜண்டிடம் ஏமாந்து எந்த நாட்டில் அலைகிறேனோ என எண்ணியிருப்பீர்கள்... இதோ.. அண்மையில் லண்டன் வீரகேசரிக்கு ஒருவர் கொடுத்த பேட்டியை வாசித்து வேதனையடைந்தேன்.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட இலங்கைத் தமிழர்கள் ரஷ்ய நாட்டில் பரிதவிக்கிறார்கள் இவர்களை ஏமாற்றி இவர்களிடம் இருந்து பணத்தை பரித்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும் தமிழ் ஏஜண்டுக்களை என்ன செய்வது?

இவர்களை உருவாக்கப்படுவது யாரால்? பதினெட்டு மாதங்களுக்கு மேலாக ரஷ்ய நாட்டில் சீரழிந்த வாழ்க்கை வாழ்ந்துவிட்டு வந்து சேர்ந்த கோண்டாவிலைச் சேர்ந்த குணநாயகம் தில்லையம்பலம் என்ற இளைஞரே பல திடுக்கிடும் தகவல்களை இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். அந்த துயரகரமான வேதனையான கட்டுரையை நீங்களும் படித்து எங்கள் தமிழ் ஏஜண்டுகளின் விந்தையை பாருங்களேன்.

சுகமாக வாழப்பழகிக் கொண்ட ஒரு கூட்டம் எப்படியெல்லாம் திருகு தாளங்களைச் செய்து , அப்பாவிகளிடமிருந்து கொள்ளை கொள்ளையாகப் பணத்தை ஏப்பமிட்டு பண்போடு வாழ்ந்த பெண்களைத் தமது படுக்கையறைப் பாவைகளாக்கி அடிமைகளாக நடாத்திக் கொண்டிருக்கும் இந்த 'எஜமான்கள்' இனத்தைப் பற்றி தில்லையம்பலம் என்ற இளைஞர் சொன்ன கதைகள் நெஞ்சத்தைப் பிளந்துவிடும் சம்பவங்களாகும்.

'காடையர்கள்' என்பதை விட மிகப் பயங்கரமான இந்த 'காமுகர்கள்' நமது இனத்திலிருந்து ஒழித்துக் கட்டப்பட வேண்டியவர்கள்.

எமது இனத்துக்குள் எம்மை அடிமைப்படுத்தும் இந்தக் கொடியவர்களை முதலில் அழித்து ஒழித்துவிடுதலை பெறவேண்டுமென்று நம்முடன் சம்பாஷித்துக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு அந்த இளைஞர் கத்தினார்.

சிங்கப்பூர் சீக்குடனும் ரஷ்யநாட்டு 28 அடுக்கு ஹோட்டல் முதலாளியுடனும் தொடர்பு வைத்துக் கொண்டு ஏழைகளிடம் வாங்கும் பணத்தில் சொகுசான வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் இந்தத் தமிழ் ஏஜென்சிக் காரர்கள் 'மகாராஜாக்கள்' மாதிரி ரஷ்யாவிலிருந்து சிங்கப்பூருக்கும் அங்கிருந்து கொழும்புக்கும் பாங்கொக்கும், மாஸ்கோவுக்கும் பறந்து திரிகிறார்கள்! கொழும்பில் ஹோட்டல்களிலும், மாளிகை போன்ற வீடுகளிலும் தமது மனைவி பிள்ளைகளை வைத்துக் கொண்டு தமது லீலைகளை விமானங்களில் பறந்து திரிந்து நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசை வார்த்தைகளை கொட்டி அப்பாவிகளிடம் லட்சக்கணக்கில் பணத்தை வாங்குவது! சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு கூட்டி வருவது, பின்னர் அவர்களை எங்காவது ஒரு இடத்தில் இருக்க விடுவது– நாளை நாளை என்று ஏமாற்றுவது– குடி குடி என்று குடிப்பது– இதற்குள் வெளிநாட்டில் உள்ள தனது கணவனையோ சகோதரர்களையோ சென்றடைய வந்த பெண்களை தமது வலைக்குள் போட்டு தமது பசிக்கு இரையாக்குவது. இப்படியான பல கதைகளை மனவேதனையோடு இந்த இளைஞர் சொன்னார்.

ரஷ்ய நாட்டில் இருந்த போது ஏஜென்சி என்ற போர்வையில் அப்பாவிகள் காசில் சொகுசு வாழ்க்கை நடத்திய காமுகர்கள் பட்டியல் ஒன்றையே இந்த இளைஞர் என்னிடம் கூறினார்.

ஒரு அயோக்கியனிடம் நானும் இன்னும் பலரும் பணம் கொடுத்தோம். பெண்களும் பலர் கைக்குழந்தையோடு பெண்ணும் ஒருவர். எங்களைச் சிங்கப்பூருக்கு கூட்டிப் போனான். இரண்டு நாளில் உங்களை லண்டனுக்கு அனுப்பிவிடுவேன். இப்போது உங்களுக்கு களைப்பு, களைப்பு தீரட்டும் என்று சொல்லி களைப்புத் தீர்க்கத்தான் வெளியே போனான். இரவு அவன் குடிவெறியில் வந்தான். 35 வயது இருக்கும். இவன் திருமணமாகி மனைவியை கொழும்பில் வீடெடுத்து வைத்திருக்கிறான். நான் புறப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர்தான் கல்யாணம் செய்தேன். விரைவில் லண்டன் போய் எனது இளம் மனைவியையும் அழைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தச் சேகரிடம் 4 இலட்சம் ருபாய் கொடுத்தேன். சிங்கப்பூர் வரும் போது 'ட்ரவலர்ஸ் செக்' டொலரில் கொண்டு வந்தேன். என்ன மாதிரி என்னுடன் வந்தவர்களும் பணத்தைக் கொண்டு வந்தார்கள் அடுத்த நாள் அவன் ட்ரவலர்ஸ் செக்கில் கையெழுத்து வாங்கி எங்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகளை செய்வதாகச் சொல்லிப் போனவன் இரவு குடிவெறியில் ஒரு சிங்கப்பூர் சீன பெண்ணுடன் வந்தான். தனது அறையில் அப்பெண்ணுடன் போனதுதான் தெரியும். எனக்கு அவனைப் பற்றிச் சந்தேகம் ஏற்படத் தொடங்கிவிட்டது. என்ன செய்வது? அவன் எங்களுக்கு சாப்பாட்டுக்கு 6 வெள்ளி காலையில் தருவான்.

6 வெள்ளி ஒரு ஆளுக்குக் காணாது. 14 நாட்கள் முடியப் போகிற நேரத்தில் எங்களுக்கு 'விசா' புதுப்பிக்க வேண்டும். 14 நாட்களுக்கு விசா தருவார்கள்.

செருங்கூனிலுள்ள லொட்ஜில்தான் நாங்கள் தங்கியிருந்தோம் விசா தர மறுத்து விட்டார்கள். லொட்ஜுக்குள் ஒளிந்து மறைந்து நாட்களை நகர்த்திக் கொண்டிருந்த போது வேறு இருவரிடம் எங்களை ஒப்படைத்து விட்டுப் போய்விட்டான்.

இவர்கள் எங்களை அனுப்புகிற மாதிரியில்லை நான் வற்புறுத்திய போது எங்களில் சிலரை ரஷ்யாவுக்கு அனுப்புவதாகக் கூறினார். ஆனால் ஓவர் ஸ்டே பணம் கட்டினால் ரஷ்யாவுக்கு டிக்கட் எடுத்துத் தருவதாகக் கூறினான்.

33ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏனிந்த அநியாய மரணங்கள்?

**மாறன்**

**இந்த வாழ்க்கை நமக்குக் கிடைத்த கொடை என்பதை தற்கொலை செய்வோர் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களைக் கருவிலிருந்து சுமந்த காலம் தொட்டு வளர்த்தெடுப்பதற்கு இன்றுவரை அவர்கள் பெற்றோர் சார்ந்தவர்கள் பட்ட கஷ்டங்கள் அவர்கள் எதிர்பார்த்து நிற்கும் அபிலாஷைகள், அவர்களின் இறப்பில் பெற்றோர் உறவினர், சமூகத்தினர் படப்போகும் துன்பங்கள், சீரழிவுகள் பற்றி தற்கொலைக்கு முன் ஒரு கணமாவது சிந்திக்கவேண்டும். ''என்னை காப்பாற்றுங்கள் என்னை காப்பாற்றுங்கள்'' என்று தமது சாவின் சில நிமிடங்களின் முன் சொல்பவர்கள் ஏன் நின்று நிதானித்து அதனை முதலில் சிந்திக்க கூடாது? மரணம் இந்தக் கேள்விகளுக்கு ஒருபோதும் தீர்வாகாது.**

மொன்றியலில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து ஆறு நாட்களின் பின் கண்டெடுக்கப்பட்ட தமிழ் இளைஞரின் உடல்... ஸ்காபரோவில் தன்னைத் தீயிட்டு எரித்து பின்னர் வைத்திய சாலையில் இறந்த இளைஞர்.. ஸ்காபரோவில் தொடர் அடுக்குமாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட 75 வயது முதியவர்.. ரொறன்ரோவில் தொடர் அடுக்கு மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து பெண், எற்ரோபிக்கோவில் (கிப்பிளிங்) உயர் அடுக்கு மாடியிலிருந்து தற்கொலை செய்து கொண்ட யுவதி.. ரயில் தண்டவாளத்தினுள் விழுந்த இறந்த இளைஞர் இப்படியே எமது தமிழ மக்களின் தற்கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்த மரணங்கள் பற்றி தனித்தனியான ஆய்வு மேற்கொள்வது எனது நோக்கமல்ல ஏனெனில் யாரும் தனிப்பட்ட ரீதியாக பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை, இம் மரணங்களை நாம் எவ்வாறு தடுக்கப் போகின்றோம்? இதற்கான அடிப்படைக்காரணங்கள் என்ன? என்பவை பற்றி இங்கு நோக்குதல் நலம்.

ஈழமண்ணில் தற்கொலை மரணங்கள் மிக அரிதாகவே நடந்தன. எமது தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடான ஏற்றத் தாழ்வுகள் புரையோடிக்கிடந்த போதிலும், இவர்களுக்கென அருகிலும், தூரத்திலும் சொந்தங்கள் உறவுகள், நட்புகள் என்ற கோர்வைகளுக்குள் ஒருவருக்கொருவர் பலமாகவும், ஆறுதல் கொடுக்கக்கூடியவகையிலும் வாழ்ந்து வந்தனர். வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஒரு குடும்பத்தில் மகனோ அல்லது மகளோ தமது பெற்றோரை அல்லது குடும்பத்தாரை மீறிக்கேடாக அல்லது அவர்களுக்கான பாதையில் செல்லும்போது ஏற்படும் முரண்பாடுகளை அவர்களே பெற்றோரால் அல்லது குடும்பத்தாரால் தீர்த்து வைக்க முடியாத போது குடும்பத்தின் நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள், குடும்பத்தில் அக்கறையுள்ளவர்கள் அணுகித் தீர்த்து வைக்கின்றனர். அல்லது சரியான பாதையில் அவர்கள் கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

ஆனால், இங்கு (கனடாவில்) தனியாக அல்லது பெற்றோருடன் அல்லது சகோதரர்களுடன் அல்லது வேறு வழியில் புலம் பெயர்ந்து வந்த இளைஞர்கள், யுவதிகள் உளவியல் ரீதியான, பொருளாதார ரீதியான பலம் குறைந்தவர்கள், பக்குவத்தன்மையற்றவர்கள். பல விதமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய தேவையேற்படுகிறது. எமது மண்ணை விட்டு உயிரைப் பாதுகாப்பதற்காக அல்லது பொருளாதாரத் தேவையை பூர்த்தி செய்வதற்காக அல்லது இரண்டையுமே காரணமாகக் கொண்டு புறப்பட்டு வந்தவர்கள் இங்குதாம் எதிர்பார்த்து வந்தவைகள் கிடைக்காத போது விரக்திக்குள்ளாகின்றனர். சமூகரீதியான, உறவுகள் ரீதியான பலம் எம் தேசத்தில் கிடைத்ததுபோல், இங்கு கிடைக்காத போது பலவீனர்களாகின்றனர். இந்நிலையில் கார்ல் மார்க்ஸ் கூறியது போல் "ஒரு மனிதன் சார்ந்துள்ள சூழ்நிலையே அவனது வாழ் நிலையை தீர்மானிக்கின்றது" என்பதற்கிணங்க எமது மண்ணில் எம் கலாச்சாரப் பாரம்பரியங்களுக்கேற்ப வளர்ந்து வந்தவர்கள் இங்கு இங்குள்ள திறந்து விடப்பட்ட, சுதந்திரமான கலாச்சாரத்திற்கு தம்மை எடுத்துச் செல்ல முயற்சி செய்கின்றனர். அதனால், இளைய சந்ததியினர்க்கும் அவர்களுக்கு முதல் உதித்த சந்ததியினர்களுக்குமிடையே பெரியதொரு முரண்பாடு ஏற்படுகிறது. இதனால் சிலர் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். சிலர் விரும்பியவர்களுடன் விரும்பிய திசையில் செல்கின்றனர். சிலர் இவற்றுக்கு தோற்றுப் போனவர்களாய் தற்கொலை முயற்சி, குடி போதை வஸ்து என்பவற்றுக்கும் உள்ளாகின்றனர். இவற்றுக்கெல்லாம் இவர்களுக்கு சரியான வழிநடத்திலின்மை ஆரோக்கியமான சிந்தனைகள் ஏற்படுத்தப்படாமை, குறுகிய வட்டங்களுக்குள் வளர்ந்தமை வளர்க்கப்படுகின்றமை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

குடும்பத்திற்குள்ளும், குடும்பத்திற்கு வெளியேயும் குறிக்கப்பட்ட ஒருவருக்கு உண்மை பிரச்சனையிருக்கிறது அல்லது ஏதோ பிரச்சனையிருக்கிறது என்று தெரிந்தும் நம்மில் பலம் முரண்பாடுகளை வைத்துக் கொண்டும், வேற்றுமைகளை வைத்துக் கொண்டும் பாரா முகமாக அல்லது ஏன் நமக்கு வீண் வம்பு நாமுண்டு நம் பாடுண்டு என்று வாழ்தலும் சில வேளைகளில் அறிவுகுன்றிய, சரியான தீர்வினை எடுக்க முடியாத, மன ஆறுதல் கிடைக்காத சிலரின் தற்கொலை மரணங்களுக்கு நம்மில் சிலர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தவறிழைத்தவர்களாக அல்லது எமது சமூகக் கடமையைச் செய்யத் தவறியவர்களாக இருக்கின்றோம் எனலாம். "சொந்தச் சகோதரர்கள் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி" என்று பாரதியாரின் வரிகள் எமது தமிழினத்தில் சிலருக்கோ அல்லது பலருக்கோ பொருந்தக்கூடியதோ என்ற கேள்வி எனக்குள் எழுகின்றது. எமது பிள்ளைகள் மேலை நாட்டுக் கலாச்சாரத்தை பின்பற்றுதலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகிழ்ச்சியடையும் சில பெற்ருேர் தமிழைக் கற்க, பேச மறந்து ஆங்கிலம் பேசுவதில் தற்பெருமை கொள்ளும் பெற்ருேர். அவர்களது பிள்ளைகள் இன்ருே நாளையோ, தமிழர்களன்று அடையாளம் காண முடியாத அளவுக்கு தம்மை எல்லாவற்றிலும் மாற்றிக்கொண்டு பிழையான போக்கில் செல்கையில் தம் பெற்ருேரை இங்குள்ள முதியோர் மடங்களுக்கு அனுப்பி விட்டு உறவு என்ற நிலையினை விட்டு பிரிந்து செல்லும்போதுதான் "தம்கைகளை தம் கண்களைக் குத்தின" என்ற உணர்வு பெற்ருேருக்கும், சமூகத்திற்கும் ஏற்படும்.

முதியோர் சிலர் இங்கு தற்கொலை செய்து கொள்கின்றமைக்கு சில காரணங்களைக் குறிப்பிடலாம். எமது மண்ணில் எப்போதும் ஏதோ பிரயோசனமான ஒன்றைச் செய்து கொண்டு சுதந்திரமான காற்றைச் சுவாசித்து வந்தவர்கள் இங்கு வந்தவுடன் ஒரே இடத்தில் அடைபட்டுக் கிடக்கின்றனர். குறிப்பாக குளிர் காலங்களில் இது ஒருவகையான பாதிப்பினை மனேநிலையில் ஏற்படுத்துகிறது. இந்நிலையில் மகனே மகளோ, மருமகனே மருமகளோ மனைவியோ கணவனே, அல்லது வேறு ஒருவரின் சூழ்நிலைப்பாதிப்பில் தங்கியிருத்தல், சரியான கவனிப்பின்மை ஆறுதலின்மை போன்றன அவர்களின் தற்கொலை மரணத்திற்கு காரணமாகின்றது எனலாம்.

பொதுவாக இவற்றினை இயன்றவரை எதிர் காலத்தில் தடுப்பதற்கு நாம் சில முயற்சிகளைச் செய்ய வேண்டும். பிள்ளைகளை இளைஞர்களை, யுவதிகளை நல்லவர்களாக வளர்த்தெடுப்பதற்கும், வழி நடத்துவதற்கும் பெற்ருேர் சமூக அங்கத்தவர்களும் நல்ல ஆரோக்கிய சிந்தனைகளை அவர்களுக்குள்ளே விதைக்க வேண்டும்.

உ

# சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல் Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுக்கும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.

★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.

★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்

★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்

★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானுலும்
சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

## சி.சிதம்பரப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்

தொடர்புகளுக்கு;
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
**(905) 513-9840**

அவர்களுக்கேற்ற முறையில் அணுகி நல்ல புத்திமதிகளைச் சொல்வதோ நாகரீகமான சிந்தனைகளுக்குட்பட்டு சிலவற்றை விட்டுக்கொடுத்து ஒத்துப்போதலும் வேண்டும். அல்லது நிலமைகளைத் தெளிவாக விளங்கப்படுத்தி, புரிந்துணர்வை ஏற்படுத்தி சிலவற்றை பின்போடல் நன்று. அதைவிடுத்து வெறும் வறட்டுக் கௌரவங்களுடன் பிடிவாதமாக அவர்களின் இழப்புக்கு பெற்ருேரோ அல்லது சமூகமோ காரணமாகுதல் நன்றன்று.

சிலரின் சாவுக்கு காதல் எனக் காரணம் சொல்லலாம் உண்மையாகவே இது காதலா? அல்லது காதல் என்ற பெயரைக் கொண்டுள்ள கவர்ச்சியா? வெறும் ஈர்ப்பா? என்று சம்பந்தப்பட்டவர்களையோ சம்பவங்களையோ வைத்துத்தான் வரையறுக்கலாம். இருப்பினும், இந்த வாழ்க்கை நமக்குக் கிடைப்பதற்கரிது. இந்த வாழ்க்கை நமக்குக் கிடைத்த கொடை என்பதை தற்கொலை செய்வோர் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களைக் கருவிலிருந்து சுமந்த காலம் தொட்டு வளர்த்தெடுப்பதற்கு இன்றுவரை அவர்கள் பெற்ருேர் சார்ந்தவர்கள் பட்ட கஷ்டங்கள் அவர்கள் எதிர்பார்த்து நிற்கும் அபிலாஷைகள், அவர்களின் இறப்பில் பெற்ருேர் உறவினர், சமூகத்தினர் படப்போகும் துன்பங்கள், சீரழிவுகள் பற்றி தற்கொலைக்கு முன் ஒரு கணமாவது சிந்திக்கவேண்டும். "என்னை காப்பாற்றுங்கள் என்னை காப்பாற்றுங்கள்" என்று தமது சாவின் சில நிமிடங்களின் முன் சொல்பவர்கள் ஏன் நின்று நிதானித்து அதனை முதலில் சிந்திக்க கூடாது? மரணம் இந்தக் கேள்விகளுக்கு ஒருபோதும் தீர்வாகாது. மாருக இவர்கள் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் கேடு விளைவித்தவர்களாகவே கொள்ளப்படும்.

முன்பு குறிப்பிட்டது போல் சிலரின் சாவுக்கு எமது பாராமுகமும் சுய நலங்களும் காரணமாக அமைவதை சமூகப் பொறுப்புடன் தவிர்த்துக் கொள்ளவேண்டும். எம்மை சார்ந்துள்ள சூழலிலே ஒருவர் ஊரைவிட்டுப் பிரிந்து வந்த அல்லது கனடாவில் நிலமைக்கேற்ப வாடகை, உணவு, மற்றும் சில விடயங்களைச் சேர்ந்து உறவினர்களோ, நண்பர்களோ பகிர்வு செய்யும் போது ஏற்படும் முரண்பாடுகளினுல் அல்லது வேறு தோல்வியினுல் விரக்கதியிலிருப்பவராயின் அவர் எவராக இருந்தாலும் எமது எல்லைக்குட்பட்டு அவருக்கு மன ஆறுதலோ, சரியான தீர்வோ செய்தல் வேண்டும். இதன் மூலம் நாம் சமூகப் பொறுப்பை சரியாகச் செய்துள்ளோம் என்று திருப்தியாவது எமக்குக் கிடைக்கும். அதைவிடுத்து அவர்களைக் கண்டு ஏளனம் செய்தல், வம்பு வளர்த்தல் ஒருபோதும் ஆரோக்கியமானதாக அமையாது. மாருக மேலும் விரக்தி நிலைப்பாடும் அவர்களைத் தள்ளியவர்களாகவோம் பெற்ருேரும் சமூகமும் அன்னிய மோகத்திற்கும் மாயைகளுக்குமுட்பட்டு வாழாது பிள்ளை தமிழைப் பேச, எழுத, வாசிக்கச் கற்பித்தும், எமது கலாச்சாரம், பண்பாடு பற்றி அறிய நல்ல பல நூல்களை வாசிக்கச் செய்தும் நல்ல பெரியார்களின் வாழ்க்கை முறை, சிந்தனை என்பவை பற்றி எடுத்துக் கூறியோ படிக்க வைத்தோ அவர்களிடம் நல்ல பழக்க, வழக்கங்களை ஏற்படுத்துவதனூடாக நல்ல ஆரோக்கியமான சிந்தனைகளுடன் நற்பிரஜைகளாக வாழ வழி சமைக்கமுடியும். மற்ற மொழிகளைக் கற்றல் தவறல்ல, வாழும் நாடு, சூழ்நிலை என்பவற்றுக்கேற்ப நாம் அவற்றை வளம்படுத்தல் வேண்டும் அன்னிய கலாச்சாரத்திலிருந்து

**14 ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எண்ணி எண்ணிப் பார்க்க மனம்.....

## 3618511

**எல்லாத் திகதிகளிலும் நல்லவர்களும் பிறக்கிறார்கள், கெட்டவர்களும் பிறக்கிறார்கள், வலியவர்களும் பிறக்கிறார்கள், மெலியவர்களும் பிறக்கிறார்கள், ஞானிகளும் பிறக்கிறார்கள், மூர்க்கர்களும் பிறக்கிறார்கள் வெற்றி பெறுவோரும் பிறக்கிறார்கள், வெற்றி பெறாதவர்களும் பிறக்கிறார்கள். முற்றிலும் நல்லவரோ முற்றிலுங் கெட்டவரோ எவருமில்லை. வாழ்க்கையில் தோல்வியின் நிழல் விழாத வெற்றியுமில்லை, வெற்றியின் சாயலே இல்லாத தோல்வியுமில்லை. எந்த ஒரு மனிதரது வாழ்விலும் வெவ்வேறு இலக்கங்கட்குரியனவாகக் கருதப்படும் பண்புகளைப் பொருத்திக் காண இடமுண்டு.**

தினகரன் பத்திரிகை ஈழத் தமிழருடைய நலன்கட்கு ஒவ்வாத பல காரியங்களைச் செய்துள்ளது. அவற்றுள் மிக மோசமான காரியம் இந்த நியூமரோலொஜி என்கிற எண் சாத்திரத்தை 1950 களில் அறிமுகப்படுத்தியது என்று தான் நான் நம்புகிறேன். தினகரனில் வரும் அரசாங்கச் சார்பான பொய்களை மக்கள் பொதுவாக நம்பியதில்லை. ஜோசியம், அதுவும் விஞ்ஞானரீதியான ஒரு ஜோசியம், அதிர்ஷ்ட விஞ்ஞானம் என்று அறிமுகமாகும்போது பலருக்குச் சபலமேற்படுகிறது.

மனிதர்களை மூடராக்குகிற இந்தக் கலையைத் தமிழிற் பரவலாக்கியவர் 'பண்டிற்' சேதுராமன் என்பவர். அவர் அதிர்ஷ்ட விஞ்ஞானம் (அல்லது நீங்களும் அதிஷ்டசாலியாகலாம்?) என்ற நூலில் இந்தப் 'பூவா தலையா' விளையாட்டை விஞ்ஞானமாக்க அவர் மிகவும் சிரமப்பட்டு என்னென்னவோ எல்லாம் எழுதியிருக்கிறார். உதாரணமாக, ஒன்பது என்பது மந்திர சக்தி உள்ள எண் என்று நிறுவ எண்களை ஒன்பதால் வகுத்து வரும் மீதம் எண்களின் தனி இலக்கங்களைக் கூட்டி வரும் தொகை. (அத்தொகை, ஒன்பதிற்கும் அதிகமாயின் மீண்டும் இலக்கங்களைக் கூட்டி வரும் தொகை). எந்த எண்களையும் ஒன்பதாற் பெருக்கினால் மறுமொழியின் தனி இலக்கங்களின் கூட்டு எண் ஒன்பது. இந்த மாதிரியாக ஒன்பதின் மந்திர சக்தியை அடுக்கிக் கொண்டே போயிருக்கிறார். இதற்கும் மேலாக நவக் கிரகங்கள், நவதானியம் நவமணிகள் என்றெல்லாம் பலவிதமான சான்றுதாரங்கள்.

ஒன்பதின் 'மந்திர சக்தி' நமது எண்முறை தசம அடிப்படையிலானது என்பதன் விளைவு மட்டுமே. எட்டின் அடிப்படையில் அமைந்திருந்தால் சேதுராமன் குறிப்பிடும் மந்திர சக்தி ஏழுக்குக் கிடைத்திருக்கும். (எட்டு ஒன்பது என்ற இலக்கங்கள் இல்லாத முறை இது. (1,2,3,4,5,6,7,10,11,. ...17,20,21... 27,30,31... என்ற விதமாக எண்கள் அமையும்.) பதினறை அடிப்படையாகக் கொண்ட முறை ஒன்றும் ஒரு காலத்திற் கொம்பியூட்டர் விஞ்ஞானிகளாற் பயன்படுத்தப்பட்டது. கொம்பியூட்டர்கள் இரண்டை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. கொம்பியூட்டர் இயக்க முறையில் இலக்கம் இரண்டொழிய வேறில்லை. (1,10,11,100,101,111,1000 என்ற விதமாகவே நமது 1,2,3,4,5,6,7,8 ஆகிய எண்கள் அமையும்.) அங்கே சேதுராமன் கூறிய முறையில் எல்லாருடைய பிறந்த நாள் எண்ணும் பேர் எண்ணும் ஒன்று. பேர் இல்லாதவர்கட்குப் பேர் எண் சைபர் ஆக இருக்கலாம். தம் பிறந்த நாள் தெரியாத நபர்களுக்கும் சைபரே இலக்கமாக இருக்கக்கூடும்.

கடவுள் மனிதனது புத்தி சாதுரியத்தைப் பரீட்சிக்கவே கையிற் கட்டைவிரலையும் அதினின்று விலகி நான்கு விரல்களையும் கொடுத்திருக்க வேண்டும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. மனிதன் தவறுவான் என்று தெரிந்தே தான் ஈடன் தோட்டத்தில் கனி மரத்தைப் படைத்துக் ஆதாமிடம் பழத்தைத் தின்னாதே என்று சொன்னார் என்றும் நம்புகிறேன். சாத்தானை ஒழித்துக் கட்டுவது கடவுளுடைய உண்மையான உத்தேசமானால் கடவுள் ஆதாமிடம் பாம்பைத் தின்னாதே என்று சொல்லியிருக்க வேண்டும். (இது நான் முன்பு எங்கோ வாசித்தது. சொன்னவர் மார்க் ட்வெய்ன ஒஸ்கார் வைல்டா என நினைவில்லை) ஒவ்வொரு நீண்ட விரலுக்கும் ஒன்று எனவும் கட்டை விரலுக்கு நாலு எனவும் பெறுமானம் கொடுத்து எண்ணும் யோசனை மனிதனுக்கு வந்திருந்தால் எட்டை அடிப்படையாக வைத்து ஒரு இலக்க முறையை வகுத்திருப்பான். துரதிஷ்டமான எண் என்று கூறப்படும் எட்டு என்ற இலக்கமே இருந்திராது. மனிதர்கள் எல்லாருமே அதிர்ஷ்டசாலிகளாக இருந்திருப்பார்கள்.

இந்த எண் ஜோசியங்கள் எண்களுக்கும் நவக்கிரகங்களுக்கும் ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்தி ஏதோ விளக்கங்கள் தருகிறார்கள். ராகு, கேது என்று கிரகங்கள் இல்லை என்பது இன்று உறுதியானதால் யூரானஸ், நெப்ட்டியூன் என்று கதை விடுவோரும் உள்ளனர். இந்த எண் முறை மேற்கு ஐரோப்பிய நடை முறையில் உள்ள நவீன கலண்டர் முறையின் அடிப்படையிலானது. இதன் குழறுபடிகளைப் பின்னர் கவனிப்போம். எழுத்துக்களுக்கும் இலக்கங்களை வழங்கி அவை அவற்றுக்கு உரிய ஒலி அலை நீளத்தின் அடிப்படையில் அமைந்தவை என்று விடுகிற கணக்கையும் பின்னர் அவிழ்ப்போம்.

தன்னுடைய எண் ஜோசியத்தை மெய்பிப்பதற்காக சேதுராமன் தந்த உதாரணங்களில் ஒருவருடைய பிறந்த தேதியையாவது தவறாகவே தந்திருந்தார் என்பது நிச்சயம். உண்மை ஏதெனில் எல்லாத் திகதிகளிலும் நல்லவர்களும் பிறக்கிறார்கள், கெட்டவர்களும் பிறக்கிறார்கள், வலியவர்களும் பிறக்கிறார்கள், மெலியவர்களும் பிறக்கிறார்கள், ஞானிகளும் பிறக்கிறார்கள், மூர்க்கர்களும் பிறக்கிறார்கள் வெற்றி பெறுவோரும் பிறக்கிறார்கள், வெற்றி பெறாதவர்களும் பிறக்கிறார்கள். முற்றிலும் நல்லவரோ முற்றிலுங் கெட்டவரோ எவருமில்லை.

www.tamilarangam.net

வாழ்க்கையில் தோல்வியின் நிழல் விழாத வெற்றியுமில்லே, வெற்றியின் சாயலே இல்லாத தோல்வியுமில்லே. எந்த ஒரு மனிதரது வாழ்விலும் வெவ்வேறு இலக்கங்கட்குரியனவாகக் கருதப்படும் பண்புகளேப் பொருத்திக் காண இடமுண்டு. இங்கே தான் மனிதரது அகச்சார்பு முக்கியமடைகிறது. எனக்கு ஒரு சீனப் பழங்கதை நினேவுக்கு வருகிறது.

ஒரு மனிதருடைய கோடரி காணுமற் போய் விட்டது. அதை அடுத்த வீட்டுப் பையன் தான் திருடினுனென்று அவருக்கு மிகுந்த சந்தேகம். அந்தப் பையனது ஒவ்வொரு செயலும் ஒரு திருடனது நடத்தையை உறுதி செய்தது. சில நாட்களின் பின் அவர் கவனப்பிசகாக வைத்த இடத்திலிருந்து கோடரியைக் கண்டெடுத்தார். அதன் பின் பையனுடைய ஒவ்வொரு செயலும் ஒரு யோக்கியனது நடத்தையை உறுதி செய்தது.

இது போலவே நீங்கள் ஒருவரது பிறந்த தேதியை அறிந்தால் அந்தத் தேதிக்குரிய பண்புகளே அவரிடம் அறிவதில் அதிகம் சிரமம் இராது. பின்பு அவரது பிறந்த தேதி வேருக இருக்க அறிந்தால் அவரது நடத்தையை விளக்க மட்டுமன்றி ஏன் முதலில் அவற்றை மற்ற எண்ணுடன் சேர்த்துக் கணித்தீர்கள் என்றும் உங்களால் விளக்க இயலுமாய் இருக்கும். இது மனித மனத்தின் அற்புதமான ஆற்றல்.

ஒருவரது நடத்தை அவரது குடும்பச் சூழல், சமுதாயச் சூழல் கல்வி தொழில், என்பன போன்ற பலவற்ருல் நிர்ணயமாகின்றன. ஒரே திகதிகளில் மட்டுமன்றி ஒரே நிமிஷ இடைவெளிக்குள்ளும் எத்தனேயோ பிறப்புக்கள் நிகழ்கின்றன. அத்தனே பேருமே அடிப்படையில் ஒத்த குண முடையவர்களா? இனி இந்த எண் ஜோசியத்தின் மூலாதாரமான திகதி முறைக்கு வருவோம். இன்று நடைமுறையிலிருக்கும் நாள்காட்டி கிரெகோரிய கலண்டர் எனப்படும். இதற்கு முந்திய கலண்டர்களில் பல வேறுபாடுகள் உள்ளன. இந்தியாவிற்குள்ளேயே பல கலண்டர் முறைகள் உள்ளன. தமிழ் ஆண்டு சூரியனே அடிப்படையாகக் கொண்டது. சந்திரனே அடிப்படையாகக் கொண்ட கலண்டர்கள் சீனுவிலும் இந்தியாவின் பல பகுதிளிலும் அரபு நாடுகளில் உள்ளன. அவற்றின் புத்தாண்டு தினங்களும் மாதங்களும் மிகவும் வேறுபடுகின்றன. 1917ம் வருட ரஷ்யப் புரட்சிக்கு முன் ரஷ்யாவின் இருந்த கலண்டர் ரஷ்யக் கிறிஸ்தவ மரபுக்குரியது. புரட்சிக்குப் பின் கிரெகோரிய கலண்டர் ஏற்கப்பட்டு விட்டது.

ரஷ்ய ஒக்டோபர் புரட்சி கிரெகோரிய கலண்டரின் படி நொவெம்பரில் நடந்தது. இவ்வளவு வேறுபாடுகளின் மத்தியில் எந்த அடிப்படையில் கிரெகோரிய கலண்டரின் படி வருகிற திகதி எண் மட்டுமே மனிதரது விதியை நிர்ணயிக்க முடியும்? லீப் வருடம் எப்போது வரவேண்டுமென்பதை எவர் தீர்மானித்தார்? கிறிஸ்துவின் பின்னுன ஆண்டு என்கிறேம். யேசுகிறிஸ்து பிறந்த நாளிலிருந்து வருடம் தொடங்கவில்லே யேசு பிறந்த நாள் பற்றியும் ஆண்டு பற்றியும் தெளிவீனங்கள் உள்ளன. இத்தனேக்கும் மத்தியில் இந்த எண் சாத்திரன்றுக்கு ஒரு விஞ்ஞானக் குஞ்சம்.

வருடம் சூரியனே அடிப்படையாகக்கொண்டதுஎன்ருல் விஞ்ஞானரீதியாக அதி நீண்ட நாள் அல்லது அதி குறுகிய நாள் அல்லது இரவும் பகலும் சமமான நாட்களில் ஒன்று வருடத்தின் முதல் நாளாக அமைய வேண்டும் மாதங்கள் ஏறத்தாழச் சமமாக இருக்கவேண்டும். இவற்றில் எந்தத் தகுதியுமே இல்லாதது கிரெகோரிய கலண்டர். பெப்ரவரியில் 28 நாள் வர எந்தவிதமான விஞ்ஞான ரீதியான விளக்கமும் இல்லே. நானறிய ஒரு நாட்டில் மட்டுமே முன் குறிப்பிட்ட முறையாகச் சூரியனே அடிப்படையாகக் கொண்ட கலண்டர் வழக்கில் உள்ளது. ஈரானிய வருடப்பிறப்பு மாச் 21ம் திகதி. அந்த நாட்டுக்கு நீண்டு கால சூரிய வழிபாட்டு மரபு இருந்தது. அமெரிக்காவின் அழிந்து போமாயா, இன்கா நாகரிங்களின் புத்தாண்டுகள் பற்றி எனக்குத் தெரியாது. வருடத்தின் அமைப்பை நாங்கள் 'விஞ்ஞானரீதியாக' மாற்றிய மைத்தால் எங்கள் ஒவ்வொருவரதும் பிறந்த தின எண் மாறிவிடும். (வருடத்தை எங்கே தொடங்கி எண்ணுவது என்ற பிரச்சனேயும் நம் கவனத்துக்குரியது.)

இனி எழுத்துக்களுக்கு சேதுராமன் தருகிற எண்களேப் பார்ப்போம். இதில் இரண்டு பித்தலாட்டங்கள் உள்ளன. ஒன்று எழுத்துக்களுக்கு எண்கள் வழங்கப்பட்ட முறை சார்ந்தது. மற்றது பேரில் எழுத்துக்களே மாற்றி அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்வது பற்றியது. ஆங்கில (ரோமன்) எழுத்துக்கட்கு எண் பெறுமானங்கள் அவற்றின் ஒலி அலே நீளங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக சேதுராமன் ஏதேதோ எழுதியிருக்கிருர். இந்த எண் பெறுமானங்கள் வந்தடையப்பட்ட முறையை அறிய வேண்டுமானுல் கிரேக்க அரிச்சுவடியைப் பார்ப்பது தகும். கிரேக்க எழுத்துகளுக்கு அவை வரும் வரிசைப்படி முதல் எட்டுக்கும் ஒன்று முதல் எட்டுவரை இலக்கங்களேயும் அடுத்த எட்டுக்கும் மீண்டும் ஒன்று முதல் எட்டு வரை இலக்கமிடவும் இதற்கு 2,3,4,6,8 எனவும் கடைசி மூன்றுக்கும் 1,2,3 எனவும் எண்களே வழங்கவும் (பதினேழாம் கிரேக்க எழுத்திலிருந்து தொடங்குவனவற்றில் 1,5,7 ஏன் தவறுகின்றன என்று எனக்குத் தெரியாது. ஆயினும் எண்கள் திரும்ப திரும்ப ஏறுவரிசையிலேயே வருகின்றன) முதல் ஐந்து கிரேக்க எழுத்துகட்குரிய ஆங்கில எழுத்துக்கள் A,B,G,D,E. எண் ஜோசியத்தில் இவற்றுக்குரிய எண்கள் 1,2,3,4,5, ஏழாம் எழுத்துக்குரிய ஆங்கில எழுத்து இல்லே. எட்டாவதற்குரியது F (8). ஒன்பதாவதிலிருந்து பதினமூன்ருவது வரையிலான வற்றுக்குரியவை I,K,L,M,N. எனவே எண்கள் முறையே 1,2,3,4,5 பதினுன்காவதற்கு ஆங்கிலத்தில் உரிய எழுத்தில்லே. பதினேந்தாவதுக்குரியது O(7) பதினுருவதற்குரியது p(8). அடுத்துவருவன R,S,T,U,F. முன்குறிப்பிட்டபடி 2,3,4,6,8) கடைசி மூன்றுக்கும் ஆங்கிலத்தில் தனி எழுத்துக்கள் இல்லே. ஆருவது கிரேக்க எழுத்துக்குரிய ஆங்கில எழுத்து இதன் ஒலிப்பு S ஐ ஒத்தது என்பதாலோ என்னவோ இதன் பெறுமானம் ஆறில்லே.

மிகுதி எழுத்துக்களான C,H,I,Q,V,W,X,Y ஆகியவற்றில் C லத்தினில் மூன்ருவதாக வருவது. J யும் I யும் பல ஐரோப்பிய மொழிகளில் ஒத்த விதமாக எழுதப்பட்டும் உச்சரிக்கப்பட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

**பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,**
**கனடா தேசிய பல்வைத்திய சபை**

Tel:(416) 750 9969
Fax:(416) 750-9967
2155 Lawrence Ave East, Suite 10
(At Birchmount), Scarborough
•Wheel Chair Access
•Free Parking




- **Cosmetic Dentistry**
- **Crown & Bridges**
- **Gum Treatment**
- **Root canals**
- **Bleaching**
- **Dentures**
- **Surgery**

★ அவசர சிகிச்சைகளுக்கு
முன்னறிவிப்பு இன்றி
சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம்
பெறுபவர்களுக்கும் சிகிச்சை
வழங்கப்படும்

*திங்கள் முதல் சனி வரை*
*காலை 9 மணி - மாலை 9 மணி வரை*
*ஞாயிறு தினங்களில்*
*நண்பகல் 12 - மாலை 5 மணி வரை*
*(ஞாயிறு தினங்களில் சேவையைப்*
*பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல்*
*செய்து கொள்ளுங்கள்)*
*★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை*

Monday-Saturday
9 am-9 pm
Sundays
12 noon-5 pm
Sunday by appointment only
24 Hrs Emergency Service





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்துள்ளன. ஆங்கிலத்தில் J யின் ஒலி I யினின்றும் மிகவும் வேறுபட்டது!) Q வின் ஒலி K யை ஒத்தது. V யும் U வும் ரோமன் எழுத்தில் ஒரு விதமாகவே எழுதப்பட்டுவந்தன. தனித்தனி வடிவங்கள் பிற்காலத்திலேயே ஏற்பட்டன என்பதை விட ஏக்கும் Uக்கும் ஒரே எண்ணை வழங்க ஒரு நியாயமுமில்லை. W ஒலிப்பில் V யை ஒத்தது எனவே அதற்கு V யின் எண் வழங்கப்பட்டது. X ஆங்கிலத்தில் ks என்ற கூட்டின் ஒலியையுடையது. Y உச்சரிப்பில் I யை ஒத்தது. எனவே கிரேக்க எழுத்துகளின் வரிசைக் கிரமத்தை விட இந்த எண் சாத்திரத்தில் வரும் எழுத்துக்களின் பெறுமானத்திற்கு ஒரு தர்க்கரீதியான அடிப்படையும் இல்லை. ஒலிகளின் அடிப்படையில் எழுத்துக்கள் முறையாக அடுக்கப்பட்ட மொழிகள் இந்திய மொழிகளே. க,ச,ட,தப என்பன நாவின் தானத்தின் முன்னேக்கிய பெயர்ச்சியின் வரிசையில் வருவன. அவற்றின் மெல்லினங்கள் அவற்றை முறையே ஒட்டி வருகின்றன. (ற,ன தமிழுக்கு மட்டுமே உரிய இணை. ற'வின் ஒலிப்புப் பற்றிய சில சிக்கல்கள் உள்ளன) இடையின எழுத்துக்கள் வரிசைப்படுத்தப்பட்ட விதி வல்லின மெல்லின வரிசைகளளவு தெளிவானதல்ல. உயிரொலிகளில் அ,இ,உ என்பனவும் அவற்றின் நெடில்களும் உதட்டின் குவிவைச் சுட்டும் திசையில் உள்ளன. எ,ஏ,ஐ என்பன 'இ'யுடன் உறவுடையவை. ஒ,ஓ,ஔ 'உ'வுடன் உறவுடையன. எனவே ஒலிகளின் 'அலை நீளம்' என்று ஏதாவது இருந்தால் அதை சமஸ்கிருத அல்லது தமிழ் அரிச்சுவடியின் அடிப்படையில் குழப்பமின்றி அடையாளங் காணக் கூடியதாக இருக்க வேண்டும்.

கிரேக்க எழுத்துமுறை ஒலியியலைப் பொறுத்தவரை எழுந்தமான முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அந்த எழுந்தமான வரிசைக்கு விஞ்ஞான மூலாம் பூசுவது போல அபத்தம் கிடையாது.

கிரேக்க மொழியிலாவது, எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஒலிப் பெறுமானங்கள் உண்டு. அவை சொல்லுக்குச் சொல் வேறுபடுவதில்லை. ஆங்கிலத்தைப் போல குளறுபடியான உச்சரிப்பு முறை உள்ள மொழி எதுவுமே இல்லை.

எனவே எழுத்துக்களின் ஒலிப் பெறுமானமும் ஒலிகளின் மந்திர சக்தியும் பற்றியும் எழுத்துக்களை மாற்றுவதால் வரும் கூட்டெண்களின் வலிமை பற்றியும் பேசுவது கலப்படமற்ற பித்தலாட்டம். எந்த விதமாக எழுதியும் பிறகு ஒரே விதமாக ஒலிக்கப்படப் போகும் இரண்டு சொற்களிடையே ஓசையின் பெறுமானம் எவ்வாறு வேறுபடமுடியும்?

ஜோர்ஜ் என்பவர் George என்றுள்ள தனது பேரை Jorj என்று மாற்றினல் கூட்டெண் 25 இலிருந்து 11 ஆகிவிடும். ஆயினும் இம்மாற்றம் அந்தப் பேரின் ஒலிப்பை மாற்ற மாட்டாது. அப்படியானல் எழுத்துக்களின் மாற்றம் வரி வடிவம் தொடர்பான மாற்றம் மட்டுமேயாகி விடுகிறது. அப்படியானல் George தன் பேரை Jorj என்று மாற்றுமல் அலங்காரமாக வளைத்துக் அழித்து எழுதி வந்தாலும் அவரது அதிர்ஷ்டம் மாறி விடலாம். அல்லது போனல் பேர் நடுவே புள்ளி, கமா, போல அலங்காரங்களைச் சேர்ந்து ஏன் அதிர்ஷ்டத்தை மாற்ற முடியாது? (ஐயையோ, தெரியாமல் சொல்லி விட்டேன். இனி யாராவது இதற்கும் ஒரு அதிர்ஷ்ட விஞ்ஞானம் உண்டாக்கி வைக்கப் போகிறார்கள்.)

இந்த அதிர்ஷ்ட விஞ்ஞானத்தை நம்பி நேரத்தையும் பணத்தையும் வீணுக்கியவர்கள் பலர். காலஞ்சென்ற சர்வாதிகாரி பிரேமதாச இந்த அதிர்ஷ்ட விஞ்ஞானத்தை நம்பினர் என்று தெரியவருகிறது. 1992 இல் SRI LANKA என்ற பேர் SHRI LANKA என்று அதிகார பூர்வமாக மாற்றப்பட்டது. இது நிச்சயமாக நாட்டின் அதிர்ஷ்டத்தை விடப் பிரேமதாசவுக்கும் அவரது அதிகாரத்திலுள்ள நாட்டுக்கும் பொருத்தத்தை அதிகப்படுத்தும் முயற்சியே. பிரேமதாச இந்த மாற்றத்தை கொண்டு வந்து ஒரு வருடத்திற்குள் ஒரு குண்டுவெடிப்பு நடந்தது. இது விஜேதுங்காவின் அதிர்ஷ்டமா? சந்திரிகாவின் அதிர்ஷ்டமா? ஆனல் இன்னும் மக்களின் அதிர்ஷ்டம் மாறியதாகத் தெரியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம் SHRI LANKA பிரேமதாசவுக்கு அதிர்ஷ்டமில்லாத பேர் என்று ஆராய்ந்து எண் ஜோசியர்கள் எதிர்காலத்தில் ஆருடம் சொல்லுவார்கள் என்பதை என்னல் இப்போதே சொல்ல முடியும். ஆனலும் நான் ஜோசியனில்லை.

## ஏனிந்த...

எமக்கு வேண்டிய மிக நல்லவைகளை கற்றுக் கொள்ளல் தவறில்லை, மாருக, நம்மையே நாம் மறந்தவர்களாக அவர்களிடமிருந்து பிழையானவற்றை மட்டும் உள்வாங்குதல் சிறப்பாகாது.

எமது பண்பாட்டின் படி முதியோர்க்கு எமது சமுதாயத்தில் மதிப்பும் அவர்களுக்கு உதவி செய்தலும் எமது இன்றியமையாத கடமைகளாக நாம் கருதிவருகின்றோம். அப்படிப்பட்ட நாம் அவர்களுக்கு விரக்தி நிலைமை வராது இயன்றவரை தடுத்தல், புரிந்துணர்வு கொள்ளல், நல்ல பராமரிப்புக் கொடுத்தல், மதிப்பளித்தல் சூழ்நிலைப் பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்தல் போன்ற தேவையான விடயங்களைக் கவனிப்பதனூடாக அவர்களது பிள்ளைகளாகிய நாம் அவர்களின் தற்கொலைகளைத் தவிர்க்க முடியும். ஆகவே இளைஞர்களே யுவதிகளே பெற்றோர்களே, பெரியோர்களே சமூகப் பொறுப்புடையவர்களே இந்தத் தற்கொலை மரணங்கள் நாளைக்கு எங்களுடைய ஒவ்வொருவருடைய குடும்பங்களிலும் நடக்கபோகிறது. சிறிய சிறிய, பிரச்சனைகளுக்கும் விரக்திகளுக்கும் மரணம் ஒரு முடிவாகாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். புரியாதவர்க்கு புரியவைக்கவேண்டும் மனித உயிர்கள் எவ்வளவு பெறுமதியானது என்பதனை நாம் உணரவேண்டும். இந்த மனித பிறப்பானது நமக்குக் கிடைத்த மாபெரும் கொடை என்பதை நாம் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும். பிரச்சனைகள் கஷ்டங்கள் நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டவைகள், அவற்றை எம்மால் தீர்க்க முடியும். அவற்றை எமக்குவிடப்பட்ட சவாலாக நாம் எடுத்துகொண்டு வெற்றி பெறும்வரை செயற்படவேண்டும். இல்லையேல் ஆரோக்கியமான நல்ல மாற்றுத் தீர்வுகளை நாம் பின்பற்ற வேண்டும்

www.tamilarangam.net

# தொடர்ந்தால் தொடரும்!



## பாலசுந்தரன்

நேற்றைய தினம் முடிந்து போன ஒன்று. ஒரு குழப்பத்தின் முடிவு. அல்லது ஒரு சோகத்தின் ஆரம்பம். குழப்பம் தெளிந்து முடிவு தோன்றியதை கொண்டாட முடியவில்லை. சோகமே கொடூரம் எனது வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டதா? ஆம் என்பதே இப்போது எனது பதில்.

மேரி! ஒரு அன்பு மேரி! ஒரு பரிவு மேரி! ஒரு கலகலப்பு மேரி ஒரு அறிவு....! அவற்றுடன் மேரி என் காதலி எனவும் சொல்லலாமா? நிச்சயமாக இன்று அப்படி சொல்ல முடியாது. அப்படியாயின் நேற்றுவரை அவ்வாறு சொல்லப்படக்கூடியவளாக இருந்தாளா? பூட்டிய அறையொன்றும் முகம் புதைக்க தலையணையொன்றும் தேவை அழுது தீர்ப்பதற்கு.

அவள் என்னை ஏமாற்றினாளா? அல்லது நான் அவளிடம் ஏமாந்தேனா? அல்லது இரண்டுமா? ஏமாற்றத்தின் தண்டனையின் ஒருபகுதி மட்டுமே ஏமாற்றியவனுக்கு. மிகுதி ஏமாறியவனுக்கு. இங்கே எனது பகுதியை நான் அனுபவிக்கிறேன்.

அவளின் அறிமுகம் நட்பானது. நட்பு நெருக்கமானது. நெருக்கம் காதலானதா? அல்லது அறிமுகம், நட்பு எல்லாம் பொய்யாக இருந்தனவா? இவையெல்லாம் எனக்கு இப்போ புதிய குழப்பங்கள்.. தேவை தீர்வு அல்ல. முடிவில் ஒரு மாற்றம் கிடைக்குமா? அது அவசியமா? உற்று நோக்கினால் அதுவும் அவசியமில்லை.

இப்போது தான் தொலைபேசி அழைத்திருந்தது. அழைப்பு இலக்கத்தை பார்த்த போது, அது அவளுடையது என்பது புரிந்தது. எடுக்க முடியவில்லை, எடுக்க கூடாது, எடுக்கத்தேவையில்லை, ஆனால் எடுக்க விருப்பம்தான். அவசியம் தனக்கு எடுக்கட்டாம். தொலைபேசியில் பதித்திருந்தாள். தொடர்பு கொள்ள வேணுமா அல்லது அவசியம் இல்லையா என்று ஒரு குழப்பம். உண்மையில் குழப்பங்கள் முடியவில்லை.

வீட்டை விட்டு வெளியேற விருப்பமில்லை. பசிக்கவில்லை. பதியவற்றுக்கு முகம் கொடுக்க முடியாமைதான் காரணமோ தெரியவில்லை. பழையவற்றை இரை மீட்பதில் ஒரு சுகம், மீட்கிறேன். மீண்டும் மீண்டும் மீட்டு அதில் ஒரு சுகம் காண்கிறேன்.

எனக்குள்ளே இரண்டு மனம். ஒன்று நிறுத்திவிடு, தொடராதே! என்றது. மற்றையது இது வெறும் ஊடல்தான் என்றது. உண்மை எதுவென்று எனக்கு புரியவில்லை. பின்னையதுதான் உண்மையாக இருக்க வேணும் போல் இருந்தது. அப்படியானால் உடனே அவளுக்கு தொலைபேசி எடுக்கலாம் தானே.

தொலைபேசியை எடுத்தேன். ஒவ்வொன்றாக ஆறு இலக்கங்களும் சுழற்றப்பட்டுவிட்டன. ஏழாவது இறுதி ஒன்று இறுதியை சுழற்றுவதற்குள் ஏதோ குழப்பம்.

அவள் வெறும் மன்னிப்பு சொல்ல மட்டும் விரும்பியிருந்திருக்கலாம் தானே. அது எனக்கு இப்போது எந்த மூலைக்கு உதவும். அதைவிட நேற்றைய உச்சக்கட்டமே இறுதியானதாக இருப்பது நலலம். அது ஒரு உறுதியான முடிவு. அதை ஒரு வளவள முடிவாக்க விருப்பமில்லை. இறப்பரைப்போல இழுத்தடித்து முடிக்க இஷ்டமில்லை. முயற்சியை கைவிட்டேன்.

எங்காவது போகவேணும் எதையாவது செய்ய வேணும். உண்மையில் எல்லாவற்றையும் மறப்பதற்கு வழிவேணும் எனது அறையில் தனிமையில் இருப்பதும் நல்லதல்ல என தோன்றியது. Scarborough Center Mall இற்கு போக உத்தேசம் Rainbow Village இல் இருந்து தூரம் அதிகமில்லை.

தேவையான உடுப்புகள் வாங்க மனமில்லை. படம் பார்க்கவும் இஷ்டம் இல்லை. Mall ற்குள் ஓடித்திரியும் குண்டு குண்டான குழந்தைகளை ரசிக்கலாம் போலிருந்தது. எனது உடமைகள் போல் ஒரு பிரமை. கொடுத்து வைத்த பெற்றோர். பார்த்தாலே பசிதீரும் அந்த சுகமும் பொழுதில் அற்றது. வீட்டுக்கு திரும்பினேன். இன்று வெள்ளி, சனி, ஞாயிறு இரண்டையும் எப்படி கடத்துவது? அழுந்தி அழுந்தி நோகவேண்டியதுதானா?

வழியில் எடுத்துவந்த Pizzaவை விரித்துவைத்து உண்ண ஆரம்பித்தேன். அந்த வாசத்தில் கொஞ்சம் சுகம். உடனடியாகவே தொலைபேசி இலக்கத்தை மாற்றிவிட்டால் நல்லம் போல் ஒரு கருத்து தோன்றியது. கருத்தை யோசிக்கும் போதே மனதுள்

23 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழரின் வன்முறைக் கலாச்சாரம்

**வன்முறையில் நம்பிக்கை இன்று முளைத்ததல்ல, தமிழரசுக் கட்சியும் பின்னர் கூட்டணியும் தங்கள் மத்தியிலிருந்த இளைஞர்கள் இதில் நம்பிக்கை வைத்து செயல்பட்ட போது அதைக் காணாதவர்கள் போல் தங்கள் தலைகளை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர். அவர்களையே அது அழிக்கும் நிலை வருமென்று அன்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சத்தியாக்கிரகங்களையும் சாத்வீகப் போராட்டங்களையும் சத்தியத்திலும், அகிம்சையிலும் உண்மையாகவே நம்பிக்கை வைக்காமல் அரைமனது டன், ஆத்மபலத்தில் நம்பிக்கை வைக்காமல், செயல்பட்டபடியால் ஏற்பட்ட விளைவுதான் அது. அமிர்தலிங்கத்தை 'தளபதி' என்றும் தமிழரசுக் கட்சிக்காரரை 'பாசறை'யில் வளர்ந்தவர்கள் என்றும் போராட்டச் சொற்களும், இரத்ததிலகம் இட்ட செயல்களும் யோகேஸ்வரன் வன்முறையில் இறங்கிய இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததும் சிவசிதம்பரம் போன்றவர்கள் வழக்கு பேசியதும் அவர்களும் வன்முறையில் இஷ்டம் உள்ளவர்கள் என்பதையும், அதற்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் காட்டுகின்றன.**

ஆயுதமேந்திய புரட்சியின் மூலம் அரசைக் கைப்பற்றலாம் என்றார் மாக்ஸ். தொழிலாளர் விவசாயிகளை நம்பினார். ஒரு சில நகரப்புற கெரில்லாக்கள் மூலம் கியூபா அரசைக் கைப்பற்றினர் கஸ்ரோவும் செகுவேராவும் இன்னும் சிலரும். அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அதை இலங்கையில அறிமுகப்படுத்தினார்கள். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்த ஜே.வி.பியினர். "அடித்து விட்டோடும்" அம் முறையை 1970 நடுப்பகுதிகளில் துவங்கினார்கள் தமிழ் இளைஞர்கள்.

வன்செயல்கள் இயக்கங்களாகி இயக்கங்களுக்குள் வன்முறையும் இயக்கங்களுக்கிடையில் வன்முறையும் நடைபெற்று வன்முறையை விடமுடியாத ஓர் இக்கட்டான நிலை- புலி வாலைப்பிடித்த நிலை- ஒரு நச்சு வட்டம் (VICIOUS CIRCLE) ஏற்பட்டிருக்கிறது. அதற்கேயுரிய (DIALECTICS) முரண்- எதிர்முரண் வளர்ச்சி சுழற்சிமுறை வந்து சேர்ந்திருக்கிறது. வன்முறை ஒரு தீவிரவாத மத (CULT) வழிபாடாகவே தமிழ் இளைஞர், பலருக்கும் வந்திருக்கிறது. அவர்கள் பலம், வீரம் வாழ்வின் தத்துவம், இருப்பு, வன்முறையில் தான் தங்கி இருக்கிறது என்ற நிலை வந்திருக்கிறது. அது வழியாக இருந்த நிலைமாறி அதுவே முடிவாகவும் நோக்கமாகவும் வந்துவிட்ட பரிதாபகரமான நிலை இறுதியில் (NI-HILISM) சூனிய நிலையை அழிவு நிலையை விரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்த வடிவத்தை எடுக்கும் போக்கும் திசையும் தெரிகிறது.

வன்முறையில் நம்பிக்கை இன்று முளைத்ததல்ல, தமிழரசுக் கட்சியும் பின்னர் கூட்டணியும் தங்கள் மத்தியிலிருந்த இளைஞர்கள் இதில் நம்பிக்கைவைத்துசெயல்பட்டபோது அதைக் காணாதவர்கள் போல் தங்கள் தலைகளை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர். அவர்களையே அது அழிக்கும் நிலை வருமென்று அன்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சத்தியாக்கிரகங்களையும் சாத்வீகப் போராட்டங்களையும் சத்தியத்திலும், அகிம்சையிலும் உண்மையாகவே நம்பிக்கை வைக்காமல் அரைமனது டன், ஆத்மபலத்தில் நம்பிக்கை வைக்காமல், செயல்பட்டபடியால் ஏற்பட்ட விளைவுதான் அது. அமிர்தலிங்கத்தை 'தளபதி' என்றும் தமிழரசுக்கட்சிக்காரரை 'பாசறை'யில் வளர்ந்தவர்கள் என்றும் போராட்டச் சொற்களும், இரத்ததிலகம் இட்ட செயல்களும் யோகேஸ்வரன் வன்முறையில் இறங்கிய இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததும் சிவசிதம்பரம் போன்றவர்கள் வழக்கு பேசியதும் அவர்களும் வன்முறையில் இஷ்டம் உள்ளவர்கள் என்பதையும், அதற்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் காட்டுகின்றன. காந்தீயத்தில நம்பிக்கை வைத்த இவர்களால் இதற்கு எப்படி உடன்பட முடிந்தது. காந்தீயகால காங்கிரஸ் கட்சி வக்கீல்கள் பகவத் சிங்கிற்காக வாதாட சம்மதிப்பதிருப்பார்களா? சுபாஸ் சந்திரபோஸின் நடவடிக்கைகளுக்கு உதவி இருப்பார்களா? காந்தியிடம் இருந்த ஆத்மபலம், இறை நம்பிக்கை இவர்களிடம் இல்லாமல காந்தீயத்தைக் கடைப்பிடிக்க முனைந்தார்கள். எஸ்.ஜே. செல்வநாயகம் "இனிமேல் இறைவன்தான் தமிழர்களை காப்பாற்ற வேண்டும்" என்று ஓர் இடத்தில் சொன்னார். அதுவரை யாரை நம்பி இவர் சத்தியாக்கிரகங்களையும், அகிம்சாவழி போராட்டங்களையும் நடத்தினார்?

"இறைவன் என்னை வழி நடாத்துகின்றான். அவன் துணை இருக்கும் வரை யான் எவரையுமே நம்பி இந்தச் செயல்களில் இறங்கவில்லை" என்றுசொன்ன காந்தி எங்கே? கடவுள் நம்பிக்கையை காலத்துக்கு காலம் தேவையிருந்தால், அல்லது இயலாமல் போனால் மாத்திரம் உபயோகிக்கும் நம்மவர் எம்மை வழிநடாத்துவது தான் எம் தலைவிதி.

இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன? இறைவனில் நம்பிக்கை அற்றவர்கள் எம்மை வழி நடாத்தி வந்துள்ளார்கள். வன்முறையை மனத்தளவில் கைவிடாதவர்கள் எம் தலைவிதியை நிர்ணயித்திருக்கிறார்கள். எப்படி சிங்கள பௌத்தர் பௌத்தத்தில் நம்பிக்கை அற்றவர்களோ, பௌத்த குருமார் சிங்கள படையெடுப்புக்களில் முன்னணியில் வரிசையாகச் சென்றனரோ அப்படி தமிழர்களும் தமிழ்த்தலைவர்களும் வன்முறையில் என்றுமே நம்பிக்கை இழந்தவர்கள் அல்ல.

இன்னுமொரு சிறந்த உதாரணம் அன்றைய யாழ்ப்பாண

**மு. சுப்பிரமணியம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடி

www.tamilarangam.net

த்தின் சிறந்த உதாரணம் அன்றைய யாழ்ப்பாணத்தின் மாநகர சபைத் தேர்தல்கள் அடாவடித்தனங்களும், சண்டியர்களை (ஆரியகுளம், பாசையூர், கரையூர், கொட்டடி முதலியன) கைக்குள் போட்டுக் கொண்டு சட்டத்தரணிகள் குறிப்பாக கிறிமினல் சட்டத்தரணிகள் (அல்பிரட் துரையப்பா அதில் ஒருவர்) அரசியலை நிர்ணயித்தது அன்றைய யாழ்ப்பாணம்.

அந்த நோய் தான் தமிழர்களின் தொற்று நோயாக இன்று பரிணமம் பெற்றுள்ளது. வன்முறைக் குணம்சம் தமிழர்களிடம் நெடுங்காலமாக இருந்து வருவதை வேறு சமூக விடயங்களிலும் அறியலாம். உதைபந்தாட்ட போட்டிகள், காணிப்பிரச்சனை, வேலிப்பிரச்சனை, கதியால் பிரச்சனை, கோயில்பிரச்சனை, சாதிப்பிரச்சனை அனைத்தையுமே வன்முறையால் தீர்க்க முற்பட்டது சமூகம் நம்முடையது, அந்தக் கலாச்சாரப்பண்பு வெளியே தெரியாமல் இருந்ததற்கு அவர்களது பொருள்நலம் பேணும் சுயநலப்பண்பு தான் காரணம் இப்போ தம் உடமைகளைக் கூட காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டவுடன் மறைந்திருந்த வன்முறைப் பண்பு மேலோங்கி விட்டது. எதையுமே வன்முறையால் சாதிக்க வேண்டும், முடியும் என்ற எண்ணம் மனதில் ஆழப்பதிந்து விட்டது தொற்று நோயாகப் பரவி விட்டது.

வன்முறைப் பண்பு மேலெழுந்து நிற்கும் எம்மிடம் தாமச, ரயஸ் குணங்கள் அதிகம் செயல்படும். அம்மிருக குணங்கள் தான் எம் நடவடிக்கைகளில் அதிகம் காணப்படும். ஆகவே பரிணமவளர்ச்சியில் தமிழன் எந்த இடத்தில் நிற்கிருன்? நாகரீகம் புறத்தில் மட்டும் தங்கி இருக்கவில்லை, அகத்திலும் உள்ளது. என்று வன்முறையில் நம்பிக்கை குறைந்து இறுதியில் அற்றுப் போகின்றதோ அன்று தான் மனிதன் ஆகும் வளர்ச்சியில் தமிழன் சென்று கொண்டிருப்பான்.

இலங்கையை விட்டு அகதிகளாக வெளியேறிய அத்தனைபேரும் வன்முறையில் நம்பிக்கை இழந்து வெளியேறியவர்கள் அல்ல. தங்கள் உயிரை உடமைகளை, குடும்பத்தை, பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்தவர்கள் தான் அநேகர். அவர்களுக்கு மொழி, சமயம் என்ற மனிதர்களால் தேவை சூழ்நிலைக் காரணிகளால் ஆக்கப்பட்ட விடயங்களை விட, சமாதானம் முக்கியம். உயிர் உடமை, குடும்ப நல்வாழ்வு ஆகியவற்றிற்கான பாதுகாப்பு முக்கியம் அன்று முஸ்லீம்கள் ஆட்சியில் இந்தியாவில் முஸ்லீம்களாக மாறியவர்களும் சரி, இந்தியாவிலும் இலங்கையிலும் ஐரோப்பியர் ஆட்சியில் கிறிஸ்தவர்களாக மாறியவர்களும் சரி இவர்கள் தான் உண்மையான, எளிமையான, சாதாரண சராசரி மனிதர்கள். இவர்கள் தான் உலகில் அநேகர் ஓரளவுக்கு வசதி படைத்தவர்களும் சந்தர்ப்பம் கிடைத்தவர்களும் வெளியே றிஞர்களே தவிர அங்கிருப்பவர்கள் மட்டும் நெருக்கடிகளுக்குள் இருந்து தங்கள் உயிரை விட விருப்பம் உள்ளவர்கள் என்று கூறிவிட முடியாது. சமாதானம் அவர்களின் இலட்சியம், உதாரணமாக சண்டை முடிந்துவிட்டது, சமாதானம் வந்துவிட்டது என்று குதூகலித்துக் கொண்டு இந்திய சமாதானப்படை வந்துவிட்டபோது இனிப்பும் சிகரட்டும் கொடுத்தும், மாலை போட்டுக் வரவேற்ருர்களே, அவர்கள் தான் இந்த சராசரி மனிதர்கள் சமாதானத்தை விருப்புவர்கள் அதற்காக தான் தங்கள் உயிர் உடமைக்கு அடுத்தான நாட்டை விட்டு மனம் இல்லாமல் வெளியேறி வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். அந்த நாடுகளிலும் கொலையாளிகளின் கையால் உயிர் இழக்க நேரிடும், வன்முறை பாதிப்புக்கள் ஏற்படும், அதுவும் தமிழர்களால் ஏற்படும் என்று கண்டால் தமிழ் என்றும் தமிழர்கள் என்றும் அவர்களே தங்களை இனம் காட்டிக் கொள்ளத் தான் வேண்டுமா? தனிய ஆங்கிலம் படித்து ஆங்கில கலாச்சாரத்தை தமதாக்கிக் கொண்ட சில ஐரோப்பிய இனங்களைப் போலவோ, அமெரிக்க கறுப்பர்கள் போலவோ, கயானு, ரிறினிடாட் இந்தியர் போலவோ எமது இனமும் மாறினுல் பயன் அதிகம் என்பதை அறியமாட்டாதவர்களா? உதாரண மாக எதிர்காலத் தமிழ் பரம்பரைக்கு தமிழ்மொழி பேச, எழுத, வாசிக்கத் தெரியாத பரம்பரையினருக்கு அப்படி ஆவது பெரிய காரியமல்ல, இப்போதே கறுப்பர்களுடைய நடை உடைகளை பாவனை பண்ணுகிருர்கள். இசையை அசை போடுகிருர்கள். நடனங்களை ஆடுகிருர்கள் நடன அரங்குகளுக்குச் சென்று இரவு இரவாக 'டிஸ்கோ ஆடுகிருர்கள்.

தமிழ் நாடகங்களுக்கும் சினிமா கலை, இசை, நடன, விளையாட்டுகளுக்குச் சென்ருல் அங்கு, அடி சண்டை, கத்திக்குத்து இடம் பெறுகிறது பாடசாலைகளில் வாள், துவக்கு யுத்தம் நடை பெறுகிறது. கோயில் பூசாரிக்கு அடி உதை. யாழ்ப்பாணத்தில் எங்கோ இருக்கும் ஊர் குறிச்சிகள் சொல்லி ஊரார் சண்டை. ஊருக்கு ஊர் பெயரில் விளையாட்டுப் போட்டி திருவிழாக்கள். கூட அப்படியே தமிழ் நூல்நிலையத்தை எரிக்கிருர்கள். ஆட்களைக் கொல்லுகிருர்கள். ஆட்கடத்துகிருன், தூள் விற்கிருன், களவு எடுக்கிருன். குறுக்கு வழிகளில் பணம் சேர்க்கிருன். அரசை ஏமாற்றுகிருன் கோயில்களில் இலஞ்சமும் ஊழல்களும் சங்கங்கள் வைத்து தமிழைக் காட்டி வயிறை வளர்க்கிருன். பெண்களை பிள்ளைகளை நட்டாற்றில் விட்டு ஓர் ஊராகத் திரிகிருன். பிளவுகளையும் பிரச்சனைகளையும் சாதிகளையும் சமயங்களையும் அப்படியே தக்க வைக்க நினைக்கிருன். அங்கிருந்த மாதிரியே இங்கும் காணிச்சண்டையும் வேலிச்சண்டையும், கதியால சண்டையும் துவங்கி விட்டால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை. பழம் பெருமையில் மட்டும் தமிழன் மார் தட்டவில்லை. பழம் சிறுமைகளைக் கூட காலம் காலமாக சமுத்திரம் எத்தனை கடந்தாலும் கொண்டு திரிகிருன். தற்கால தமிழன் பெருமையடைய தமிழன் என்ன செய்கிருன்?

தமிழ்ப் பெண்கள் கோயிலுக்கு போக முடியாது, கலை விழாக்களுக்குப் போகமுடியாது, சினிமாவுக்குப் போக முடியாது, பாடசாலைக்குப் போக முடியாது, கோயிலில் அமைதியாக பூசை நடந்து கொண்டிருக்கையில் 'ஐ லவ் யூ' என்று கத்தித்தான் வக்கிரத்தைக் காட்டுகிருன். தமிழ்ப்பெண் பிள்ளைகள் மீது பண்பு அற்று 'சேட்டை' விடுகிருர்கள். பலாத்காரமாக தூக்கி கொண்டு போகிருர்கள். பயமுறுத்துகிருர்கள். தூஷணவார்த்தைகளால் வாய்க்கு வந்தபடி ஏசுகிருர்கள். காதல் செய் என வற்புறுத்துகிருர்கள் தொலைபேசி செய்து சீழ்க்கை அடிக்கிருர்கள் விசிலடிக்கிருர்கள் பெற்ருேரைப்

www.tamilarangam.net

பேசுகிறார்கள் குடித்துவிட்டு சண்டை பிடிக்கிறார்கள். துவக்கு எடுத்து கோஷ்டிச் சண்டைகள் செய்கிறார்கள். இவை எல்லாம் செய்வது யார்? தமிழர்கள்! யார் மீது செய்கிறார்கள்? தமிழர்கள் மீது, தமிழ்பெண்கள் மீது.

இவை சீரழிந்த உக்கிப்போன தமிழ்ச் சமூகத்தின் நோயின் அதி உக்கிரத்தாக்கங்களும், பிதற்றல்களும் கூக்குரல்களும் அடையாளங்களும் தான். நோய் முற்றிய நிலை இழிவுற்ற நிலை அவலக்குரல்.

இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள் கூட நடுவுநிலையையோ சமாதானத்தையோ நாகரீகத்தையோ, பண்பாட்டையோ அறிவையோ நாடாத விழுமியங்களைக் கொண்டுள்ளன. வன்முறையை எதிர்த்து எழுதாத, வன்முறைக்குத் தீனி போடும் யுத்த நிருபர்கள். வீர காவியங்களையும் கதாநாயகர்களையும் விதந்து போற்றும் பத்திரிகாதர்மங்கள்? மாவீரர்களையும் வீரர்களையும் உயிர்களை அழிப்போர்களையும் கொலைஞர்களையும் தற்கொலையாளிகளையும் ஏற்றிப் போற்றும் படம்போடும் பத்திரிகைகள் கவிஞர்கள். நோய் முற்றிய சமூகம் என்று உணராத ஒரு நோய்ச்சமூகம்.

பரவலாக தமிழ் இளைஞர்களைக் கண்டு தமிழர்களே ஒதுங்கும் நிலை அதிலொன்று அதிகரித்து வருகிறது. தமிழ்ஈழத்தையும் வீரத்தையும் இங்கு காட்டுகிறார்கள் தமிழ் ஈழம் என்ற அமைப்பு உருவாக்கினால் இப்படித் தான் நடப்போம் எனக் காட்டுகிறார்களா? இவர்களை அடக்க ஒரேவழி துவக்கும் சர்வாதிகாரமும் தானா என்பதை காட்டுகிறார்களா? ஆயுதம் தாங்கிய ஓர் இயக்கத்தை அடக்க ஆயுதம்தாங்கிய இன்னுமொரு இயக்கம் அவசியம் தானா என்பதை உணர்த்துகிறார்களா?

தங்களைத் தாங்களே அழிக்கும் இனமாக தமிழினம் மாறிக் கொண்டிருக்கிறது. அந்த இனத்தின் பெயரை சொல்லவே கூச்சப்பட வேண்டிய நிலை வந்து கொண்டிருக்கிறதே?

இந்த நாட்டுக்கு கனடாவுக்கு உலக நாடுகளின் மூலை முடுக்குகளெல்லாம் இருந்து அகதிகளாக வந்திருக்கிறார்கள் நாங்களும் தான் அகதிகளாக வந்தோம் பல பொய்களையும் புனைகதைகளையும் சொல்லி அரசை நம்ப வைத்தோம் ஆனால் நடப்பதோ அகதிகள் போலல்ல. இந்த நாட்டில் பிறந்த ஆதிக்குடியினரைப் போல பலவழிகளில் நடக்கிறார்கள். தங்கள் திறமைகளை அறிந்து இந்த நாட்டுக்கு தங்களை வரவேற்று ஏற்று நடாத்தியவர்கள் போல நினைக்கிறார்கள். இங்கு வந்த பிற நாடுகளான ஈரான் சோமாலியா, ஆப்கானிஸ்தான் மக்கள் இப்படி நடக்கிறார்களா? ஆபிரிக்கரை 'காப்பிரிகள்' என்று கூறி ஒதுக்கி விடத் துணியும் Stereotype மனப் பான்மை கொண்ட நாம் நூலகத்தை எரிக்கும் காப்பிரிகள் (Kaffir). நாகரீகம் அற்றவர்கள் நாங்களா? அவர்களா? தங்களுக்குள் இப்படி கொலைகளைச் செய்கிறார்களா? கிரேக்கரும் மசிடோனியரும் பிடித்து தின்னக்கூடிய அளவுக்கு எதிரிகளாயிருந்தாலும் இப்படி வன்முறையில் ஈடுபட்டு தங்கள் சமூகத்தின் பெயரை வன்முறைச் சமூகம் என்ற பெயரெடுக்கும் கொடுமைக்குள் ஆளாக்குகிறார்களா? தங்கள் வீரப் பிரதாபங்களையும் ஆணவத்தையும் காட்டுவது தங்களுக்குள் மட்டும் தான். அதனால் அது இந்தப் பரம்பரையுடன் முடிந்து, அடுத்த பரம்பரை தமிழர் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியாத தலைகுனிவால் நினைக்க வழிகோலும் ஒரு பரம்பரையை உருவாக்கும் நிலைவளர இடம் கொடுக்கும். அத்துடன் தமிழனின் "வீரமும்" போய்விடும். தமிழும் போய்விடும் கிழக்கிலிருந்து வந்து ரோம சாம்ராச்சியத்தை சிதைத்து அழித்தவர்களை (Barbarians) காட்டுமிராண்டிகள் என்று அழைத்தார்கள். அதேபோல மேற்கே உள்ள ஜனநாயக நாடுகளுக்கு வந்து எமது வன்முறைக் கலாச்சாரத்தை புகுத்துகிறோமா? எங்களை காட்டுமிராண்டிகள் என்றழைக்க ஒருப்படுவோமா?

**இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள் கூட நடுவுநிலையையோ சமாதானத்தையோ நாகரீகத்தையோ, பண்பாட்டையோ அறிவையோ நாடாத விழுமியங்களைக் கொண்டுள்ளன. வன்முறையை எதிர்த்து எழுதாத, வன்முறைக்குத் தீனி போடும் யுத்த நிருபர்கள். வீர காவியங்களையும் கதாநாயகர்களையும் விதந்து போற்றும் பத்திரிகாதர்மங்கள்? மாவீரர்களையும் வீரர்களையும் உயிர்களை அழிப்போர் களையும் கொலைஞர்களையும் தற்கொலையாளிகளையும் ஏற்றிப் போற்றும் படம் போடும் பத்திரிகைகள் கவிஞர்கள். நோய் முற்றிய சமூகம் என்று உணராத ஒரு நோய்ச்சமூகம்.**

தமிழனை தமிழனாக இருக்கவிடாமல் தள்ளி வைக்கச் செய்வது தமிழனாகவே இருக்கிறான் கயானா ரினிடாட், மொறீசியஸ், பிஜித்தீவுகள் இந்தோனேசியத் தீவுகள், மலேசியா, சிங்கப்பூர் தென் ஆபிரிக்கா நாடுகளில் குடியேறிய தமிழர் மொழி எங்கே? அவர்கள் புறச்சூழலின் தாக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தங்கள், மொழி ஓரளவு சமயம் இவைகளை இழந்தார்கள். இங்கு வந்தவர்கள் தனது அகச்சூழல் தமிழ் சமூகத்தால் தமிழை மறக்க தமிழனாக இருக்க முடியாமல் ஏற்படுகின்றதே. மறைந்து ஒழிந்து வாழ வேண்டி ஏற்படுகின்றதே. தமிழ் இயக்கங்களுக்கு பயந்து சிங்களப் பகுதியில் தமிழர்கள் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தார்கள். ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு தமிழ் நாட்டிலும் வாழ முடியாதநிலை ஏற்பட்டது. மேல் நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். மேல் நாடுகளில் தமிழனால் தமிழனாக வாழமுடியாத நிலை ஏற்பட்டால் மேல் நாட்டவனாக மாறக்காலம் செல்லாது. தமிழை மறக்க ஒரு பரம்பரை போதும். தமிழைக் கற்பதால் வரும் பயனிலும் பார்க்க மேல் நாட்டு மொழியைக் கற்பதால், சமயத்தைக் கடைப் பிடிப்பதால் வரும் பயன் (பொருளாதார) அதிகம் என்பதை தமிழுக்காக உயிரை விடுபவர்கள் அறிய வேண்டும் பெரும்பான்மை யோர் சராசரி மனிதர்கள் என்பதை உணரவேண்டும் யாழ்ப்பாணத்தில் சாதிக் கட்டுப்பாட்டால் மட்டும் சமயம் மாறவில்லை, பலாத்காரத்தால் மட்டும் சமயம் மாறவில்லை, ஆங்கில மொழியைப் படிக்கவில்லை, நல்ல பாடசாலையில் படிப்பதற்காக அரசாங்க தொழில் பார்ப்பதற்காக மாறியவர்களும் இருக்கிறார்கள். அவர்களும்தான் இன்றைய இஸ்லாமிய கிறிஸ்தவ மக்கள் இன்று சமயத்தை மாற்றிக் கொண்டிருப் பவர்களும் பயன் கருதித்தான். முக்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதியவர்கள் குறைவு.

ஆகவே உயிருக்கு ஆபத்து என்றால் சமயத்தை மொழியை மாற்றுவது பெரிய விசயமல்ல அதுவும் மேல் நாடுகளில் வசிக்கும் தமிழர் மாறுவது அவ்வளவு பெரிய காரியமல்ல. உண்மையான தமிழர்கள் அவர்களல்ல என்று கூறி ஒதுக்கி விடுவது கையாலாகத்தனமும், அறியாமையும், ஆணவமும், பொறுப்பற்றதுமாகும்.

தமிழ் நாட்டில் அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ், தமிழ் என்று தொண்டை கிழிய கத்துவது பெரிய விஷயமுமல்ல. வீரமுமல்ல. நாற்புறமும் புறச்சூழலினால் அமுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பிற இடங்களில் தமிழனாக இருப்பதும் தமிழை கலாச்சாரத்தை வளர்ப்பதும் தான் பெரிய விசயம். எதிர் நீச்சல் சக்தியும் கிரியா சக்தியும் அதற்குத்தேவை. அவர்களை தீண்டாதவர்களாக ஒதுக்கி விடுவதானால் தமிழ் அழிந்துபோகும்.

தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் தற்கொலை சாய்வு (Tendency) உள்ளவர்கள் தங்களுடன் மற்றவர்களும் அழிய வேண்டும் என்று நினைக்கும் மனநோய்ச் சாய்வு உள்ளவர்கள். அது மனிதநேயமற்ற மனநோயாளர்களின் குணம். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற விடாமல் தடுத்துவைத்திருக்கும் 'பாஸ்' முறை, மக்கள் வாழும் இடங்களில் மறைந்து நின்று எதிரியைத் தாக்கிவிட்டு ஓடிமறைந்து விடுவது, மக்களை தங்கள் நோக்கங்களுக்காக வியூகமாக முன்விட்டு தாங்கள் அதற்குள் மறைந்து தாக்குவது, ஆஸ்பத்திரியின் மீது குண்டு போடுவது, மக்கள் வாழும் இடங்களில் குண்டு போடுவது இரண்டாம் உலகம் முடிவடையும் தறுவாயில் நேச நாடுகளில் ஜேர்மனியில் மக்கள் வாழும் இடங்களில் குண்டு போட்டதான செய்தி பிந்தியது. நாகசாகி, ஹிரோசிமாவில் போட்ட குண்டுகள், பாடசாலைகளில் போடும் குண்டுகள் மனித நேயமுள்ளவர்கள் செய்வது அல்ல மனித எதிரிகள் செய்வது.

தந்திக் கம்பத்தில் துரோகிகளையும் கள்ளர்களையும் கட்டி பகிரங்கமாக வைத்துச் சுடுதல் (தட்டுதல்) அதைப் பார்வைக்கு வைத்திருத்தல் ஒரு தடுப்பு நடவடிக்கை என்று பலர் நினைக்கலாம். அது அநாகரீகமானதும் மன நோயாளருடைய மனத்திலிருந்து வெளிப்படும் குரூரத்தனம் என்பதையும் அறிய வேண்டும். ஒரு (Maniac) மனநோயாளியின் செயல்.

உடலை மண்ணெண்ணை ஊற்றி பற்ற வைத்து தானே எரிந்து கொள்வது Self molestation அது Masochistic செயல். அதே போல சைனட்டை அருந்தித் தற்கொலை செய்வதும். அடி உதைபட்டு உண்மையினைக் கக்கி காட்டிக் கொடுக்காமல் இருப்பது என்ற உண்மை ஒருபுறம் இருக்க அதில் கோழைத்தனமும் Masochism உம் தன்னம்பிக்கை அற்றமையும்– அடி உதையால் சொல்லி விடுவோம் என்ற அவநம்பிக்கை– சேர்ந்திருக்கிறது என்பதும் உண்மை. தன்னில் தன் கொள்கையில் தான் நம்பும் இலக்கில் உண்மையான நம்பிக்கை வைத்திருப்பவன் இக்கட்டான நிலைமைகளில் கூட உடலுபாதைகளை கூட தாங்கிக் கொள்ளும் சக்தி வரும் என்பது ஹிட்லரின் சித்திரவதை முகாம்கள், ஸ்ராலின் முகாம்களில் நாம் படித்து படங்கள் பார்த்த உண்மை. அப்படிப்பட்ட வீரர்கள் தான் தங்கள் நோக்கத்திற்காக எந்தக் கட்டத்திலும் உயிரை வைத்திருக்க வேண்டியவர்கள். அப்படி அனுபவித்த பின்னரும் அந்தக் கொள்கையில் நிற்பார்களேயானால் மற்றவர்களுக்கு அவர்கள் நம்பிக்கையூட்டுபவர்கள் ஆவர். மாவீரர் என்று பட்டம் பெறுவதற்காக இழக்கக் கூடாத உயிரை தியாகம் செய்ய துணிந்தவர்கள் தங்கள் உயிரைக் காட்டி மற்றவர்களின் அனுதாபத்தை பெற விரும்புவார்கள் என்றும் கூறலாம். மனம் சம்பந்தப்பட்ட ஆராச்சியாளர்களுக்கு இது ஒரு புதிய ஆய்வுச்செய்தி (phenomenon). ஜப்பானியர்கள் இதன் வழிகாட்டிகள் பேரரசனுக்காக, நாட்டிற்காக உயிரை விடும் ஒரு மரபு அங்கிருந்தது. அது மனிதனின் அந்த செயல் ஒரு Megalomaniac இன் தீராத நோய்க்கு மாபெரும் திட்டத்திற்கும் கனவுக்கும் தீனி போடுவது ஆகாதா? என்பது ஆராய்ச்சிக்குரியது.

தமிழர் சிங்களவராகியுள்ளனர். சிங்களவர் தமிழர்களாகியதற்கு சான்றுகள் இல்லை புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு தமிழ் மக்கள் சிங்களவர் ஆகியது அண்மைக்கால வரலாறு. கல்வி வசதி அரசாங்க சலுகைகள், பதவிகள், பெரும்பான்மையினரின் பாதுகாப்பு ஆகியவை அதற்குரிய காரணங்கள் வன்முறை இப்படியான மாற்றத்திற்கு ஒரு catalyst துரிதப்படுத்தும் காரணியாகும்.

பேனா பிடித்தவனுக்கு எதிராக பேனாவால் சந்திக்காமல் கத்தியை துவக்கை கைக்குண்டைத் தூக்கியவனை பேனா வென்றுவிடும். பிரஞ்சுப்புரட்சி, ரஷியப்புரட்சி, சோவியத் உடைவு ஆகியவற்றிற்கு ஆரம்பமே பேனா பிடித்தவர்கள் தான். வரலாற்றைக் கற்பது வரலாற்றிலிருந்து பாடங்களைப் அறிவதற்கே, ஏற்கனவே வரலாற்றில் விட்ட பிழைகளைத் திரும்பவும் விடாமல் இருப்பதற்கே.

யாழ் நூலகத்தை எரித்து யாழ்ப்பாணத்தானின் கல்வியால் வரும் அறிவையும் செல்வத்தையும் அழித்துவிடலாம், அவன் மூளையைப் பொசுக்கி விடலாம் என்ற பொருமையின் குறியீட்டை உடையது. தேடகம் நூலகத்தை எரித்தது. எதன் குறியீடு? அறிவிற்கு, அறிவாளிகளுக்கு நூல்களுக்கு பேனாவுக்கு எதிரான குறியீடு முன்னெச்சரிக்கை காட்டுமிராண்டிச் செயல்.

Give a dog a bad name and hang it என்பது ஓர் ஆங்கில பழமொழி கொல்வதற்கு சாட்டு ஒன்று தேவை. அதற்காக அவனுக்கு ஒரு கெட்ட பெயர் கொடுத்து பின்னர் அவனைக் கெட்டவன் என்று கூறி தூக்கிலிடுதல். இப்படித் தான் எமது அறிவாளிகளுக்கு துரோகிப் பட்டம் கொடுத்து அவர்களை ஒழிப்பது. சபாலிங்கத்தின் கொலை அந்த தொடர் சங்கிலியின் ஓர் வளையம். கோர்வை நீழுமா என்பது பலரின் மனதில் எழும் ஓர் கேள்வி, வன்முறைகளில் நம்பிக்கை வைத்து அதை ஒரு வழியாகக் கூடக் கொள்ளாமல் முடிவாகவே கொண்டு இயங்குவோரைப் பற்றி நாம் என்ன சொல்ல இருக்கிறது.

கீதையில் கண்ணன் பாரதயுத்தம் வரும் என்றல்லவா சொன்னான். குருஷேத்திரத்தில் அழிந்தவர்களும், அழித்தவர்களும் ஒரே இனம் அப்படி ஒரு தர்மயுத்தமா? நடைபெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீறானது படிப்பகம் மட்டுமல்ல தமிழும் தமிழ் உணர்வுந் தான்!

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்- இது ஆன்றோர் வாக்கு.

வாசிப்புப் பழக்கம் உள்ளவர்க்கே புத்தகத்தின் அருமை பெருமை புரியும்- வாசித்தல் என்பது அறிவு சம்பந்தப்பட்டது. இதனால் தான் சிலர் வாசித்தலை அத்தியாவசிய காரியமாகவே கருதிக் கொண்டு கைக் கொள்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை கல்வி கல்வி என்று கற்பதில் அதி நாட்டம் கொண்டவர்கள் அவர்கள். இதனால் எம் தமிழர் கல்விக் கூடங்களையும், நூலகங்களையும் வாசிகசாலைகளையும் ஏன் புத்தகசாலைகளையும் கண்ணென மதித்தனர்.

இதனால் தான் யாழ் நூலகம் சிங்களச் சிப்பாய்களின் கண்ணுக்குக் குத்தியிருந்தது- இது சிங்கள சிப்பாய்களால் தீயிட்டு நீருக்கிய போது கண்ணீர் விட்ட தமிழர் ஏராளம் ஏராளம். இவ் அதிர்ச்சியை தாங்கிக் கொள்ளாது உயிரே விட்ட அடிகளார் கூட எம் தமிழர்.

இதற்குமேல் எம் தமிழர் கொண்ட புத்தகக் காதல் சொல்லத் தேவையில்லை. ஆனால் கூட எம்மிலும் சில புல்லுருவிகள் இல்லாமல் இல்லை. - அன்று யாழ்ப்பாண தமிழ்ப் புத்தகசாலை தீயிடப்பட்டதன் பதிலடியாக யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்களப் புத்தகசாலையும் எம்மவர் சிலரால் தீயிடப்பட்டது.- சிங்களச் சிப்பாய்களின் புத்தகங்களை மதிக்காத தன்மைக்குத் தாம் சளைத்தவரல்ல எனச் சில தமிழர் நிரூபித்தனர். மீதித் தமிழர் மௌனித்திருந்தனர். அந்த சிங்களப் புத்தகசாலையிலும் எரிந்து சாம்பலானவை சிங்களப் புத்தகங்கள் மட்டும் அல்ல ஆங்கில தமிழ்ப் புத்தகங்களுமே- என்னவெனினும் எரிந்தவை அறிவு சம்பந்தமான புத்தகங்கள். அன்றும் இதை எம்மவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மௌனமாய் இருந்தனர். அந்த மௌனந்தான் இன்று எம்மவர் அறிவுக்கு தீயிட்டுள்ளது.- தேடகத்தை தீயுள் அமிழ்த்தியுள்ளது.

ஆனால் இன்று தீயிடப்பட்டவைகள் தமிழ், தமிழ், தமிழே!

அது யார் பாதுகாத்த புத்தகங்கள், பத்திரிகைகள் என்றாலும் அவை என்ன கருத்துகளை சொல்லியிருந்தாலும் எரிக்கப பட்டவை முழுக்க தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகளே.

இதை எண்ணித் துக்கிக்கும் அதே நேரம் வெட்கிக்கவும் வேண்டியுள்ளது.- ஏனெனில் எரிந்தவை தமிழ்: எரித்தவர் தமிழர்.

எரிந்தவை தமிழ் என்பதற்காக எனினும் தமிழருக்காக, தமிழுக்காகச் சேவை செய்வதாய் கூறிக் கொண்டு கனடிய அரசபணத்தில் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் அமைப்புகள் என்ன செய்து விட்டன- அனுதாபமாவது செய்து கொண்டார்களா?

தமிழ்ப் பண்பாடுகளை கனடியர்களுக்கு காட்ட வேண்டுமெனத் துடியாய் துடிப்பாயும் மாநாடு நடத்தப் போவதாயும் கூக்குரல் போடுவோர் என்ன செய்தார்கள்? அவர்கள் எங்கே?

தமிழுக்கு தமிழ் அகதிகட்கு சேவை செய்து கிடப்பதே தம் பணி எனச் சொல்லிக் கொள்ளும் தமிழீழச் சங்கம் எங்கே போய்விட்டது?

இவர்களது சொகுசில் தேடகம் எரிந்தது தெரிந்திருக்குமோ என்னவோ!

தமிழர் வகை துறை வள நிலையத்தார் தாம் நடாத்தும் தேடகம் தீக்கு இரையானதை 'தமிழர் மத்தியில்' நூல் உதவியுடன் சகல தமிழ் அமைப்புகளுக்கும் அறிவித்ததாயும் விழிப்பு அமைப்பும், சேக்கம் அமைப்பும், இளையநிலா நிறுவனமும் தமக்கு அனுதாபம் சொன்னதாயும் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டு தம் அங்கலாய்ப்பை வெளிப்படுத்தியதாயும் சொன்னார்கள்- ஆறுதலாய் இருந்தது.

ஏனையவை குறிப்பாக தமிழீழச் சங்கம், உலகத்தமிழர் இயக்கம், தமிழர் ஒன்றியம், என்பன ஏன் மௌனம் கொண்டார்கள்?

எனக்கு இவர்கள் மேல நம்பிக்கையீனமாய்ப் போய் விட்டது.

தமிழ்ப் புத்தகங்கள் எரிந்து சாம்பலானதில் இவர்கட்கு மிக்க மனச் சந்தோசமோ?

தமிழர் சிலர் தமிழர்க்காக இவர்களைப்போல் அல்லாமல் எந்த அரச உதவியும் இல்லாமல் சேவையையே நோக்கமாகக் கொண்டு ஆற்றிவந்த சேவை ஸ்தம்பித்துப்போனதில் மனத் திருப்தியா?

அல்லது அந்தத் தீயில் இவர்கட்கும் பங்குண்டா?

அல்லது ஏதோ பயமா?

இக் கேள்விகளில் ஏதோ ஒன்றுக்கான 'ஆம்' அம் மௌனத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.

இங்கு இருந்து கொரியா அமைப்பும், ஆபிரிக்க அமைப்பும், கனேடியரும் ஏன் இலங்கையில் இருந்து ஒன்றல்ல மூன்று சிங்கள அமைப்புகளும் அனுதாபந் தெரிவித்திருக்க, இங்கு அருகில் இருக்கும் தமிழ் அமைப்புகள் (எனச் சொல்லிக் கொள்வன) தமிழ் நூலகம் ஒன்றுக்காக அனுதாபமாவது சொல்லிக் கொள்ள வகை தெரியாமல் போனது வெட்கம், வெட்கம், வெட்கமே!

தேடகம் போன்ற தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் இதர இரு நூலகங்கள் கூட தாங்களுக்கு நாளைக்கு நடந்தால் ...? எனக்கூட எண்ணாமல் மௌனித்திருந்ததுதான் ஏன்?

சில ரொரன்ரோ பொதுசன நூலகங்களில் தமிழ் நூல் பிரிவு மூடப்படப் போகின்றனவே என்று ஆசிரியத் தலையங்கத்தில் கண்ணீர் விட்ட தகவலால் தேடகம் எரிந்ததை ஒரு பொருட்டாய் மதிக்கத்தெரியாமல் போய்விட்டது. எங்கோ துருவம் எடுத்த அகதிகள் மீள் ஆய்வு ஆசிரியரை எவர்களிடமோ இருந்து காபாந்து பண்ணும் கவசம், ஆனாலும் ஒரு ஆறுதல் (யார் அந்த உக்கிரன்?)

தேடகம் எரிப்பு திடீர் ஆத்திரத்தாலோ குடி போதையாலோ, இனத்துவேசிகளாலோ செய்யப்பட்டதல்ல- இது ஒரு மிகத்

-அருண்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டமிடப்பட்டசெயல்.

ஏனெனில் தேடகம் ஒரு இட நெருக்கடியுள் அதுவும் ஒரு கதவு தாண்டி ஒரு ஒடை தாண்டி உள்ளாக அமைந்துள்ளது. –ஆக தேடகம் குறி வைத்தே எரிக்கப்பட்டுள்ளது.

கோடிப்புறமுள்ள யன்னல் உடைத்தே தீ பரவ விடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைக்கு கண்காணிப்பும் பாதுகாப்பும் இருந்திருக்க வேண்டும்.

இதை எரித்தவர்கள் தம் சுய திருப்தியைத்தவிர வேறெந்த பலாபலன்களையும் பெற்றிருக்க முடியாது. இதைச் செய்தவர்கள் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்களாக அதாவது பூரணத்துவமடையாத மனிதர்களாக– அரைகுறைகளாக இருக்கவேண்டும்– இது ஆன்றோர் வாக்கின் பிழியல்– இவ் எரிப்பை எந்த வகையில் எனினும் ஆதரிப்பவர்கள் கூட அரை குறைகளே!

இங்கு பலருக்கு தேடகம் என்ருல் என்ன என்றே தெரியாதுள்ளது. சிலர் இதை ஏதோ கட்சிக் காரியாலயம் போல எண்ணுகிருர்கள். ஏனெனில் பத்திரிகையில் வந்திருந்த கட்டுரைகள் சில இத்தகைய தோற்றப்பாட்டை கண் முடித்தனமாகச் சித்தரித்திருந்தன.

திறந்த அறிந்து கொள்ளலுக்கானதும் பரந்த கருத்துச் சேகரிப்பின் மூலம் சுய அனுமானங்களை, முடிவுகளை எடுக்கும் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தும் எந்தப் பேதமுமின்றி பலவேறு அமைப்புகளதும் பிரசுரத்தாரதும் குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழர் வெளியீடுகளை தன்னகத்தே கொண்டிருந்த ஒரே ஒரு நூலகம் இது. இங்கு இரவல் கொடுப்பனவும் வீடியோப்பிரதிக் கொடுப்பனவும் இருந்தது.

இந் நூலகத்தில் தேர்ந்தெடுத்த நூல்களை மட்டுமே வைத்து வருவோரை மூளைச் சலவைக்கு உட்படுத்தவில்லை.

ஆனல் இந் நூலகத்தையும், இதை நடத்துவோரையும் திட்டமிட்டு தன் கட்டுரைகள் மூலம் கருத்துப் பிறழ்வுக்கு உள்ளாக்கியவர் ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்களே. இன்னும் அனேகரின் பார்வையில் தேடகம் என்பது புலிகளுக்கு எதிரானவர்களின் காரியாலயம் என்றும் அங்கு உலகத் தமிழரோ, செந்தாமரை, மஞ்சரி என்பனவோ வைக்கப்படுவதில்லை என்னும் தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இதற்கு பலரும் ப.ஸ்ரீஸ்கந்தனின் கட்டுரைகளையே ஒப்புவிக்கின்றனர். ஆனல் அங்கு உலகத்தமிழர், புலிகளின் ஏடான எரிமலை என்பனவற்றுடன் செந்தாமரை, மஞ்சரி என்பனவும் இருந்தன. இதையெல்லாம் அறிந்து கொள்ளாமலோ, அறிந்தும் விசமம் பண்ணியோ கட்டுரை எழுதிய ப. ஸ்ரீஸ்கந்தனல் இப்போ புலிகளுக்கும் கெட்டபெயர் ஏனெனில் எம்மவரின் தப்பபிப்பிராயப்படி தேடகம் புலிகளுக்கெதிரானதெனில் அது எரிந்ததில் புலிகள் மேல் சந்தேகிக்கிருர்கள் மக்கள்.

இனிமேலாவது இத்தகைய கட்டுரையாளர்கள் உள்ளதை உள்ளபடி எழுதுவார்களா?

ஏனெனில் எழுத்துகள் கூட நாசகாரங்களைத் தூண்டவல்லன.

இது இவ்வாறிருக்க வி. புலிகள் தம்மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

தமிழர் வகை துறை வள நிலையத்தார் மீதான சந்தேகம் பற்றி..


தேடகம் தாம் நடத்தும் நூல் நிலையம் படிப்பகம் என்பது எவ்வளவு உண்மையோ அதே போல தேடகம் நூலகம் மட்டுமேயல்லாது அரசியல் சார்பும் இல்லாதது. இது மற்றவர்க்கு தெரிந்துவைத்திருக்கப்படாத போதும் தமக்கும் அறியாததா என்ன?

எரிந்து அழிந்தவை தங்கள் உழைப்புகளும் முயற்சிகளுமே இவை மீண்டும் தொடரும்.......என்கின்றனர் ஒட்டப்பம் வீட்டை எரிப்பதில்லை உண்மைதான்.

எது எவ்வாறெனினும் தமிழர் இழந்தது ஒரு முழுத் தமிழ்ச் சேவையையே. இதனை மீள நிர்மாணிக்கவும் முடியும். நிதியாகவோ... முடிந்தால் நூலாகவும் கூட! இது மௌனித்திருந்தவர்களின் பிராயச்சித்தமும் கூட

இனியாவது உணர்வார்களா? தமிழை தமிழ் உணர்வை!

# வல்லூறுகள் செய்யும் வல் ஊறுகள்



சிதம்பரம் ஞா.வடிவேலனூர்

"முந்தி இந்தப்பக்கமே வாறதில்ல, நீ வந்த பிறகுதான் இவா இஞ்சாலப் பக்கத்தால வாரு. மாமி மகனைக்காணுற சந்தோசம்தான்"

"ஏன் மாமா! முந்தியும் நான் வாறனுன்தானே. பேந்தேன் இப்படிச் சொல்லிறியள் உங்களுக்கு நான் இஞ்சவந்து போறது பிடிக்கேல எண்டா சொல்லுங்க. நான் வரேல்ல அதற்கா வேண்டி மச்சானை பார்க்கத்தான் வந்தனன் எண்டு மட்டும் சொல்லாதையுங்க."

"ஏனெடி என்னைப் பார்க்கத்தான் வந்தனியெண்டு உசாராச்சொல்லன்ரி ஏன் மூடி மறைக்கிற"

"ஏன் இப்ப நீங்க சரியா மாறிற்றீங்க நான் முந்தியிருந்த மச்சான் எண்டுதான் நினைச்செண்டு வந்தனன் ஆனு அது பொய்யெண்டது இப்ப கொஞ்சம் கொஞ்சமாய் விளங்குது. என்ன கதைச்சாலும் கொழுவலும் நக்கலும் தான். இன்னம் உங்கட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாமாட குணத்திலதான் இருக்கிறறேங்க."

'எடியே! என்னப்பார்க்க வந்ததுதான் உண்மை அது உன்ர மாமாவுக்கு தெரிஞ்சிட்டுது. அதற்காக வேண்டி வீணு என்னோட சண்டை பிடியாத"

"சரி, உங்களத்தான் பார்க்க வந்தனான் அதற்கு இப்ப என்ன?"

"இதையேன் அப்போதையே சொலலேல. இதுதான் பொம்பிளேயலில உள்ள வீக்னஸ்"

" இது வீக்னஸ் இல்ல பெலன்"

" சரி, மாமி குசினிக்க தேத்தண்ணி போடுரு அவாக்கு போய் உதவிசெய்யன்"

"மாமி! ம்மாமி!!"

"என்ன? கேக்கேல இஞ்சவா!"

"இல்ல மாமி நீங்க மூண்டு பேருக்குத்தானே தேத்தண்ணி போடுறீங்க"

"ஓம் ஏன்?"

"இல்ல இவர் மச்சான் நான் வந்த கையோட குசினிக்க போ மாமி தேத்தண்ணி போடுரு எண்டு கலேச்சிற்றுர். அதுதான் கன பேருக்கா போடுறீங்க எண்டு கேட்டனான்."

" எனக்குத் தெரியும் இரண்டு பேரும் பாலும் தேனும் ஓடுற மாதிரிக் கதைப்பீங்க, பேந்து அவன் என்னேன் சொல்லீற்ரு, அவனப்பற்றி கோள் குண்டணி சொல்ல இஞ்ச வந்திடுவ, உனக்கு இந்த வயது வந்தும் கொஞ்சம் கூட புத்தியெண்டது இல்ல, அங்க உன்ர மாமாவுமெல்லா இருக்கிருர். நீயும் அவனும் கதைக்க வெளிக்கிட்டா எங்க போய் முடிப்பேங்க எண்டிறது எனக்கெல்லா தெரியும். அதுதான் உன்ன குசினிக்க அனுப்பியிருக்கிருன். இத அவனுக்கு கொண்டு போய் குடு. இதை நீ குடி"

"அப்ப மாமாக்கு"

"அவருக்கு நான் இஞ்ச கூப்பிட்டுக் குடுப்பன் நீ இதை கொண்டு போ"

"தாங்ஸ் மாமி!"

"ஓ! இதுக்கு மட்டும் குறைச்சலில்ல எணே! இஞ்சேரண்"

" என்ன?"

"இந்தாங்க மச்சான் எப்படியிருக்கு இது என்ர ப்ரேபரெய்ஷன்"

"ஆ! ஏ 1"

"ஏமாத்திட்டேன், ஏமாத்திட்டேன். இது நான் போடேல மாமி போட்டது"

அதுதான் சொன்னனான் ஏ 1 எண்டு"

"கள்ளன் நீங்க சரியான ஆள்"

" என்னடி சொன்னனி"

"ஆ! என்ன?"

"கண்களவு கொள்ளும் சிறு நோக்கம் காமத்தில் செம்பாதும் அன்று பெரிது"

"என்ன சொன்னனீங்க, விளங்கேல. திருப்பிச் சொல்லுங்க"

"ஒருக்காத்தான் சொல்லிறது சும்மா அங்கால போ!"

"அவசரமா றெயினுக்கு போறமாதிரி சொன்னு ஆருக்குத்தான் விளங்கப்போகுது சொல்லுங்கையன் ஒருக்கா!"

"இது உனக்கு விளங்கேல எண்டு நடிக்கிறையா? விளங்கியெண்டு எனக்கேன் புலுடா விடுற"

"நான் ஒண்டும் உங்களுக்குப் புலுடா விடயில்ல கெதிக்கொணச் சொல்லுங்க"

" எனக்குத் தெரியா திருக்குறளில காமத்துப்பால எடுத்துப்பார்"

"சொல்லுங்க எண்டா! எனக்கு கோவம் வருது"

"உனக்கு கோவம் வந்து எனக்கு என்னடி செய்யப் போகுது"

"சரி சரி எனக்கு சொல்லுங்க"

"இதடி கொஞ்சம் DEEP வாயால சொல்ல முடியாதடி அந்தப்பேப்பரை கொஞ்சம் இஞ்ச தா அதில எழுதிவிடுறன் வாசி"

"நீ களவாக என்னைப்பார்க்கின்ற பார்வையானது உடல் உறவில் வரும் இன்பத்தில் அரைவாசியன்று, அதைவிட பெரிதாம்"

"என்ன, தமிழ் வித்துவான் எண்டுதாம் பேர் ஒரு கொஞ்சமேனும் சிந்தனையெண்டது உங்களுக்கில்ல.

" என்னடி சொல்லிரு, அப்படி நீ பார்க்கேலயா?"

"ஓ! கேள்வியளுக்குமட்டும் குறைச்சல் இல்ல, சரி நான் அப்படிப் பார்த்தாலும் உடலுறவில் வரும் இன்பத்தில் அரைவாசியென்று அதைவிட பெரிதெண்டு என்னெண்டு சொல்லுவேங்க நான் எப்பேனும் உங்களோட உடலுறவு கொண்டனானே, அப்படி கொண்டாத்தானே அதைவிடப் பெரிது என்ர பார்வை தரும் போதை எண்டு சொல்லலாம் தியறியைப் படிச்சிட்டா மட்டும் போதாது பிரக்டிக்கலும் வேணும். அப்பதான் நீங்க சொல்லிறது ஓ.கே."

" பிரக்டிக்கல் செய்யிறதிற்கு நீ வந்தாத்தானே!"

"ஓ! ஆசையைப்பார்"

"என்ன ஆசையப் பாரா! நான் ஓமெண்டா நீ சரிதானே! நானெல்லா.

..."

"அலேயிறன் எண்டு மட்டும் சொல்லாதையுங்க இப்படி கதைச்சா வீட்ட போயிருவன் வந்திருக்கிறீங்க எண்டு கதைக்க வந்தா பெரிய வெடிவால் விடுறேங்க.

'என்னடி கத்திற! நீயே விளக்கம்கேட்ட பிறகு அதற்கு நீயே விளக்கம் சொன்ன பேந்தேன் இப்ப என்னோட குழம்பிற"

" உங்களுக்கு எப்பவும் இந்த கெட்ட கதைதானே நான் வாறன்"

"சரி நீ வா! பறுவாயில்ல ஆனு இந்த தேத்தண்ணியை மிச்சம் வைக்காம குடிச்சிட்டுப்போ."

"நான் உங்கட தேத்தண்ணியை குடிச்சிடுவன் எண்டுதானே இவ்வளவு கதையும் அதை முகத்தில் ஊத்துங்க."

"எடியே! என்னடி சொல்லிற, உனக்கு இப்பயும் திமிர் குறையலயடி இதைத்தான்ரி படிச்ச திமிர் எண்டுறது. உண்மையா என்னில நீ அன்பிருந்தா நீங்க அந்த மிச்சத்தை குடியுங்க எண்டுருப்ப"

"ஆசையப்பார் ஆசையை"

"என்னவிருந்தாலும் இந்த மிச்சத்தை நான் குடிப்பன். உன்னில நான் ஆசை வைச்சிருக்கிறன் எண்டத உனக்கு காட்ட வேணும்"

" எனக்கென்ன என்ர எச்சியை குடிக்கிறதிக்கும் ஆள் இருக்கெண்டு சந்தோசப்படுறன்."

" ஐயோ பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி வாய் எயிறு ஊறிய நீர்"

எடியே! வள்ளுவனுக்கு வாசுகி மச்சாள் முறையடி? அவன் பெரிய ஆளடி எல்லாம் உண்மையைத்தான்ரி எழுதியிருக்கிருன். அனுபவிச்சுத் தான்ரி எழுதியிருக்கிருன்.

'உண்மையா உங்களுக்கு விசர்"

"என்னடி வந்த நேரத்தில் இருந்து பார்க்கிறன் எனக்கு விசர் விசர் எண்டிற, உன்ர மாமியிட வீட்ட விசர் ஆஸ்பத்திரி எண்டா நினேச்செண்டு வந்தனி"

"இல்ல, ஏன் மாமியை இடையில இழுக்குறியள் நான் என்னத்துக்கு சொன்னனான் எண்டா நான் குடிச்சிட்டு வைச்ச தேத்தண்ணியை குடிச்சிட்டு பாலொடு தேன் கலந்தற்றே" எண்டு ஒரு குறள் சொன்னீங்கல்லா!' அது இந்த பனிமொழி வாய் எயிறுஊறிய நீரல்ல"

" அப்படியெண்டா என்னெண்டு அப்படி இனிச்சது எனக்கு"

"ஆ! அப்படி வாங்க வழத்துக்கு அது பாலும் சீனியும் கலந்த பால தேத்தண்ணி அதுதான் அப்படி இனிச்சது இப்ப விளங்கிச்சா. பனிமொழி வாயில் ஊறிய நீரின் சுவையை அறிய வேணுமெண்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

UNMIXED WITH OTHER THINGS."

"என்னடி சொல்லிற"

"என்னம் விளங்கேலயா?"

"இல்ல"

"நேரடியா எடுக்கோணும் அதுதான் PURE

இது உன்ர வாயால வரவேணும் எண்டு தான் இருந்தனனடி, என் னவிருந்தாலும் நீ கெட்டிக்காறிதான்ரி ஆனா நீ என்ன மடக்கீற்ற எண்டு நினைக்காத வள்ளுவரத்தான்ரி நீ மடக்கினனீ போகிற போக்கப் பார்த்தா புது உரையே திருக்குறளுக்கு வரும் போலத்தான் கிடக்கு"

"நீங்க சரியான ஆள். உங்கள மடக்கினு சொல்லுவீங்க வள்ளுவனே மடக்கின தெண்டு. இப்படிச் சொல்லியே என்ன மடக்கிப் போடுவேங்க. உங்கட குணமே இப்படித்தான்"

"சரி, சரி, ஆரோ வாறயும் இரண்டு பேரும் ஒண்டா இப்படியிருக்ககூடா. ஒழும்பி அந்த கதிரையில இரு. இல்லாட்டி உள்ளுக்க போ"

★ ★ ★

"நீர்தானே அவர்"

"அவர் எண்டா"

"அவர் எண்டா அவர் தான்"

"அவர் தான் எண்டா"

"அவர்தான் எண்டா இது தான்"

"இதைக்காட்டி நீங்க ஆரெண்டது எனக்கு சொல்லாதையுங்க நாங்களும் உங்களப் போல வாழ ஆசையுள்ள மனிதர்கள் தான்"

★ ★ ★

"அட கடவுளே இந்த அடியறுந்த வல்லூறு இந்த குஞ்ச இப்படி கிருஞ்சித் தூக்கியண்டு போகுதே. என்னெண இரண்டு பேரும் இதுக்கென இஞ்ச இருக்க இந்த நாசமறுந்த வல்லூறு இப்படி கொண்டு போச்சே. அவன் எல்லா அடை கட்டி விட்ட குஞ்சுகள் அவன் அறிஞ்சா கொல்லப் போறான்"

"ஐயோ மாமி! மாமி!! மாமா மாமா"

"ஐயோ விடுங்க விடுங்க இழுக்காதையுங்க."

இவன் சும்மா அவளோட சேட்ட கீட்ட விட்டா இவள் இப்படித்தான் குளறுவாள் கெதிக் கென போண"

"ஐயோ மாமா ஓடிவாங்க அவர இரண்டுபேர் இழுத்தெண்டு போறாங்க"

"ஐயோ.....ஐயோ...."

## தொடர்ந்தால் தொடரும்...

வலித்தது. நடைமுறைப்படுத்துவது எப்படி? வெற்று தாள்களை கழிவுக்கூடையுள் போட்டுவிட்டு மீண்டும் வந்து அமர்ந்தேன்.

தனிமை! இந்த தனிமை இது கொடுமையிலும் கொடுமை! மாடியால் குதிக்கலாமா? சுருக்கிட்டு கொள்ளலாமா? அவசியம் சுகம் காண ஒரு இடம் தேவை. 'ஒருத்தி'யை எடுத்துவர நினைக்கவே பிடிக்கவில்லை.

மீண்டும் தொலைபேசி பதிவுகளை பார்த்தேன். அது அவளின் குரலாலே நிரம்பியிருந்தது. அந்த குரலுக்குதான் என்ன இனிமை. கேட்பதற்கு அது ஒரு கவிதை. அழுகை தோன்றும்போல இருப்பதைப் பார்க்க வெட்கமாகவும் இருந்தது. எண்ணிப் பார்த்தேன். மொத்தம் பதின்மூன்று தடவைகள் முயற்சித்திருக்கிறாள். அதிஷ்டம் இல்லாத இலக்கம் அதுவும் இன்று வெள்ளிக்கிழமை.. உடனே எனக்கு தெரியவேண்டிய ஒன்று அவள் ஏன் தொடர்பு கொள்ள விரும்புகிறாள். ஒப்புக்கு மன்னிப்பு சொல்லவா அல்லது அவளும் என்னைப்போல தனிமையில் உழல்கிறாளா?

கனடாவுக்கு வரும்போது எனது முதல் முதலாளி (ஜோன்) "இங்கு மூன்று W களை நம்பாதே" என்று சொன்னான் ஒன்று காலநிலை. மற்றையது வேலை மூன்றாவது பெண். (இதன் அர்த்தம் ஆண்களை முற்றாக நம்பலாம் என்றில்லை) முதலாவது பரவாயில்லை. இரண்டாவது போனால் தலையிடிதான். ஆனால் மூன்றாவது உயிரையே குடிக்கிறது. மூன்றும் இல்லாவிடில் சீக்கிரம் பெட்டிக்குள் போவது நல்லம் போல் தோன்றியது.

மீண்டும் தொலைபேசி அழைத்தது. இலக்கத்தை பார்த்தேன் பொது இடத்தில் இருந்து ஒருநபர் அந்த நபர் ஒரு 'பரதேசி'யாகவே தோன்றியது. எடுக்க விருப்பமில்லை. அழுதுவிட்டு ஓய்ந்தது.

மேரி நீதான் எனது மரணத்திற்கு காரணமா? அப்படியாயின் நீ ஒரு கொலையாளி. கூடியிருந்து கொன்றவள். TV ஐ புரட்டினேன். எதுவும் நன்றாய் இல்லை. அல்லது எனது மனம் அவற்றை ரசிக்கும் நிலையில் இல்லை. TLC ஐயும் A&E ஐயும் தேடிப் பார்த்தேன். அவைகூட சுவைக்க வில்லை. அறிவுப்பசி கூட அடங்கி விட்டது. தேவை அவள் காதல். உண்மையில் அதுவும் தேவையில்லை. அவள் என்னை காதலித்திருந்திருக்க வேணும். அதுவே எனது தேவை.

மீண்டும் மணியடித்தது. அதே நடுத்தெரு 'பரதேசி'! இவனுக்கு என்ன இவ்வளவு அவசரம். ஏதோ பொது Washroom களை எல்லாம் மூடிவிட்டது போல நடுவீதியில் இருந்து அவஸ்தைப்படுகிறான். எடுத்து "ஹலோ" என்றேன். மேரி ஒரு அறிவு என்றிருந்தேன். இது அவளேதான். தனது இலக்கத்திற்கு பதில் கிடைக்காது என்பதால் இந்த முடிவு. என்றால் எதுவும் கதைக்க முடியவில்லை. எதிர்பாராத ஒன்று. அவள் தயார் நிலையில்.

"தயவு செய்து தொலைபேசியை துண்டிக்காதே! நான் சொல்வதை கேள்" என்று தொடர ஆரம்பித்தாள். இது ஒரு தொடரின் முடிவா அல்லது முடிவின் தொடக்கமா எனக்கு எதுவுமே புரியவில்லை. ஏதோ ஒரு இனம்புரியாத ஆத்திரத்தில் தொலைபேசியை துண்டித்தேன் எல்லாவற்றையும் துண்டிக்கும் நோக்குடன்.

தொடர்ந்தால் தொடரும்.


**கிறிஸ்தவ திருமணங்களில்**

**மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,**

**அலங்காரப் பொருட்கள்**

**குறைந்த விலையில்**

**வாடகைக்கு பெற்றுக் கொள்ள**

**மாஜி 796 2672**

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய

வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**Net, Colorful Flower Bouquet, Flower Basket**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுழலும் உலகம்



### தி.உமாகாந்தன்

# உக்ரெய்ன் உடையுமா...?

உடைந்த சோவியத் யூனியனின் உறுதி வாய்ந்த நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்ட உக்ரெய்ன் இப்போதுமிக மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வந்துள்ளது. இந்த நெருக்கடிகளின் உக்கிரம் உக்ரெய்னை ஒரு உடைவை நோக்கிக் கூடத் தள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் உக்ரேய்னை உடைவை நோக்கித் தள்ளுவதற்கான காரணிகளின் வேகங்கள் அதிகரிக்கப்படுகின்றன. கடந்த 12 மாதங்களில் உக்ரெய்னின் கைத்தொழில் உற்பத்தியில் 40% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மில்லியன் கணக்கான உக்ரெய்ன் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. அப்படிச் சிலருக்கு சம்பளம் வழங்கப்பட்டாலும் பணப பெறுமதியின் வீழ்ச்சியில் அந்தச் சம்பளத்தை வைத்து எதையும் செய்ய முடியாத நிலைதானுள்ளது. உக்ரெய்ன் மக்களின் தலா வருமானம் இப்போது வருடத்துக்கு 100 டொலர்கள் என அதிகாரபூர்வமாக கணிப்பிடப்பட்டிருக்கிறது. அதேசமயம் உக்ரெய்ன் பாராளுமன்றத்தில் முன்னாள் கம்யூனிஸ்டுகளே பலம் பெற்றவர்களாகிக் கொண்டு வருகிறார்கள். நாட்டை நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றுவது என்பதை விட பழைய நாட்களை நோக்கி உக்ரெய்னை நகர்த்தி விட வேண்டுமென்பதே அவர்களது நோக்கமாக இருக்கிறது. இவை மட்டுமல்ல, எதிர்வரும் யூன் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் ஒரு உறுதியற்ற நிலையே நிலவுகிறது. முன்னாள் பிரதமரும் ஜனாதிபதித் தேர்தலின் முக்கிய வேட்பாளருமான லியோனிட் குச்மா உக்ரேய்ன் எதிர்கொள்ளப்போகும் பிரச்சனைகள் குறித்த அபாயங்களை விளக்குவதில் தயக்கம் காட்டவில்லை. "எமது அரசியல் முறையில் மாற்றம் எதுவும் இல்லை என்றால், உண்மையான பொருளாதாரச் சீர்த்திருத்தங்களை நாம் அமுல் நடத்தவில்லை என்றால் யூகோஸ்லாவியாவை விட மிகமோசமான நிலையை உக்ரேய்ன் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் "என்கிறார் குச்மா.

உக்ரெய்னின் பல பிரச்சனைகளினுள்ளும் இன்று எரியும் பிரச்சனையாகக் கருதப்படுவது கிரிமியாவின் பிரச்சனையாகும். கிரிமியாவில் வாழும் பிரஜைகளில் 70% மாணவர்கள் சட்டப்படி உக்ரெய்னியர்கள். ஆனால் அவர்கள் தங்களை உக்ரெய்னியர்களாகக் கருதவில்லை, தாம் ரஷ்யர்கள் என்றே கருதுகிறார்கள். 1954ம் ஆண்டு ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ருஷ்யாவிலிருந்து கிரிமியாவைப் பிரித்த நிகிதா குருஷ்சேவ் அதை உக்ரேய்னுடன் இணைத்து விட்டார். 1991 இல் கிரிமியா ஒரு சுதந்திர உக்ரெய்னுக்காகவே வாக்களித்தது. அந்தக் காலகட்டத்தில் உக்ரெய்னின் உல்லாசப் பயணத்துறையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ரஷ்யர்கள் உகிரெய்ன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ரஷ்யர்கள் உக்ரெய்ன் சுதந்திரமடைவதன் மூலம் அளவின்றி செலவு செய்யும் மேற்கு ஐரோப்பிய உல்லாசப்பயணிகள் பெருமளவில் உக்ரெய்னுக்கு வந்து குவிவார்கள் எனக் கனவு கண்டார்கள். ஆனால் வந்தது என்னவோ ஏழைக் குடிகார சைபீரியர்கள்தான்.

உண்மையில் உக்ரெய்ன் அரசு முழுமனதுடன் பொருளாதார சீர்த்திருத்தங்களை மேற்கொண்டிருந்தால் கிரிமியாவின் இன்றைய பிரச்சனைகள் ஏற்பட்டிருக்காது. காரணம் கிரிமியாவில் வாழும் ரஷ்ய இனத்தவர்களில் பெரும்பான்மையானோர் சோவியத் இராணுவத்திலிருந்தும், கே.ஜி.பியிலிருந்தும் ஓய்வு பெற்றவர்கள் ரஷ்யாவிலிருந்தும், கே.ஜி.பியிலிருந்தும் ஓய்வு பெற்றவர்கள் ரஷ்யாவிலிருக்கும் தம்மினத்தவரை விட தமது வாழ்க்கைத்தரம் தாழ்ந்து செல்வதால் மிகுந்த ஆத்திரம் அடைந்துள்ளனர்.

கடந்த இரண்டு வருட[illegible] கிரிமியா, கீவ் நகரிலுள்ள உக்ரெய்னின் ஆட்சியாளர்கள், ரஷ்யா ஆகிய முத்தரப்பினருக்கும் இடையேயான பதட்டம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1992ம் ஆண்டு கிரிமியாவின் பாராளுமன்றம் தனக்கான தனியான அரசியல் சட்டமொன்றை நிறைவேற்றியது. ஆனால் கீவ்விலுள்ள உக்ரெய்ன் அரசின் வற்புறுத்தலால் இத்தீர்மானம் கைவிடப்பட்டது. 1993ம் ஆண்டு ரஷ்யாவின் பழைய பாராளுமன்றம், கருங்கடல் கப்பற்படைகள் தரித்திருக்கும் செபஸ்ரபோல் துறைமுகம் ரஷ்யாவின் எல்லைக்குட்பட்டது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. 1994 ஜனவரி மாதம் கிரிமியாவின் முதலாவது ஜனாதிபதியாக யூரிமெஸ்கோவ் தெரிவுசெய்யப்பட்டார். கிரிமியாவின் சக்தி வாய்ந்த இருள் உலகின் ஆதரவைக் கொண்ட இவர், சிறிது சிறிதாக ரஷ்யாவைச் சார்ந்து செயல்பட ஆரம்பித்தார். கிரிமியாவின் கடிகாரங்களை கீவ் நகர நேரங்களிலிருந்து மாற்றி மொஸ்கோ நேரத்துக்கு செயற்படச் செய்தார். அதுமட்டுமல்ல இந்தக் குடாநாட்டின் அரசமொழியாக ரஷ்யமொழியை அமுல் நடத்தினார். யூரி மெஸ்கோவின் இந்த நகர்வுகள் உக்ரெய்னிலுள்ள ரஷ்ய இனத்தவரின் பெரும் வரவேற்புக்குள்ளாகியது. கடந்த மார்ச் மாதம் புதிய கிரிமிய பாராளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் யூரிமெஸ்கோவின் ரஷ்யக் கட்சிக்கு கணிசமான வெற்றி கிடைத்தது. இந்த வெற்றி யூரிமெஸ்கோவை, ரஷ்யாவை நோக்கி துணிவுடன் நடக்க வழிவகுத்தது. கடந்த மே மாதம் 20ம் திகதி கிரிமியாவின் புதிய பாராளுமன்றம் கிரிமியாவுக்கான தனித்த அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறைவேற்றியது. இது கிரிமியாவை சுதந்திர நாடாக பிரகடனம் செய்வதற்கு ஒப்பானதாகும். இந்தத் தீர்மானத்தின் கீழ் கிரிமிய பிரஜாவுரிமை, கிரிமியாவுக்கான தனிப்படை இவை மட்டுமல்ல கிரிமியா, உக்ரெய்ன் ஆகியன இரண்டும் தனித்தனி நாடுகள் என்ற வகையில் எதிர்கால உறவுகள் ஆகியன பற்றி குறிப்பிடப்பட்டன. உக்ரெய்னின் பாராளுமன்றம் இந்தத் தீர்மானத்தை நிராகரித்ததுடன் உக்ரெய்ன் ஜனாதிபதி லியோனிட் கிராவ்செக் 10 நாட்களுக்குள் இத்தீர்மானம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டார்.

இவற்றைத் தொடர்ந்து கிரிமிய ஜனாதிபதி மெச்கோவ் கிரிமியாவில் ஏற்படும் பதட்டத்திற்கு கிவ் இலிருந்து மேற்கொள்ளப்படும் அரசியல் ஆத்திரமூட்டல்களே காரணம் என்று ஆவேசத்துடன் குற்றம் சாட்டினார். அதுமட்டுமல்ல உக்ரெய்னின் அமைச்சரான வலெனரைன் நெட்ரியலியோ, கிரிமியாவின் உள்ளூராட்சி அமைச்சுக்குள் நுழைவதற்கான அனுமதி கிரிமியாவின் உள்ளூராட்சி அமைச்சரான சருணி குகன்ரென் சோவால் மறுக்கப்பட்டது. ஆனால் கிரிமியாவின் இந்த மிரட்டல்களையும் மீறி உக்ரெய்ன் ஒரு பெருத்த அச்சுறுத்தலை மீண்டும் அனைவருக்கும் நினைவுபடுத்துகிறது. முந்நாள் மார்க்ஸிய புத்திஜீவியும் தற்போது உக்ரேனிய ஜனாதிபதியின் பிரதம கொள்கை வகுப்பாளருமான மைகொலா மிக்கால்சென்கோ "இப்போது உலகுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. அது உக்கிரேனிடம் இன்னமும் அணுஆயுதங்கள் இருக்கின்றன என்பதுதான்" என அந்த அச்சுறுத்தலை வலியுறுத்துகிறார்.

இத்தகைய பதட்டம் தரும் பேச்சுகளால் அதிர்ச்சி கொண்ட பத்திரிகையாளர்கள் கிரிமியாவின் தலைநகரான சிம்பெரோமோலை வட்டமிட்டனர். உக்ரேய்ன் படைகளைக் குவித்திருக்கும் என்றும், உக்ரெய்னின் ஸ்னைப்பர்களையும், டாங்கிப் படைகளையும் தேடினர். ஆனால் அவர்கள் அங்கு எதையுமே காணவில்லை. உண்மைநிலை என்னவென்றால் சாதாரண கிரிமியப்பிரஜைகள் ரஷ்ய இனத்தவர்கள் சுதந்திரத்தை விரும்புகின்றார்கள். உதாரணமாக பாராளுமன்றத்தை சுற்றியுள்ள பதாகை ஒன்றில் எழுதப்பட்ட சுலோகம் இப்படியுள்ளது. "உக்ரெய்ன் சுதந்திரமடைவதை ரஷ்யா தடுக்கவில்லை. அப்படியாயின் ஏன் கிரிமியா சுதந்திரமடைவதிலும் உக்ரெய்ன் அப்படி நடந்து கொள்ளக் கூடாது."

தமது ஒவ்வொரு நகர்விலும் மெச்கோவும் கிராவுசுக்கும் பின்வாங்கமுடியாத ஒரு சிக்கலான நிலையில் உள்ளனர், இதனால் மெச்கோவ் தமது கட்சியின் ஆதரவை இழக்கும் நிலையும் தோன்றியுள்ளது. ஏற்கனவே இவரது கட்சி மிதவாதம் தீவிரவாதம் என இரு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளது. அதே சமயம் உக்ரேய்னின் அதிகாரத்தை நிலைநாட்டும் அனைத்து வழிகளையும் தாம் பிரயோகிப்பேன் என கிராவுசுக் அறிவித்துள்ளார். அது மட்டுமல்ல கிரிமியாவில் ஏற்பட்ட பதட்ட நிலை தமக்குச் சாதகமாகவே அமைந்துள்ளதாக அவரது கணிப்பீடு இருக்கிறது. கடந்த பல மாதங்களாகவே அவர் ஜனாதிபதித் தேர்தல்களை தள்ளிவைத்து வருகிறார். காரணம் இத்தேர்தலில் அவர் தோற்கலாம் என எதிர்பார்க்கப்படுவதால் கிரிமியாவில் எழுந்துள்ள பதட்ட நிலையைக் காரணம் காட்டி இப்போது யூன் மாதத்திலும் தேர்தலை அவர் விரும்பினால் தள்ளி வைக்கமுடியும்.

உண்மையிலே உக்ரெய்னும் கிரிமியாவும் தமக்கிடையே சமரசம் செய்வதற்கான வாய்ப்பு இன்னமும் இருக்கிறது. தமக்கிடையே ஒரு சமாதானமான முடிவு காணப்பட வேண்டும் என இருதரப்புமே சொல்லிக் கொள்கின்றன. ரஷ்யாவுக்கும் ரஷ்யக்குடியரசான தாதஸ்தானுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தம் பேசப்பட்டது போன்று தாதாசுகளுக்கு முழுஅளவிலான பொருளாதார சுதந்திரம் தமது பொலிஸ் மீதான பூரண கட்டுப்பாடு வழங்கப்பட்டது போல கிரிமியாவுக்கும் வழங்கப் பட்டால் இந்தப் பிரச்சனை அமைதியடையலாம். இருதரப்புமே இப்பிரச்சனையில் ஆயுதரீதியாக உக்ரெய்ன் தலையிடுவது குறித்து அச்சமமடைந்தேயுள்ளன. ஜெனரல் குசென்ரோவ் குறிப்பிடுவதுபோல 'கிரிமியா வெடித்தால் கிழக்கு மற்றும் தெற்கு உக்ரெய்னும் வெடிக்கும்' என்கிறார் ஆனால் ஒரு பொருளாதாரத் தடை மூலம் உக்ரெய்னால், கிரிமியாவை மிரட்டமுடியும் கடலினால் ரஷ்யாவிலிருந்து பிரிக்கப்பட்டு நிலரீதியாக உக்ரெய்னுடன் இணைக்கப் பட்டிருக்கும் கிரிமியா தண்ணீர் எரிபொருள், மின்சாரம் அனைத்தையுமே உக்ரெய்னிலிருந்தே இறக்குமதி செய்கிறது. ஆனால் இந்தப் பிரச்சனையின் திறவுகோல் இப்போது ரஷ்யாவிடமே உள்ளது. ஏனென்றால் ரஷ்ய அரசுக்கும் மெச்கோவுக்கும் உள்ள உறவு குறித்து இரு தரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. கருங்கடல் பிராந்தியம் தொடர்பான ரஷ்ய உக்ரெய்ன் பேச்சுவார்த்தைகளில் மெச்கோ உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை மெச்கோவோ ஒரு அதிர்ச்சியாகத்தான் கருதினார் ஆனால் ரஷ்யாவைப் பொறுத்தவரை உக்ரெய்ன் உட்பட அனைவருமே பிரச்சனைகளைத் தீர்க்க தம்மிடமே வரவேண்டும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது. சமீபத்தில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் கோர்டுக்கும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஆன்ரி கொசிர்வுக்கும் நடந்தபேச்சு வார்த்தைகளின் போது ரஷ்ய அமைச்சர் "ரஷ்ய அரசின் கருத்தின்படி கிரிமியா, உக்ரெய்னின் ஒரு பகுதியே எனவும் அதனால் கிரிமியா மீது உக்ரெய்ன் அரசினது இறைமை குறித்த சந்தேகம் எதுவும் தமக்கு இல்லை" எனவும் கூறியுள்ளார்.

காரணம் ரஷ்யா இந்தப்பிரச்சனையில் சதுரங்கம் விளையாட முனைகிறது. நேட்டோ அமைப்பில் விசேட உறுப்புரிமையைதான் வேண்டி நிற்கும் இந்த சந்தர்ப்பத்தில் கிரிமியா பிரச்சனையில் தலையிட்டால் தன்மீது தேவையற்ற சந்தேகம் நேட்டோ நாடுகளுக்கு வந்துவிடும் என ரஷ்யா நினைக்கிறது. ஆனால் தொடர்ந்து பல நாட்களுக்கு ரஷ்யா இந்தச் சதுரங்க விளையாட்டை விளையாட முடியாது கிரிமியாவின் இன்றைய பதட்டநிலை வன்முறையாக வெடித்தால் அங்குள்ள ரஷ்ய இனத்தவர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இந்நிலையில் ரஷ்யாவிலுள்ள மக்கள் இராணுவத்தை அனுப்பும்படி வற்புறுத்துவர். அப்போது ரஷ்யா–உக்ரெய்ன் ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல் தவிர்க்க முடியாததாகிவிடும். எதிர் வரும் நாட்கள் இதனை நிரூபிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னாண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

சகல நெருக்கடிகளாலும் உடனடியாக தாக்குதல்களுக்கு உள்ளான, அத்தாக்குதல்களை உடனடியாக தாங்கிக்கொள்ள முடியாத பகுதியினரையே கிளர்ச்சி பிரதிநிதித்துவப் படுத்தியது. உயர் பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்கே இத் தாக்குதல்களின் அதிர்ச்சி உடனடியாக தெரிந்தது. கல்வி வெட்டு, கல்வியைப் பெறுவதில் இருந்த போட்டி, கல்வியை பெற்ற பின்னமும் அவர்கள் வேலையற்றவர்களாக மாறும் அபாயம் ஆகிய காரணங்களால் இவர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தனர். நெருக்கடிகளின் வளர்ச்சியுடன் முகங்கொடுக்க நேர்ந்த நிலைமைகளை வேலையற்ற வாலிபர்களால் எவ்விதத்திலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாம் அதள பாதாளத்துள் தள்ளப பட்டுள்ளதாக அவர்கள உணர்ந்தனர். பொருளாதார நெருக்கடிகளின் சுமையால் இளைத்துப் போயிருந்த இவர்களுக்கு தமது பெற்றோரின் உழைப்பில் தங்கி வாழ்வது பெரும் பிரச்சனையாக விருந்தது. சமுதாயத்திலிருந்து தூரத்தில் வீசப்பட்ட நிலைமைக்கு அவர்கள் மாறியிருந்தனர். தாம் எவ்வித எதிர்காலமும் அற்ற துர் அதிஷ்ட பிறவிகள் எனவும் ஏனையவர்களுக்கு பாரமாகவே தாம் வாழ்வதாகவும் அவர்கள் எண்ணினர். பெற்றுக் கொண்ட கல்விக்கு பொருத்தமான தொழில்களைத் தேடுவது பெரும் பிரச்சனையாக விருந்தது. பட்டதாரியாக இருந்தாலும் கூட சில வேளைகளில் அலுவலக பியோன் வேலையைக் கூட பெறமுடியவில்லை. ஆனால் நகர்ப்புறங்களின் உயர்மட்ட பாடசாலைகளில் கல்வி கற்ற மேல்தட்டு வர்க்க இளைஞர்களுக்கு குறைந்த தகமைகள் இருந்தாலும் வேலைகளைத் தேடிக்கொள்வது பிரச்சனையாக இருக்கவில்லை. தமிழ் வர்த்தகர்களுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்த சிங்கள வர்த்தகர்களில் கணிசமான தொகையினரின் ஆதரவும் கிளர்ச்சியின் பக்கம் இருந்தது. உதாரணத்துக்கு கூறுவதாயின் இந்திய பண்டங்களை பகிஷ்கரிப்பதால் கூடிய பயன் பெற்றது அவ்வாறான வர்த்தகர்களாகும் இப் பண்ட பகிஷ்கரிப்பால் தொழிலாளருக்கோ விவசாயிக்கோ எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை. கிளர்ச்சியினுள் செயல்பட்ட இன்னுமொரு சக்தி உதிரிப் (லும்பன்) பகுதியினராகும்.

உண்மையிலேயே தொழிலாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட விவசாய மக்களும் ஒரு சக்தியாக கிளர்ச்சியுள் பிரதிநிதித்துவப் படவில்லை தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்பட்ட விவசாய மக்களும் பொருளாதார நெருக்கடிகளின் சுமையை உணராமல் இல்லை ஆனாலும் கஷ்டமான வாழ்க்கையால் நசிந்து இளைத்துப் போயிருந்த அவர்கள் இந்நெருக்கடிகளின் உடனடியான அதிர்ச்சிக்கு உள்ளாகவில்லை. கூடுதலான அதிர்ச்சிக்கு உள்ளானதும் ஆதலால் உடனடியாக மாற்றத்தை வேண்டி நின்றதும் மேலே கூறப்பட்ட பிரிவினர்கள் அதாவது மாணவர்களும் வேலையற்ற வாலிபர்களுமேயாகும். இவர்கள் தவிர சமுதாயத்தில் ஓரளவு மேல்மட்டத்தில் வாழ்ந்த சிறு முதலாளித்துவ பகுதியினரும் இந் நெருக்கடிகளின் தாக்குதல்களால் அதிர்ச்சியுற்றிருந்தனர். அவர்கள் வேகமாக கீழ்நோக்கி வீழ்ந்து கொண்டிருந்தனர் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் தாம் பெற்ற வருமானம் மூலம் இதுவரை காலமும் அனுபவித்த வாழ்க்கையை மேலும் அறிவிப்பது முடியாத காரியமாயிற்று தமக்கு இருந்த சமூக அந்தஸ்த்து வேகமாக நகரும்போது உடனடி மாற்றத்தின் அவசியம் இச் சிறு முதலாளித்துவ பகுதியினருக்கும் தேவைப்பட்டது. இவ்வாறான சிறு முதலாளித்துவ பகுதியினரும் (எழுது வினைஞர் ஆசிரியர் ஆகிய துறைகளைச் சார்ந்தோர்.) ஜேவிபியுடன் இணைந்து கொண்டனர்.

வர்க்க இணைப்பாக்கத்தை எடுத்துப்பார்க்கும் போது ஜே.விபி எவ்விதத்திலும் அது தன்னை தானே அறிமுகப்படுத்தியவாறு பாட்டாளி வர்க்க இயக்கமாக இருக்கவில்லை. நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு மாணவர்களதும், வேலை அற்ற இளைஞர்களதும், உதிரி (லும்பன்) சக்திகளதும். பொருளாதார நெருக்கடிகளின் உடனடித் தாக்குதல்களுக்குள்ளானபோது சிறு முதலாளித்துவ சக்திகளதும் இயக்கமாகும். தொழிலாளர்கள் அதனுள் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பது அல்ல. ஆனால் அது தனி நபர்கள் என்ற ரீதியிலேயே தவிர வர்க்கச் சக்தி என்ற ரீதியில் அல்ல. இத் தொழிலாளர் கூட பாட்டாளிவர்க்க் கண்ணோட்டத்தை கொண்டிருக்கவில்லை. அவர்களிடமும் சிறு முதலாளித்துவ கண்ணோட்டமே காணப்பட்டது. இவர்கள் கூட சிறு முதலாளித்துவ மனோபாவமும் கண்ணோட்டத்துடனும் செயல்பட்ட மாணவர் இளைஞர் சக்தியினாலேயே வழிநடத்தப்பட்டனர்.

கிளர்ச்சியின் போது தொழிலாளர்கள் ஓரளவு தூரத்திற்கு ஆவது செயல்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது 1988 அக்டோபர் மாதம் அளவிலேயேயாகும். அது வரையும் ஜேவிபியின் முற்று முழுதான அடித்தளமாக இருந்தது மாணவர் செயற்பாடுகளேயாகும். மாணவர்களை அடித்தளமாகக் கொண்டு போராட்டத்தை மேலும் முன்னுக்கு எடுக்க முடியாத காரணத்தாலேயே ஜேவிபி தொழிலாளி வர்க்கத்திற்கு வேண்டுகோள் விடுக்க ஆரம்பித்தது.

ஜேவிபியின் தொழிலாளர் வர்க்க மத்திய ஸ்தானமாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதப்பட்ட தேசிய தொழிலாளர் போராட்ட மத்திய ஸ்தானம் "கொலேகார அரசாங்கத்தை துரத்தும் போராட்டத்திற்கு மாபெரும் பொது வேலே நிறுத்தம் முலமாக உயிர் கொடுக்கவும்" என்னும் தலேப்பில் வெளியிடப்பட்ட பிரச்சாரத்தின்படி அக் காலகட்டத்திலும் தொழிலாளர் வர்க்கம் போராட்டத்துடன் தொடர்பாக இருக்கவில்லே. அப் பிரசாரத்தின்படி போர்க்களத்தில் தொழிலாளர் வர்க்கத்திற்கான ஸ்தானம் வெற்றிடமாகவே இருந்தது: போராடியது மாணவர்கள், இளேஞர்கள் புத்தி ஜீவிகளாகும். பிரசுரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது:

இலவசக் கல்வியை பாதுகாக்கும் போராட்டத்தில் ஆரம்பமாகி பிறந்த நாட்டை பாதுகாக்கும் போராட்டம் வரை தமது சில்லுப் பட்டத்தை விரிவுபடுத்தியுள்ள எமது குழந்தைகளான இலங்கை மாணவர் இயக்கம் இன்னும் இப்போராட்டத்தின் முன்னணியில் இருக்கின்றது.

உண்மையிலேயே அரசாங்கத்தை துரத்தும் போராட்டத்தை பெரும் பலத்துடன் ஆரம்பித்ததும் அவர்கள் தான் இதற்காக மாணவர்கள் கல்விக்கான காலத்தையும் பட்டத்தையும் நட்ட ஈடாக செலுத்துவரை இப்போராட்டம் வளர்ந்து விருத்தி பெற்றது ஒரு நாளாவது முந்தி தொழிலாளர் வர்க்கம் அம்முன்னணி பாத்திரத்தை வகிக்காததால் அல்லவா?

இப் பெரும் தவறுக்கு ஈடாக தாய்நாட்டின் குழந்தைகள் நாள் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது ஒருவராவது ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் இரையாக மாறியுள்ளனர். அவ்வாறான தியாகத்தின் மத்தியில் நடைபெறும் இம் மாணவர் போராட்டம் இன்று அவர்களால் செல்லக்கூடிய உச்ச ஸ்தானத்தை அடைந்துள்ளது.

தேசத்தின் இளம் சந்ததியினர் (நகர்ப்புற இளேஞர்களும் அவ்வாறே அதற்கும் அதிகமாக கிராமிய இளேஞர்களும்) ஒருவர் பின் ஒருவராக இறந்து தேசத்தின் விடுதலேக்காக உயிரையே வழங்கும் சக்தியாக முன்னேக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

சட்டவல்லுனர்கள் பாடசாலே ஆசிரியர், பல்கலேக் கழக ஆசிரியர் உட்பட புத்திஜீவிகளின் துறையிலும் வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு வீரத்தை காண்பித்து... போராட்டத்திற்கும் காண்பிக்கின்ற சார்பு நிலமை உதவி பக்கத்துணே மட்டுமன்றி அதற்காக உயிர்த் தியாகத்துடன் போராடும் அளவு வரை அர்ப்பணிப்பது இன்று தெளிவாகத் தெரிகிறது....

ஆனபோதிலும் இப்போர்க் களத்தில் பெரியதொரு வெற்றிடம் காணப்படுகிறது. அது தொழிலாளர் வர்க்கத்திற்கு உரிய இடமாகும். அவர்கள் இன்னும் இப் பொதுப் போராட்டத்தில் இணேயவில்லே. இதன் காரணத்தினுலேயே இப்போராட்டம் வெற்றியை நோக்கிச் செல்வதற்கு தடையாகவுள்ளது......

மாணவர்களது, இளேஞர்களது, புத்திஜீவிகளது, கிழக்கு மாகாண மக்களது போராட்டத்தை தனிமைப்படுத்த வேண்டாம். இதற்கு உயிருட்ட மாபெரும் பொதுவேலே நிறுத்தத்திற்கு அழை!"

பாட்டாளி வர்க்க கட்சியாக தம்மை அறிமுகப்படுத்திய போதிலும் ஜேவிபியினுல் மாணவர், இளேஞர், புத்திஜீவிகள் அதாவது சிறுமுதலாளித்துவ பகுதியினரையே அழைக்க முடிந்ததே தவிர பாட்டாளி வர்க்கத்தை போர்க்களத்திற்கு அழைக்கும் ஆற்றல் இருக்கவில்லே. ஆகக்குறைந்தது வறிய விவசாயிகளே போராட்டத்திற்கு அழைக்கும் ஆற்றல் கூட இருக்கவில்லே.

போராட்டம் தேசிய அளவு மட்டத்திற்கு வளர்ந்து இருக்கும்போது தொழிளார் வர்க்கத்தை போர்க்களத்துக்கு அழைக்க முடியாத பாட்டாளி வர்க்கக் கட்சி புதுமையான பாட்டாளிவர்க்கக் கட்சியாகும். அதுமட்டுமன்றி போராட்டத்தில் குதிக்காதது குறித்து ஜேவிபி யினுல் தொழிலாளி வர்க்கத்தின் மீது குற்றமும் சுமத்தப்பட்டது. தொழிலாளர் வர்க்கம் போராட்டத்தில் குதிக்காததிலிருந்து ஜேவிபியை தொழிலாளர் வர்க்கம் தனது கட்சியாக கணிக்கவில்லே என்பதே விளங்குகின்றது. ஜேவிபி கூறுகின்ற போது போராட்ட நிலமை வளர்ந்திருக்கும்போது ஜேவிபியே கூறுகின்றவாறு பெரியதொரு பாட்டாளி வர்க்க கட்சி யொன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது தொழிலாளர் வர்க்கம் போராட்டத்தில் குதிக்காதது விளங்கிக்கொள்ள முடியாத ஒன்ருகும். ஆனுல் காரணம் பளிச்சென்று விளங்குகின்றது. ஜேவிபி எவ்விதத்திலும் பாட்டாளி வர்க்க கட்சி அல்ல என்பதும் அது சிறு முதலாளித்துவ வர்க்க கட்சியே என்பதுமே காரணமாகும்.

ஜேவிபி எனப்படும் கட்சி மட்டுமன்றி அதன் தொழிலாளர் மத்திய ஸ்தானத்தின் தலேமை கூட தொழிலாளர்களால் அமையவில்லே. அதன் பொதுச் செயலாளரும் நிதிச் செயலாளரும் P.R.B விமலரத்ன வாகும். பிரச்சார செயலாளர்கள் கமனுயகவும் டி.எம். ஆனந்த வும் ஆகும். சர்வதேச தொடர்புச் செயலாளர் சோமவன்ச அமரசிங்க, வலயத் தலேவர்கள் டி.எம் ஆனந்த, காமினி விஜேகுணசேகர P.K.B.A. இந்திரரத்ன, நோமன் மானவடு அருண விஜேசூரிய ஆகியோராகும். இவர்களில் எவரும் தொழிலாளர்கள் அல்லர். ஜேவிபியின் போராட்ட மத்திய ஸதானம் தொழிலாளர் அற்ற போராட்ட மத்திய ஸ்தானமாகும். ஜேவிபி தொழிலாளர் வர்க்கத்தை போர்க்களத்திற்கு இழுத்தது தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக பலாத்காரம் என்னும் ஆயுதத்தை பாவித்ததேயாகும்.

ஜேவிபியின் கோஷங்களிலும், அது பாவித்த வாக்கியங்களிலும் எவ்வித பாட்டாளிவர்க்க அம்சங்களும் இருக்கவில்லே. அவற்றில் அனேகமானவை சிறு முதலாளித்துவம் மற்றும் உதிரிச் சக்திகளதும் கோஷங்களுக்கும் மொழிக்குமே பொருந்துபவையாக இருந்தன. இவை ஜேவிபியின் ஆயுதக்கரமான "தேசபக்த மக்கள் இயக்கத்தின்" வெளியீடுகளிலிருந்து மேற்கோளாக எடுக்கப்பட்டவையாகும்.

"மரணத்திற்கு மரணம்,
சித்திரவதைக்கு சித்திரவதை,
தீ வைத்தலுக்கு தீ வைத்தல், குழந்தை குடும்பங்களே அழிப்பதற்கு குழந்தை குடும்பங்களே அளித்தல்"
(1989 மார்ச் 12ம் திகதி)

"ஜே.ஆர். நீ நாட்டைச் சாப்பிட்டாய், நாம் உன்னைச் சாம்பிடுவோம்."

"ஜே. ஆரைக் கொல்லுவோம்.

மேலும் இவ்வாறான கோஷங்களே மேற்கோள் காட்டமுடியும் ஆனுல் அதற்கான அவகாசம் இங்கு குறைவாகும்.


தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது


பரீட்சித்துப் பாருங்கள்
Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS





VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**

**(Don Mills/Eglinton)**

- ★ இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
- ★ பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள்,
- ★ இறைச்சி, மீன், கடலுணவு வகைகள்,
- ★ கனடிய உணவுப்பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில்
- ★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்
- ★ இந்திய இலங்கை, கனடிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

**(416) 421 3429**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவசேகரத்தின் உரை பற்றி ஈழநாடு எழுத்தாளர் திரிப்பு

**சமீபத்தில் கொழும்பு சென்ற பேராசிரியர் சிவசேகரம் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தெரிவித்த கருத்துக்கள் குறித்து பாரிஸிலிருந்து வரும் ஈழநாடு பத்திரிகையில் பத்தி எழுத்தாளர் குண்டூசி எழுதியிருந்தார். இது குறித்த தனது ஆட்சேபத்தை அந்தப் பத்திரிகைக்கு அனுப்பியும் இன்னமும் அந்தப் பத்திரிகை பிரசுரிக்காததால் அவர் தாயகத்திற்கு அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார். ஈழநாட்டில் வந்த கருத்துக்களும் பேராசிரியரின் ஆட்சேபமும் இங்கே பிரசுரமாகின்றன.**

இலண்டனிலிருந்து வந்திருந்த பேராசிரியர் சிவசேகரம் புகலிட இலக்கியம் பற்றி கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் 10 ஆந் திகதிமாலை பேசினார். சமுதாயப் பார்வை கொண்ட படைப்புக்கள் புகலிடத்தில் இல்லை. எல்லாமே வியாபார நோக்கு பத்திரிகைகள் எனச் சாடிய பேராசிரியர் நல்ல சஞ்சிகைகள் நடுவழியில் நின்று விடுகின்றன எனவும் குறிப்பிட்டார். தொடர்ந்து வெளிவரும் சஞ்சிகைகள் எல்லாம் நல்லதல்ல என்கிறாரோ. வடபகுதியில் ஒரு தாக்குதல் நடந்தால் அதை வைத்து ஒரு மாதம் பத்திரிகை நடத்தி விடுகிறார்கள் எனக் குறிப்பிட்ட பேராசிரியர் வீரகேசரி படித்தால் புகலிட பத்திரிகைகளை படிக்கத் தேவையில்லை என்றார். சற்று நேரத்தின் பின் அங்கு எந்தச் சஞ்சிகை, பத்திரிகையிலும் போட மறுக்கப்பட்ட ஆக்கங்களை இங்கு அனுப்பினால் வீரகேசரி தினகரன் பிரசுரித்து விடும் என்றும் குத்தல் பேசினார். அவரது பேச்சின் முரண்பாடுகள் பலரையும் முகஞ் சுழிக்கவைத்தது.

நல்ல எழுத்தாளர்களை தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் தெரிந்து வைத்திருப்பதில்லை எனச் சாடிய பேராசிரியர் உதாரணமாக எமது எழுத்தாளர் ஒருவர் மிகச் சிறந்தவர் அவரது பெயர் 10 நிமிடங்களாக யோசித்துப் பார்த்தார். மேடையில் இருந்தவர்களை கேட்டுப் பார்த்தார். அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு மாதிரியாக எல்லோருமாகச் சேர்ந்து கண்டு பிடித்துக் கூறினார்கள் இவரது பெயரை தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறார்கள்? எனக் கேட்டார். இவருக்கே ஞாபகத்தில் இல்லாத பெயரை தமிழ் நாட்டான் எப்படி ஞாபகத்தில் வைத்திருப்பான் என்று சபையிலிருந்தோர் முணுமுணுத்தனர்.

புகலிட இலக்கியம் ஒன்றில் புலி ஆதரவு அல்லது புலி புலி எதிர்ப்பு என்ற வட்டத்துக்குள் நிற்கின்றது, சமுதாயப் பார்வை கிடையாது என்று பேசிய சிவசேகரம் இன்றைய நிலையில் இதை விடுத்து வேறு எத்தகைய சமுதாயப் பார்வையை வலியுறுத்த நினைக்கிறாரோ தெரியவில்லை சீதனம் பெண்ணடிமை, சாதி முறைமை போன்ற சமுதாயச் சீர்கேடுகள் இன்றைய நிலையில் மக்களுடைய இருப்புப் பற்றிய முதன்மைப் போராட்டத்தினூடாகவே களையப்படுஞ் சாத்தியம் இருக்கும் போது இவர் யதார்த்தத்தை பிரதி பலிக்கின்றாரா என்ற ஐயம் பலருடைய மனதிலும் எழவே செய்தது. புகலிடத்திலுள்ளோர் இன்னும் இரண்டு சந்ததிகளின் பின்னர் அங்கேயே சங்கமித்து விடுவர் என்ற எதிர்பார்ப்பையும் வெளியிட்டார் பேராசிரியர் புதியவர்கள் தோன்றவில்லை. இங்கிருந்து சென்ற முகவரியுள்ள எழுத்தாளர்களே தொடர்ந்தும் எழுதுகிறார்கள் பிரகாசிக்கிறார்கள் எனவும் கருத்துரைத்தார்.

**குண்டூசி**

# சிவசேகரத்தின் பதில்

அன்புக்குரிய ஆசிரியர் அறிவது,

உங்கள் பத்திரிகை 22-28 ஏப்ரல் 1994 இதழிற், குண்டூசி என்னும் பேரில் எழுதும் ஒருவர், நான் கொழும்பில் நின்ற சமயம் பேசிய விஷயம் பற்றி எழுதியவை என் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டன.

நான் என்ன பேசினேன் என்பதை அறிவதை விட அதை எவ்வாறு திரிக்கலாம் என்பதிலேயே இந்த அரட்டை எழுத்தாளர் தன் சிரத்தையைக் காட்டியுள்ளார். நான் பேசியதன் சாராம்சம் பின்வருமாறு... புலம் பெயர்ந்தோரின் வியாபார ஏடுகளின் செய்தித் தரம் மிகவும் குறைவானது. சிறு சஞ்சிகைகளிலேயே கனதியான எழுத்துப் பற்றி அக்கறை உள்ளது. தரமான சிறு சஞ்சிகைகள் சிலவே இன்னும் தொடர்ந்து பிரசுரமாகின்றன. பல நல்ல முயற்சிகள் இடையிடையே நின்று விட்டன. புலம் பெயர்ந்தோர் பலர் எழுதி வருகிற போதிலும் புலம் பெயர்ந்த வாழ்க்கை தொடர்பான இலக்கியம் இன்னும் உருவாகவில்லை அஃது பற்றிய சில படைப்புக்கள் இருப்பினும், எழுத்து இன்னமும் ஈழ மண் தொடபானதாகவே பெரிதும் உள்ளது. தரமான எழுத்தாளர்களிற் பெரும்பாலோனோர் புலப் பெயர்விற்கு முன்னமே எழுதத் தொடங்கிவிட்டவர்கள். புதிய சூழல் உருவாக்கிய எழுத்தாளர் பரம்பரை இன்னும் வளர வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்தோர் இலக்கியமே தமிழில் முன்னேக்கியுள்ளது என்ற கருத்தை ஏற்க இயலாது. பல குறைபாடுகளும் கருத்து வேறுபாடுகளும் ஒருபுறமிருக்க, இலங்கை மண்ணிலேயே சிறப்பான இலக்கியம் உருவாகிறது என்பது என் எண்ணம். புலம் பெயர்ந்த சிறு சஞ்சிகைகள் ஆற்றும் ஒரு முக்கிய பணி இலங்கையிற் சாத்தியப்படாத விவாதங்கட்குக் களமமைத்துக் கொடுப்பதாகும்.

பேசுகையிற் பேர் மறந்து போன எழுத்தாளர் மு.சட்டநாதன், ஈழத்தமிழ்ச் சிறுகதை உலகத் தரத்திற்கு உயரவில்லை என்று யாரோ பேசியதாக எனக்கு முன் பேசிய ந. ரவீந்திரன் குறிப்பிட்டது தொடர்பாகவே நான் சென்ற வருடம் பாரிஸ் வெளியீடான ஓசையில் விமர்சித்த சட்டநாதனின் கதைகளைக் குறிப்பிட்டேன். இதற்கும் இந்திய விமர்சகர்களது அறியாமை பற்றிய இன்னொரு குறிப்புக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. நான் பேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இது புறம்பானது என்பதாலும் சில சமயங்களில் எம்மிற் பலருக்கும் ஏற்படும் தற்காலிக மறதியாலும் (பரீட்சைகள், நேர்முகங்களில் நிகழ்வதுபோல்) அவர் பேர் வாய்க்கு வரவில்லை. இரண்டு மூன்று நிமிடத் தடுமாற்றத்தின் பின் நானுகவே அவர் பேரை நினைவுகொண்டேன். உமா வரதராஜன் ரஞ்சகுமார் ஆகியோர் சிறப்பாக எழுதுவது பற்றியும் குறிப்பிட்டேன்.

என் பேச்சில் ஏற்பட்ட அத்தடுமாற்றம் அவையோர் நடுவே சிறிய சலசலப்பை ஏற்படுத்தியது இயல்பானதே. அவர்கள் பேசியதை எல்லாம் கவனமாக கேட்டறிந்து பந்திக்குள் இருந்து கல்லெறியும் எழுத்தாளர் தான் பேசிய எதையுமே கவனித்துக் கேட்டதாகத் தெரியவில்லை.

புகலிடஏடுகளிற்பெருவாரியானவை புலி ஆதரவு அல்லது புலி எதிர்ப்பு என்று முன்கூட்டியே முடிவெடுத்துச் செயற்படும் போது பொறுப்பான விமர்சனப் பார்வைக்கு அங்கு இடமிராது. சாதியமும், சீதனமுறையும், பெண்ணடிமைத் தனமும் மட்டுமன்றி நமது வாழ்க்கை முறை தொடர்பான பல வேறு கேள்விகள் உள்ளன. நமது சுய அடையாளம் பற்றிய கேள்விகள் உள்ளன. நமது கலாச்சாரத்தின் முனைப்புப் பற்றிய கேள்விகள் உள்ளன. நமது இவை புலம் பெயர்ந்த சமுதாயத்தில் எவ்வாறு எதிர் கொள்ளப்படுகின்றன என்பதற்கு ஈழமண்ணிற் தீர்வுகள் இல்லை. புலம் பெயர்ந்தோரில் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் உள்ளோர் திரும்பும்வாய்ப்புக்கள் குறைவானதே. பிற நாடுகளில் உள்ளோரிற் கனடா, பிரிட்டன் போக எத்தனிப்போர் கணிசமானோர். ஐரோப்பாவின் நிறவெறி பலரை ஈழத்துக்குத் திருப்பியனுப்பும்சூழ்நிலைஏற்படலாம். ஆயினும் இன்றுள்ள நிலையில் சொந்த நாடு திரும்ப ஆயத்தமாக அனேகர் இல்லை. இன்னும் இரண்டு சந்ததிகட்குப் பின்னும் புகலிடத்தில் இருப்போர் தாய்நாடு திரும்புவது மிகவும் ஐயத்துக்குரியதே. தாய்மொழியை மறவாத வங்காள தேசத்தவர்களையும் பஞ்சாபியரையும் கொஞ்சம் கவனித்தால் இந்த உண்மை விளங்கும். குண்டூசிக்கு இது தெரிய நியாயமில்லைத்தான்.

## குடும்பத்திற்காக..

வைக்கப்பட்டுள்ளார், தனது வழக்கைத் காத்திருக்கின்ருர், அவ்வளவுதான்."

அவளுக்கு நான் கேட்டது விளங்கவில்லையென்று எனக்குப் புரிந்தது.

"நான் சொல்ல வந்தது என்னவென்ருல், தனக்கு நடந்ததைப் பற்றிய அவரது விளக்கம் என்ன?"

என்னை அவள் கோணலாகப் பார்க்கின்ருள்

"அவர் உனக்கு என்ன விளக்கம் தரவேண்டும்? இது ஒரு விதியென்று அவர் சொன்னுர்.... வாகனம் மட்டும் கட்டியாகிக் கிடந்த வெண்பனியில் சறுக்கி மரம் ஒன்றில் மோதி அடிபட்டிருக்காவிடின் எல்லோரும் காப்பாற்றப்பட்டிருப்பர்....."

ஒவ்வொரு இரவிலும் பெடரிக்கோ கள்வனுக இருந்தானென்பதும் அதற்கு ஜியூப்பினு துணையாக இருந்தாளென்பதும் முதல் தடவையாக எனது மனதில் பட்டது. முன்னெச்சரிக்கையோடு நான் அவளிடம் கேட்டேன்.

"அவர் அங்கும் இங்குமென இப்படிப்பட்ட விஷயங்களை இரவில் செய்தது உனக்குத் தெரியும்தானே?"

இமைகள் விரிய அவள் என்னைப் பார்க்கின்ருள்

"இல்லை, எனக்கு அது தெரியாது. தெரிந்திருந்தால் 'செய், இன்னும் நன்ருகச் செய்' எனச் சொல்லியிருப்பேன். இப்படித்தான் நான் சொல்லியிருப்பேன்.

நான் திகிலடைந்தேன்:- "அப்படியா? இப்படியல்ல ஒருவனை ஊக்கப்படுத்துவது.

நான் சொல்லத் தொடங்கியதை முடிக்க அவள் விடவில்லை:-

"ஆ! அல்பிரட்டோ, நான் வாழ்ந்ததை உன்னுல் கற்பனை செய்து பார்க்க முடியாது. என்னைபோல வேதனையையும் துர்அதிஷ்டத்தையும் வாழ்கின்ற பெண் உலகில் இல்லை....

" எனக் கண்ணீர் கக்கும் ஒரு குரலில் அவள் திடீரென்று கத்தினுள்.

நெருடலுடன் நான் சொன்னேன்

"ஆம், என்னுல் இதை விளங்க முடிகின்றது...."

ஆனுல் திடீரென அவள் கொதித்து, "விளங்குவதற்கு எதுவுமேயில்லை. எதுவுமே விளங்க முடியாதது. நான் மிகவும் சந்தோஷமாக இருந்தேன்.. மிகவும் சந்தோஷமாக.... மிகவும் இருண்ட துரதிஷ்டத்துக்குள் அதிஷ்டத்தைத் தேடிய என்னைப் பார். . அவர் செய்ததற்கெல்லாம் நான் ஆம் போட்டேன் என்று இப்போது நான் சொல்கின்றேன். இது ஏன்?"

இந்ததத் தடவை நான் ஊமையாகவிருந்தேன். ஏன்? அது எனக்குத் தெரியும். ஆனுல் அதனைச் சொல்லாது விடுதல் நல்லதென எனக்குப்பட்டது... அவள் தொடர்ந்தாள்:-

" நான் பெடரிக்கோவை விரும்பினேன். பெடரிக்கோ என்னை விரும்பினுர். நாங்கள் இருவரும் எமது குழந்தைகளை விரும்பினேம். எங்களுக்கு எந்தக் குறையும் ஏற்பட அவர் விடவில்லை. எங்களைப் பற்றி மட்டுமே அவர் சிந்தித்தார். அதற்காகவே வாழ்ந்தார். குடும்பத்துக்காக வாழ்ந்தார் எனத் தாராளமாகச் சொல்லலாம்..."

நெருடலுடன் நான் சொன்னேன "இது உண்மை, குடும்பம், இது ஓர் மிகப்பெரிய அழகிய விஷயம்."

அவள் கத்தினுள "ஆம் அல்பிரட்டோ, ஆனுல் எங்களது குடும்பம் ஏனைய குடும்பங்களைப்போன்றதல்ல, இது ஓர் வித்தியாசமான குடும்பம். ஒது போதுமே இதுபோல வேறெங்கும் தோன்றியதில்லை. எங்களது குடும்பத்தைப்போன்ற ஒன்று வேறெங்கும் தோன்றப் போவது மில்லை. ஆ! இதனை என்னுல் சத்தம் போட்டுச் சொல்ல முடியும். அல்பிரட்டோ, எங்களதைப் போன்ற ஐக்கியமானதும் மிருதுவானதுமான குடும்பம் இந்த உலகத்தில் இல்லை."

வானம் மூடிய ஜன்னலின் மீது ஒரு கணம் அவள் தன்னைப் புதைத்துக் கொண்டாள். பின்னர், நான் எந்த ஒரு வார்த்தையையும் சொல்லாதிருந ததைக் கண்டு தொடர்ந்தாள்.

"அவர் எவ்வளவு நல்லவராயிருந்தார் என்பதைச் சொல்வதற்கு வார்த்தைகளேயில்லை. சில மாலை நேரங்களில், குழந்தைகளை நான் படுக்க வைத்தபின்னர், அவர் இந்த மேசையின் முன்னேயிருந்து எதிர் காலத்துக்கான திட்டங்களைப் போட்டார்.. ஒருபோதுமே அவர் தன்னைப் பற்றிப் பேசியதில்லை. அவரது முழுச்சிந்தனையும் குடும்பத்தைப் பற்றியதே. உதாரணத்துக்கு அவர் இப்படிச் சொன்னுர்: (கிட்டத்தட்ட தன்னை மறந்த நிலையில் அவள் மிருதுவாகப் பேசினுள். பிரெடெரிக்கோவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வார்த்தைகளை அப்படியே உச்சரித்தாள்) இப்போது எங்களிடம் ஒரு மோட்டார் உள்ளது. விஷயங்கள் சரியாக நடக்குமானால் இன்னும் சில நாள்களில் நாம் ஓர் சின்ன வாகனம் வாங்குவோம். உனக்கும் குழந்தைகளுக்கும் எது நல்லதென உனக்குத் தெரியுமா? OSTIE இலும் FREGENE இலும் போய் நல்ல காற்று வாங்குவது..... நீ விரும்பினால் ஒவ்வொரு நாளிலும் போய் நல்ல காற்று வாங்கலாம்....' ஆ! பிரெடெரிக்கோ போன்ற ஒரு கணவனை நான் எங்கே கண்டு பிடிக்க முடியும்! அல்பிரெட்டோ? எங்கே நான் கண்டு பிடிக்க முடியும்?"

எனக்குள் ஓர் எரிவு ஏன் ஏற்பட்டதென எனக்குத் தெரியவில்லை. சின்னவாகனத்தை வாங்க அவன் பணத்தைப் பெற்றுக் கொள்ளுவான் எனச் சிந்தித்ததினாலிருக்கலாம். ஒரு இறுக்கமான குரலில் நான் சொன்னேன்:- "நீ சொல்வது உண்மையாக இருக்கலாம் ஜியூஸ்பினா, நீ உனது கணவனை விரும்புகின்றாய் என்பதை என்னால் விளங்கமுடிகின்றது. ஆனால் நீ ஒன்றை அங்கீகரிக்க வேண்டும்..."

"எதனை?"

அவன் ஒரு கள்வன்!

நான் எனது வாயை மூடியிருப்பின் நல்லதாக இருந்திருக்கும்!

இதோ, போராடும் கூந்தலும், தலையை விட்டு விலகிய விழிகளும் எனக்கெதிராகத் திரும்புகின்றன:-" பெடரிக்கோ பற்றிப் பேச உனக்கு உரிமையில்லை,! அவனைப் பற்றி கூடாததாக ஏதும் சொல்லின், கவனம்..."

"ஆனால், நான்....."

"அவனைப் பற்றிப் பேசாதே, உனக்கு அந்தத் தகுதியில்லை, அவரது பாதங்கள் மிதித்த நிலத்தை முத்தமிடக்கூட உனக்குத் தகுதியில்லை...."

தடை, நான் வாயைப் பிளந்துகொண்டு நின்றேன். என்னைப் பார்க்காமல், நாடகமேடையின் பின்புறம் நின்று பேசுவதைப் போல அவள் பேசினாள்:- "பெடரிக்கோ ஒரு மனிதன், இவரைப்போல உலகில் வேறெவரும் இல்லை. அவர் அப்படித்தான் இருந்தார். டெரிக்கோவைப் பற்றி யாவரும் எதுவுமே சொல்லமுடியாது. நான் மட்டுமே அவர் யாரென்று சொல்ல முடியும்...அவர் ஒரு புனிதர்!"

மதி மயங்கிய நிலையில் நான் ஆச்சரியத்தோடு சொன்னேன்:- "ஓ ஜியூஸ்பினா, ஆ உனக்கு புனிதர் என்றால் என்ன வென்று தெரியாது போலும்?"

அவளோ, இன்னும் அதிகமாக மெச்சத் தொடங்கினாள்:- "நிச்சயமாக எனக்குத் தெரியும். ஒரு புனிதருடன் நான் பன்னிரெண்டு வருடங்கள் வாழ்ந்தேன். நான் உனக்குச் சொல்கின்றேன், பெடரிக்கோ ஒரு புனிதர்."

நான் சிந்தித்தேன்: தோளிலே துவக்கைச் சுமந்து கொண்டும், கையிலே ஒரு குறட்டுடனும் ஒரு புனிதர்! அவளை மீண்டும் சிலிர்ப்படைய வைக்காதிருக்க நான் எதுவும் சொல்லாதிருந்தேன். இப்போது அவள் அழுதாள், தனது கண்ணீரைக் குடித்தாள், தலை தாழ்ந்திருந்தது. விழிகள் மேசைமீது நிலை கொண்டிருந்தன. திடீரென்று அவள் கத்த வெளிக்கிட நான் துணுக்குற்றேன்:- இப்போது என்னிடமிருந்து அவரை அவர்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள்.. அவரைச் சிறையிலே போட்டுவிட்டார்கள்.. என்னிடமிருந்து அவரைப் பிடுங்கிவிட்டார்கள்.. அவரது பிள்ளைகளிடமிருந்து அவரைப் பிடுங்கிவிட்டார்கள்.... எமது குடும்பத்தை அவர்கள் அழித்துவிட்டார்கள்.... ஏன்? நான் கேட்கின்றேன் ஏன்?"

நான் நாசூக்காக சொன்னேன்:- ஜியூஸ்பினா, அது ஏன் என்று உனக்கு நன்றாகத் தெரியும்...."

"ஆம், எனக்குத் தெரியும்: தீமை செய்வதற்கு... எது அழகியதோ எது நல்லதோ அனைத்தையும் அழிப்பதற்கு. ... நாங்கள் சந்தோஷமாக இருப்பதைத் தடுப்பதற்கு!"

"வேறு காரணங்களும் ஒரு வேளை இதற்குள் இருக்கலாம்தானே?"

"இல்லை, வேறு காரணங்கள் எதுவுமே இல்லை.. விருப்பம், இதுதான் காரணம் விருப்பம்! ஆ! கடந்த கடைசி ஆண்டுகளில் பெடரிக்கோவுடன் சந்தோஷமாக வாழ்ந்ததைப் போன்று இனிமேல் ஒரு போதும் வாழமாட்டேன் என நான் உணர்கின்றேன்.

மீண்டும் அவள் அழுகின்றாள். என்ன சொல்வதெனத் தெரியாத நிலையில் நான் சொன்னேன்: ஜியூஸ்பினா, ஒரு பொரியலையாவது சாப்பிடு, அது ஆசுவாசப்படுத்தும்...."

அவள் தனது தலையை ஆட்டுகின்றாள்:-" இதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனது வாய் எப்போதுமே கைப்பாக இருந்த ஒன்று, அல்பிரெட்டோ, எப்படியோ உனக்கு என் நன்றி.... நீ நல்லவன்.. . பெடரிக்கோவைப் போல உன்னிடமும் ஏதோ ஒன்று உள்ளது, ஒருவேளை நீ மட்டுமே அவனை விளங்கிக்கொள்ள முடியும்.. ஏனெனில் நீ அவனைப் போலிருக்கின்றாய்....."

"உண்மை, நான் மட்டுமே, ஆனால் நானே ஒரு புனிதன் அல்லன்" என முணுமுணுப்பதை என்னால் தடுக்க முடியவில்லை. அவளுக்கோ நான் சொன்னது கேட்கவில்லை, பொரியல் பக்கெட்டை அவிழ்த்துக் கொண்டிருந்தாள். ஒரு பொரியல் எடுத்துச் சாப்பிட வெளிக்கிட்டாள், தலை தாழ்ந்திருந்தது. சோர்வுடன் சிறிது மஞ்சள் கிறீம் அவளது வாயால் வழிந்தது. அவளோ அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. பின்னர் அவள் சீறிவிட்டு, கைலேஞ்சியால் முகத்தைத் துடைத்தபோது, கிறீமின் எந்தத் தடத்தையுமே காணமுடியவில்லை. நான் எழுந்தேன்:-

"நல்லது ஜியூஸ்பினா! நான் போகப் போகின்றேன்.. நாங்கள் திரும்பவும் சந்திப்போம்."

அவளும் எழுகின்றாள். எதுவும் பேசாமல் முகப்பு அறை வரை என்னைத் தொடர்கின்றாள். கரங்களை எனக்குத் தந்த வேளையில் கலக்கம் அவளைப் பிடித்துக் கொள்கின்றது:

"நீ என்ன நினைக்கின்றாய், அவர்கள் என்னிடமிருந்து பறித்த அவரைத் தண்டிப்பார்களா?"

"ஹ்ம்.... ஆம் என்றுதான் நினைக்கின்றேன்... அப்படித்தான் நடக்கும்...."

"இது தான் நீதி" நான் படியால் இறங்கிக்கொண்டிருந்தபோது அவள் கத்தினாள், "அழகிய நீதி! எத்தனையோ ஆண்கள் தமது குடும்பங்களை பட்டினியில் கிடக்க விடுகின்றனர். இவர்களையெல்லாம் தப்பிப்போக விடுகின்றனர். அவரோ தனது குடும்பத்தைப் பற்றியே சிந்தித்தார், அவரை அடைக்கின்றார்கள்.. ஆக .... .குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடாதா?"

இந்தத் தடவை நான் பதில் சொல்லவில்லை துரிதமாகப் படிகளால் இறங்கினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏமாற்றுதே..

கைக் குழந்தையோடு வந்த ஒரு இளம் தாய் பற்றி முதலில் கூறினேன் அல்லவா? அந்தப் பெண்ணை லொட்ஜ் சொந்தக்காரன் கெடுக்க முயன்றான். இது தெரிந்த நானும் நண்பரும் பணத்தைக் கொடுத்து பாதுகாப்பான லொட்ஜுக்கு மாறினோம். இந்தப் பெண் ஜெர்மனிக்குப் போகவே வந்தார். இந்தப் பெண்ணின் கணவர் சவூதியிலிருந்து ஜெர்மனி போவதாக ஏற்பாடு. சவூதியிலிருந்து சிங்கப்பூர் வந்து வேறு ஒரு ஏஜென்சி மூலம் போக இருந்தார். அந்த ஏஜன்சிக் காரனைச் சந்தித்த அவர் மனைவியுடன் போனில் அவசரமாகப் பேசிவிட்டு சந்திக்காமலே போய் விட்டார்.

சிங்கப்பூர் வந்ததும் மனைவியைப் பாராது போகிற கணவர்கள் இருக்கிற வரை இந்த ஏஜென்ஸிக் காரர்கள் பாடு கொண்டாட்டம்தானே!

இப்படியாகப் பரிதாபக்கதைகளைச் சொல்லி கொண்டிருந்த தில்லையம்பலம் ரஷ்யாவுக்கு போன கதையைத் தொடர்ந்தார்.

மாஸ்கோ விமான நிலையத்தில் 27 பேர் இலங்கைத் தமிழர்கள் இறங்கினோம் பெண்கள் உட்பட்ட தொகை இது. 'ஆமி' உடுப்பில் இருந்த மாஸ்கோ இமிகிரேஷன் அதிகாரிகள் எங்களை வரவேற்றார்கள் அவர்களுக்கு நாங்கள் வருவது 'சந்தோஷம்' எங்களை நேராகப் பார்க்க மாட்டார்கள். கண்ணாடியைப் பார்ப்பார்கள் நாங்கள் பாஸ்போட்டுக்குள் 20 யூ.எஸ். டொலர் வைத்துக் கொடுக்க வேண்டும். சிங்கப்பூர் சிங், மாஸ்கா ஹோட்டல் முதலாளியுடன் ஏற்கனவே இப்படியான அடிமை வியாபாரத்துக் கான தொடர்புகளை நமது ஏஜன்சி காமுகர்கள் செய்து வைத்துள்ளார்கள். சுங்கப் பகுதிக்குப் போனோம். ஹோட்டல் முதலாளி அங்கு வந்தான். அவன் அங்கு சர்வாதிகாரி போல, எங்கள் பாஸ்போட்டுக்கள் எல்லாவற்றையும் ஒன்றாக வாங்கிக் கொண்டு எங்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு ஹோட்டலுக்குப் போனான். இரண்டு நாள் அந்த ஹோட்டலில் நிற்கலாம். அதாவது 2 நாள் மட்டும் ரஷ்யாவில் நிற்க அனுமதி.

பாஸ்போட் அவனிடம் பின்னர் வாங்குவதற்கு 50 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டும்.

நாங்கள் பாஸ்போட் வாங்கவில்லை. ஏஜென்ட் எங்களையெல்லாம் கூட்டிக் கொண்டு எங்கேயோ போனான். மாடிக் கட்டிடமொன்றில் முதலில் 2 பேரைக் கூட்டிப் போனான். பின் இரண்டு இரண்டு பேராக கை காட்டும் போது வரும் படி சொன்னான் பின்தான் தெரிந்து. ஒரு குறிப்பிட்ட மூன்றோ நான்கு பேருக்கு என்றுதான் அந்த வீட்டை வாடகைக்கு எடுத்தான். ஆனால் 27 பேரை அதற்குள் இருக்க விட்டிருக்கிறான். அந்த வீட்டில் படுப்பதற்கு ஒரு கட்டில் கூட இல்லை. குளிர் வேறு. சாப்பாட்டுக்கு எங்களிடம் சிறிதளவு அரிசி மட்டுமே இருந்தது கொஞ்சம் மீன் டின்களும் இருந்தன. அவன் எங்களை விட்டு விட்டுப் போய்விட்டான். எங்களை மாதிரி பலரை அவன் ஏற்கனவே கூட்டி வந்து வைத்திருக்கிறான் என்பதையும் மாதக்கணக்கில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் பின்னர்தான் நேரிலேயே அறிந்தோம்.

என்னை சிங்கப்பூருக்கு கூட்டி வந்த ஏஜன்ட் அவன் தம்பி ரஷ்யாவில் பேர் பெற்றவர்கள் இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறியவர்கள்தான் ஒருவர் ஏழு கன்னிப் பெண்களை கெடுத்து அவர்களைக் கர்ப்பிணிகளாக்கி நடுவீதியில் வாழா வெட்டிகளாக்கிய 'சாதனைக்குரியவன்' என்று ரஷ்யாவில் முன்னதாக வந்தவர்கள் சொன்னார்கள்.

சுவிசில் தனது கணவரைச் சென்று அடைவதற்காக இரண்டு வயதுக் குழந்தையொன்றுடன் புறப்பட்ட பெண் ஒருத்தி இவர்களில் ஒருவனால் கெடுக்கப்பட்டு பின்னர் அவனுடனேயே வாழ வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாகி இப்போது சுவிஸில் கணவனும் இல்லாமல் ஏஜென்சிக்காரனுமில்லாமல் சமுகத்திலிருந்து ஒதுங்கி வாழ்கிறாளாம்.!

ரஷ்ய நாட்டில் இப்படியாக இந்த அயோக்கிய சிகாமணிகளால் வாழ்வு இழந்த பெண்கள் பலரின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டு என் நெஞ்சம் பதை பதைத்தது.

வெளிநாடுகளிலுள்ள உறவினர்களின் உதவியோடு பணத்தை பெற்று வயிற்றை நிரப்ப ஏதோ சாப்பாடு என்ற பெயரில் 'அவியலை' சாப்பிட்டு உயிர் வாழும் பல நூற்றுக்கணக் கானவர்களை அங்கிருந்து மீட்பதற்கு அல்லது எமது நாட்டுக்கு மீண்டும் திரும்பி அவர்கள் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாஸ்கோவில் நூற்றுக் கணக்கில் வாழ்ந்த இலங்கையர்கள் இப்போது லெனின் கிராட், உக்ரெய்ன் ஜோர்ஜியா போன்ற இடங்களிலும் சென்று வாழ்கிறார்கள்.

ஆனாலும் இந்த ஏஜென்சிக்காரர்கள் தமது தொழிலை இங்கு விஸ்தரித்து பணத்தையும் கொள்ளையடித்து பெண்களையும் கெடுத்து விடுகிறார்கள்.

நான் எப்படியோ ரஷ்ய நாட்டிலிருந்து லண்டன் வந்த சேர்ந்து விட்டேன் என்று பெருமூச்சுடன் கூறி முடித்தார். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை இந்த ஏமாற்றுக்காரர்கள் சுகமாக வாழ்ந்துக்கொண்டுதானிருப்பார்கள்.. இவர்களை இந்த அப்பாவிகளின் பெருமூச்சுக்களும், சாபங்களும், சுகமாக வாழ வைத்துவிடுமா என்பது கேள்விக்குறிதான். நரகத்தின் தீச்சுவாலைகளின் உஷ்ணத்தை இவர்கள் என்றோ ஒரு நாள் அனுபவிக்கப் போகின்றார்கள்.. அதுவரை நாமும் ஏமாறுமலிருப்போம்....

---

## குரக்கன் பிட்டு..

என்பது அவசியமானது தான். ஆனால் பலவந்தமாய் திணிக்கப்பட்ட நெருக்கடிக்குள் ஏற்படுவது தன்னிறைவு அல்ல. தப்பிப் பிழைப்பு.

★ ★ ★

தோட்டங்களில் இலகுவாக திருட்டுப் போவது மரவள்ளிதான். அதிலும் தோட்டத்தில் நீர் இறைத்த நிலையில் திருடர்கள் பாடு ஒரே குஷி. இழுக்க சுலபமாய் வரும். ஊரில் மரவள்ளித் திருடர்கள் அதிகம். வீட்டில் சாப்பிடுவதற்காக திருடுவோர், ஜாலிக்காய் திருடும் இளைஞர் கூட்டம் என்றெல்லாம் இருக்கிறது. திருடி சந்தையில் விற்கும் கூட்டமும் உண்டு.

இந்த திருடர்களின் தொல்லை தாங்காது கியூறியஸின் சிறிய தந்தையார் முறையான ஒருவர் ஒரு தடவை தோட்டத்தில் காவல் இருந்தார். நன்றாக கசிப்பு அடித்து விட்டு, 'டேய் இண்டைக்கு வாறவங்கள் வரட்டும்' என்று ஒரு பாட்டம் சத்தம் போட்டுக் காவல் இருந்தார். காலையில் எழுந்து பார்த்தால், திருடர்கள் கிழங்கையும் திருடிக் கொண்டு இவர் திருடர்களைப் பிடிக்க காவலுக்கு வைத்திருந்த டோர்ச் லைட்டையும் திருடிக்கொண்டு போய் சேர்ந்து விட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'

# குரக்கன் பிட்டும் மரவள்ளிக்கிழங்கும்

அறுஞர் பேராசிரியர் கல்லாந்தி கியூறியஸ் ஜீ

கனடா வாழ் தமிழருக்கு சேவை செய்வதற்காக நடத்தப்படும் கடைகளும் விளியோகஸ்தர்களும் தமிழர்கள் home sick ஆகக் கூடாது என்ற பெரு நோக்கில் அங்கிருந்து எல்லாப் பொருட்களையும் 'விசேடமாகத் தருவித்து' வருகிறார்கள். கனடாவில் துண்டுப் பொயிலை தொடக்கம், வீட்டுக்கு அச்சுறுக்கையாகக் கட்டப்படுகின்ற வேலியைத் தவிர எல்லாம் உண்டு. சாதி, ஊர்ப்பிரச்சனை, 'உதைபந்தாட்டம், 'டுமீல் டுமீல்' என்று எல்லாருக்குமே Homely feeling ஐத் தருவதில் இந்த இறக்குமதியாளர்களுக்கு நிறையப் பங்குண்டு. பனங்கிழங்கு இங்கே இல்லை என்று கியூறியஸ் எழுதியதற்காக விசேடமாக பனங்கிழங்கைத் தருவித்து கியூறியஸ்க்கு ஒரு றுத்தல் (ஒரே ஒரு றுத்தல்) கொடுக்கும்படி கடைக்காரர் ஒருவரைக் கேட்டுக் கொண்ட வினியோகஸ்தரும் உண்டு. கியூறியஸ் காணாத பனங்கிழங்கா.. (பனம்) பழம் திண்டுகொட்டைபோட்டவன் அவன். பனங்கிழங்கு மேடை போட்டே கிழங்கு சாப்பிட்டவன் அவன். விசயம் தெரியாமல் தும்போடு சாப்பிட்டு வயிற்று வலியால் துடித்தது வேறு பிரச்சனை.


ஒரு நாள் பார்த்தேன்.. கடையொன்றில் நுங்கு இருந்தது. பார்த்தால் நுங்கு மாதிரி இல்லாமல் சுருங்கிப் போய.... பரிதாபமாக இருந்தது. கியூறியஸ் சாப்பிட்ட நுங்கு வேறு.. சோளகக் காற்றுக் காலங்களில் விழுகின்ற நுங்குகளை 'இரத்தம் சொட்டச் சொட்ட'.. அதாவது இக்கிரி முள் குத்தி காலில் ரத்தம் சொட்டச் சொட்ட... பாய்ந்து சென்று பொறுக்கி கல்லில் குத்தி.. விரலை விட்டு ஆட்டி.. இதைத் தான் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டுதல் என்பார்களோ... குடிக்கும் போது இருக்கும் இன்பம்.. அப்பப்பா.. சொல்லியடங்காது. சில நேரங்களில் முற்றிப் போய் சீக்காய் பருவத்தில் வரும். கடித்தால் தேங்காய்ச் சொட்டு மாதிரி இருக்கும்.

★ ★ ★

இந்த பனை மா வளவில் உள்ள பனைகள் எல்லாம் பின் நாளில் புலிகளால் தறிக்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாக சமீபத்தில் 'யாழ்ப்பயணம்' சென்றவர்கள் சொன்னார்கள். அமாவாசை இரவிலும் லைட் இல்லாமல் மரங்களில் மோதிக் கொள்ளாமலும் கிடங்குகளில் விழாமலும் சைக்கிள் ஓடும் அளவுக்கு கியூறியஸ்க்கு இந்த இடங்கள் அத்துபடி. அப்படி ஒரு உறவு. சுமார் ஐநூறு மரங்கள் வரை இருக்கும். கியூறியஸ் பையலாய் இருந்த காலத்தில் ஒரு தடவை 'காம்ப்' அடித்து சில மரங்களைத் தறித்திருந்தார்கள். இப்படி கூண்டோடு கைலாயம் அனுப்ப யாரும் நினைத்ததில்லை. மரம் தறிக்கும் போது அதன் குருத்து சாப்பிட்டிருக்கிறீர்களா? அந்த நேரங்களில் யாராவது பனை ஓலை வெட்டினால்... அவர்களைக் கெஞ்சி மன்றாடினால் நுங்கை அழகாகச் சீவித் தருவார்கள். மற்றும்படி பெரும்பாலும் அணில் கடித்த நுங்கு தான் நமக்கு. கல்லால் எறிந்தே நுங்கு விழுத்துகின்ற என் மாஜி கிளாஸ்மேட்டுகளும் உண்டு. சே.. இப்ப ஊரில் இருந்தால்.. கனடாவிற்கு நுங்கு எக்ஸ்போட் பண்ணி காசு சம்பாதித்திருக்கலாம்.

ஆனால் இம்முறை உலகத்தமிழரில் பார்த்தால் பனை மரங்கள் தறிப்பது சட்டவிரோதம் ஆக்கப்பட்டுள்ளதாகவும் பனை மரங்களைத் தறிக்க புலிகளிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் யாராவது தறித்தால் தகவல் தரும்படியும் இருந்தது.

★ ★ ★



'தர்க்க ரீதியான நியாயம்' என்ற ஒன்றை நான் புலிகளிடம் ஆரம்ப காலம் தொடக்கம் தான் தேடிப் பார்க்கிறேன். அப்படி ஒன்றை கண்டதில்லை. தாங்கள் கொள்ளையடித்தார்கள் வங்கிகளை.. கோழி பிடித்தவனை சமூக விரோதி என்று சுட்டுக் கொன்றார்கள். தாங்கள் பனை மரத்தை தறித்து பங்கர் கட்டினார்கள். வீடு கட்டினார்கள். இப்போது சட்ட விரோதம் என்கிறார்கள். இவர்களுக்கு நியாயம் என்பது காலம் சார்ந்ததா? இல்லை, தன்னிலை சார்ந்ததா? என்பது இன்னமும் புரியவில்லை. இப்போது பனை மரம் தேசிய மரம் என்ற மாதிரி கதை.. ஒரு மரம் வளர எவ்வளவு காலம் செல்லும். வடலி வளர்த்து கள்ளுக் குடிக்கிற கதை தெரியும். சில நிமிடங்களில் மரத்தை தறித்து விடலாம். எனக்குத் தெரிந்த இப்படியான இரண்டு பனை மரக்காணிகள் ஒட்டுமொத்தமாய் தறிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படி ஊரில் பெரும் காணித் தட்டுப்பாடு இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. இதெல்லாம் பட்ட பின்னாலே வருகிற ஞானம்! சிவநெறிக் காவலர் மில்க்வைட் காரர் பனையை வளர்ப்போம், பயனைப் பெறுவோம் என்று மரம் நடு இயக்கம் நடத்தி முன்பு பனை மரம் வளர்த்தார். இந்த 'முறிந்த பனைக்காவலர்கள்' இருக்கின்ற மரத்தை தறித்து விழுத்தி விட்டு, இப்போது காவல்.

★ ★ ★

பனங்கிழங்கு, நுங்கு போன்றே என் இளமை நினைவுகளில் மிதக்கச் செய்தது இன்னொன்று. சென்ற வாரங்களில் நிரு பிராண்ட் நிறுவனத்தினர் தற்போது விற்பனைக்கு விட்டுள்ள குரக்கன் மா வாங்கி வந்தேன். 'தரத்தில் சிறந்த' நிரு பிராண்ட் தயாரிப்புகளில் எனக்குப் பிடித்தது அந்த 'பத்தியத் தூள்'. மீன் குழம்பு வைத்து ரோஸ்ட் பாணுடன் சாப்பிட்டால் அந்த மாதிரி இருக்கும். உடலுக்கு ஊக்கம், அறிவுக்கு ஆக்கம்! இப்போது குரக்கன் மா!

இப்போது நிரு பிராண்ட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குரக்கன் பற்றி சொல்லி விட்டேனு.. அவ்வளவு தான். இங்கேயுள்ள அனைத்து வினியோகத்தரும் ஆளுக்காள் குரக்கன் மாவோடு கடை கடையாய் அலையப் போகிறுர்கள். அத்தோடு பாணுக்குப் போட்டியாக குரக்கன் பிட்டு பார்சல் அறிமுகமாகும். சீனிச் சம்பல், இறைச்சிக்கறி.. வாழ்க நம் வியாபாரப் போட்டி.

கியூறியஸ் நீண்ட காலமாய் சாப்பிடாதிருந்த பொருள் குரக்கன் பிட்டு. பையலாய் இருந்த காலத்தில் கியூறியஸின் வீட்டாரின் தோட்டத்தில் குரக்கன் விதைத் தார்கள். குரக்கன் தோட்டத்தில் நீர் இறைப்பது என்ருல் கியூறியஸ்க்கு படுபயம். காரணம், குரக்கனுக்கு பாம்பு வரும் என்று பயமுறுத்தியது தான். அதிலும் இரவில் குரக்கன் பிட்டு மணம் வந்தால் நாகபாம்பு கொட்டாவி விடுகிறது என்று வேறு பயமுறுத்தியிருந்தார்கள். இந்த குரக்கனை 'புதுக்க விதைத்து' 'புதுக்க அறுத்த' பின்னர் 'விற்பனைக்கு விடுவதில்லை, வீட்டுப் பயன்பாட்டுக்கு மட்டுமே' என்று முடிவானதும் வந்தது தொல்லை.

★ ★ ★

விவசாயிகளின் பிள்ளை களாயிருப்பதால் 'உடன் மரக்கறி' வகைகளை சாப்பிடலாம் என்று உங்களுக்கு பொருமையாயி ருக்கலாம். அது கூட ஒரு வகையில் துன்பம் தான். தோட்டத்தில் கத்தரி நின்ருல்.. கத்தரிக்காய் குழம்பு, கத்தரிக்காய் சொதி, பொரியல் (ஆட்டாமா பிட்டுடன் சாப்பிட்டுப் பாருங்கள்) என்று ஒரே கத்தரிக்காய் மயமாய் இருக்கும். அதிலும் கத்தரிக்காய் பச்சையாகச் சாப்பிட்டால் பல் சூத்தை பிடிக்கும் என்ற பயமுறுத்தலால் பச்சையாகவும் சாப்பிட முடியாது. பிறகு அடுத்த சீசனில் வெண்டிக்காய் என்ருல் முடிந்தது கதை.. பிறகு பலவேறு ரகங்களில் வெண்டிக்காய் சமையலாகும்.

நல்ல காலம்.. முருங்கை மரத்தில் காய்க்கிறது. தோட்டங்களில் முருங்கைக்காய் வைக்க வெளிக்கிட்டால் நம்ம கதி என்னுவது?

★ ★ ★

இப்படியாக குரக்கன் வீட்டுப் பாவனைக்கு வந்ததால் தான் குரக்கன் எனக்கு அறிமுகமாகியது. அதை மில்லில் கொடுத்து இடித்து மாவாக்கி காலையில் பிட்டு.. குரக்கன் சலரோக வியாதிக்காரர்களுக்கு நல்ல பொருள். குருநகரைச் சேர்ந்த தன் நண்பனின் தந்தையாருக்காக கியூறியஸ் குரக்கன் மா வாங்கிச் செல்வதுண்டு. பாடசாலை நாட்களில் காலையில் ஆச்சி அவிக்கின்ற பிட்டு பாடசாலைக்கு கொண்டு செல்லப்படும். மாநகர வாசிகள் வாழ்க்கையில் குரக்கன் பிட்டைக் கண்டிருக்க மாட்டார்கள். என்ன மச்சான், கறுப்பாய்க் கிடக்கு என்பார்கள். பிறகு ருசி பிடிபட்டதும் காலை பத்து மணிக்கு பலவந்தமாக பார்சலை அவிழ்க்கச் செய்து அது சுற்றி வரும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிடியாகச் சாப்பிட்ட பின்னர் 'மணியாய் இருக்கு. மச்சான்' என்று எல்லோருமாக இருக்கின்ற சில்லறைகளைச் சேர்த்து 'மத்தியானம் சிங்களவன்ரை கடையில் பாணும் உருளைக்கிழங்குக் குழம்பும் சாப்பிடு' என்பார்கள். பாணுப்பிரியன் கியூறியஸ்க்கு வேறென்ன வேண்டும்?

ஆனல் குரக்கன் பிட்டில் கொஞ்சம் மென்மைத்தனம் இருக்காது. இறுக்கமாயிருக்கும். தூர இடங்களில் இருந்த ஹொஸ்டலில் தங்கியிருப்பவர்கள் தங்கள் 'கொங்கிறீட்' பிட்டைச் சாப்பிட்டுத் தாளாமல் கியூறியஸ் கொண்டு செல்லும் குரக்கன் பிட்டைச் சாப்பிடுவதுண்டு. அவர்களுக்கு குரக்கன் பிட்டு என்ன, தோசை, இடியப்பம் எல்லாமே அமிர்தம் தான். இதற்காக என்றே கியூறியஸின் ஆச்சி மேலதிகமாக வைப்பதுண்டு. அப்போது கொண்டு செல்கின்ற சூட்கேசைத் திறந்து அதற்குள் பார்சலை அவிழ்த்து நடக்கும் விளையாட்டு. பிறகு அடுத்த ஆளுக்கு சூட்கேஸ் நகரும். பிறகு 'டேய், எனக்கும் கொஞ்சம் வையுங்கோடா' என்று கூக்குரலிட வேண்டி வரும்.

★ ★ ★

இந்தக் குரக்கன் பிட்டுத் தான் அரிசிக்கு முன்னதாக என் முன்னேரால் பயன்படுத்தப்பட்டது. பிற்காலத்தில், குரக்கனுக்காக காணி வித்தவர்கள் என்று எனது முன்னேர்களை திட்டுவதுண்டு. அந்தக் காலத்தில் இருந்த காணிகளை நயினர்கள் குரக்கன் கொடுத்தே தங்கள் பெயருக்கு எழுதிக் கொண்டதாகவும் இதனல் பின் நாளில் எமது பரம்பரை கஷ்டப்பட வேண்டியதாகவும் ஐதீகம். அந்தக் காலத்தில் குரக்கன், தினை, சாமி (சாமை), இறுங்கு என்று தானியங்கள் தான் பயன்பட்டு வந்தன. நவதானியங்களில் மிச்ச தானியங்கள் எவை என்று எனக்குத் தெரியாது. இதில் தினைச் சோறு சாப்பிட்டிருக்கிறேன்.

இந்த குரக்கனில் இரும்புச் சத்து நிறைய இருப்பதாக சொன்னுர்கள். குரக்கன் பிட்டு சாப்பிடும் போது அதன் கோதின் நார்த்தன்மை கடிபடும் போது இரும்புச் சத்து இருப்பதால் தான் அப்படி இருக்கிறது என்று அந்த நேரத்து 'விஞ்ஞான அறிவு' சொன்னது. அந்தக் காலத்து இளந்தாரிகளின் வீரியத்தை அவர்கள் குரக்கன் பிட்டு சாப்பிடுகின்ற அளவைக் கொண்டு அளந்திருக்கிருர்கள் போலும். கியூறியஸின் பேரனுர் சொல்லும் போது 'அவன் அந்தக் காலத்தில முண்டு நீத்துப் பெட்டி குரக்கன் பிட்டும் ஒரு சட்டி மரவள்ளிக் கிழங்கும் சாப்பிடுற இளந்தாரி' என்பார்.

★ ★ ★

வீட்டே நிரு பிராண்ட் குரக்கன் மாவைக் கொண்டு வந்தால் அபிதகுஜாம்பாளுக்கு குரக்கன் பிட்டு அவிக்கத் தெரியாது. நல்ல காலம்.. பிறகு 'முண்டு நீத்துப் பெட்டி பிட்டுக்கும் ஒரு சட்டி மரவள்ளிக்குக்கும்' நான் எங்கு போவது? மற்ற பிட்டு வகைகள் போலன்றி இதற்கு தேங்காய்ப் பூ போட்டு அவிப்பதில்லை. வெறுமனே அவித்து தேங்காய்ப் பூவை பின்னர் பனங்கட்டி போன்றவற்றுடன் சேர்த்து கலந்து சாப்பிடலாம். மாக் குழைக்கும் போது கூட சட்டி ஒன்றுக்குள் மாவைப் போட்டு கைகளால் பிசைந்து சுற்றும் போது சிறு மணிகளாகும்.

★ ★ ★

பிட்டு அவிக்கும் ஆச்சிக்கு எடுபிடி வேலை செய்வதில் கியூறியஸ்க்கு தனிக் குஷி. காரணம்.. அந்த நீத்துப் பெட்டியில் நுனியில் கூம்பு வடிவில் இருக்கும் பிட்டைச் சாப்பிடுவதற்காக. . அதைச் சாப்பிட்டால் வளர மாட்டாய் என்ற பயமுறுத்தலையும் மீறி.. சில நேரங்களில் குழல் பிட்டு அவிக்கும் போது குழைத்துத் தந்து விட்டு ஆச்சி வேறு அலுவல் பார்க்கச் சென்று விடுவார். ஒரு நாள் பிட்டையும் தேங்காய்ப் பூவையும் மாறி மாறிப் போட்டுக் கொண்டிருந்தால்... போட்டுக் கொண்டே இருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவைக் காணேம். பிறகுதான் தெரிந்தது அடியில் போடுகின்ற 'பறண்' போடப்படவில்லை என்பது.

★ ★ ★

குரக்கன் மா பிட்டுக்கு மட்டுமன்றி, கூழ் காய்ச்சவும் பயன்படுவது. களி கிண்டவும் பயன்பட்டது. தேங்காய்ப்பாலும் சீனியும் விட்டு சமைக்கும் போது அதன் ருசி தனியானது. பிற்காலத்தில் பணப்பயிர்களான உருளைக்கிழங்கு, மிளகாய், முந்திரிக் கன்று போன்றன வந்ததன் பின்னர் குடாநாட்டில் குரக்கன் போன்ற தானியங்கள் அபூர்வமாகவே பயிரிடப்பட்டன. காட்டுப் பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கைகளின் போது இவை பயிரிடப்பட்டன. லாபம் கிடைக்காத எதையும் யாழ்ப்பாணம் செய்யாதே.

★ ★ ★

குரக்கன் பிட்டோடு மரவள்ளிக்கிழங்கு சாப்பிடுகின்ற அளவுக்கு கியூறியஸ் 'இளந்தாரியாக' அப்போது இருக்கவில்லை. மரவள்ளிக் கிழங்கு தான் யாழ்ப்பாணத்தில் ஏழைகளுக்கு அதிகமாகப் பயன்படுகின்ற பொருள். கள்ளுக்கொட்டில்களில் பத்துச் சதத்திற்கு மரவள்ளிக் கிழங்கும் மாசிக்கருவாட்டுச் சம்பலும் வாங்குவதற்காக கியூறியஸ் செல்வதுண்டு. வெறும் மிளகாயினுல் செய்த சம்பல் கிழங்குடன் சாப்பிட சுவைப்பதுண்டு. சிறு துண்டாக வெட்டிய தண்டுகளை நட்டு பெருமரமாய் வரும் மரவள்ளி எழுபதுகளில் தட்டுப்பாட்டு காலங்களில் எத்தனை குடும்பங்களின் பசி தீர்த்தது? குரக்கன் பிட்டு போன்றே இதற்கும் வரலாறுகள் உண்டு. அந்தக் காலத்தில் மரவள்ளிக் கிழங்குடன் இஞ்சிச் சம்பல சாப்பிட்டதாகவும் பிற்காலத்தில் அப்படிச் சாப்பிட்டவர்கள் இறந்து போனதாகவும் பழைய தலைமுறை வழமை போல் திட்டிக் கொள்ளும். அதற்கு காரணமாக கலி காலம் அல்லது தற்போது பாவிக்கப்படுகின்ற கிருமிநாசினிகள் என்ற 'விஞ்ஞானபூர்வமான' உண்மையை சொன்னுர்கள்.

மரவள்ளிக் கிழங்கு அவிக்கும் போது வேட்டைத் தண்ணீர் என்று ஒரு கலவை காய்ச்சுவார்கள். உங்களில் பலர் அதை ருசித்திருக்க மாட்டீர்கள். வெறுமனே காய்மிளகாய், சிறியமீன் போன்றவற்றைப் போட்டு உப்புக் கலந்து அவிப்பார்கள். அதை குடித்துக் கொண்டே சாப்பிடுவது ருசியானது.

★ ★ ★

மரவள்ளி இங்கே வரும் போது மெழுகு பூசி வருவதைப் பார்ப்பீர்கள். திறந்துவைத்தால் விரைவில் நஞ்சூறக் கூடியது. அதன் தோலுக்கும் கிழங்குக்கும் இடையில் ஏதோ ஒரு சயனைட் ரக இரசாயனப் பொருள் இருப்பதாகவும் இதுவே நஞ்சூறக் காரணம் என்றும் எங்கோ வாசித்த நினைவு. மரவள்ளிக் குழை கூட ஆடு மாடுகளுக்கு கொடுப்பதில்லை. மரவள்ளித்தோலைச் சாப்பிட்டு நோய் வாய்ப்படுகின்ற மாடுகள் உண்டு.

மரவள்ளித் தோட்டங்களைக் கண்டால் அதன் இலையைப் பிடுங்கி தண்டை விரல் நுனியில் வைத்து சுழற்றுவதில் ஒரு இன்பம் உண்டு. மரவள்ளியைச் சுட்டு உண்ணும்போது ஒரு ரகமான ருசி இருக்கும்.

மரவள்ளி ஒரு வகையில் வானம் பார்த்த பயிர்தான். நீரிறைக்க பணமில்லாததால் வெறும் மழையை மட்டுமே நம்பி மரவள்ளி நடுகின்ற ஏழை விவசாயிகள் உண்டு.

★ ★ ★

தற்போதைய பொருளாதாரத் தடையால் தற்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் இந்த தானியங்கள், மரவள்ளிக் கிழங்கு என்பன அத்தியாவசியமாகிப்போய்விட்டன. முன்பு வெண்காயமும், மிளகாயும் பயிர் செய்த தோட்டங்கள் எல்லாம் கொழும்புக்கு அனுப்ப முடியாததால் இந்த பயிர்ச் செய்கையில் இறங்கியிருக்கின்றன. யாழ்ப்பாணம் பணப்பயிர்களைக் கைவிட்டு வானம் பார்த்த பயிர்ச் செய்கையில் இறங்கியிருக்கிறது. காலத்தின் கட்டாயம் இது.

★ ★ ★

புலிகளும் இந்த சூழ்நிலையில் பெரிய ஆய்வுகள் நடத்தி இந்த பயிர்ச் செய்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிருர்கள். எனக்கென்னவோ, நாங்கள் இப்போது 'அடிப்படைகளுக்கு' திரும்பிக் கொண்டிருப்பதாகவே படுகிறது. மேல் நாட்டில் நீராவியில் கப்பல் விடுருன், றெயின் விடுருன். நம்ம நாட்டிலே 'குரக்கன்' புட்டவிக்கிருன். பின்நோக்கிய எங்கள் பார்வை எப்போது முன்நோக்கி செல்லுமோ? உணவுற்பத்தியில் தன்னிறைவு

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்திஞல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
**Georgicka communications**
**P.O.Box 1031, Station "F",**
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

**உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.**

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),
TORONTO, ONT. M6K 1M4

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903




## ANTONY BROTHERS FASHION HOUSE

சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
லங்காரப் பொருட்கள்
த்தும் மலிவு விலையில்
ற்றுக் கொள்ள

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SIVA'S TRADING CO LTD
321-2739

ஸ்காபரோ நகரின்
தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப்
பொருட்களும்
மலிவுவிலையில்**

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

---

## P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

சகல புதிய, பழைய தமிழ்,
இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99